# மணிமங்கலம்




60

## மணிவிழா மலர்

1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“கற்றாலும் நீடூழி கழித்தாலும்
கழியாத கரையில் வாழ்வு
பெற்றாலும் முருகனடிக் கன்புபெறா
தவருலகிற் பிறவி தீரார்
இற்றாலும் கலிநலிய இரந்தாலும்
பேதையராய் எழுத்தா றுள்ளத்(து)
அற்றாலும் அவனிருக்கும் செந்திலென்றார்
முக்திலென்றும் அடைவர் தாமே”

(திருச்செந்திற் கலம்பகம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி விழாக் காணும்

க. பாலசுப்பிரமணியம் தம்பதிகளின்

# மணி மங்கலம்



வெளியீடு -

பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்க

அன்பர்கள்

1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

# தோரண வாயில்

மணியான மனிதருக்கு மங்கலம் காண வந்திருக்கும் நல்நெஞ்சங்களே ! அனைவரையும் இருகரம் கூப்பி அன்புடன் வருக ! வருக ! என மலரின் முன்றிலில் நின்று வரவேற்கின்றோம்.

*"செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க*
*செய்யாமை யானுங் கெடும்"* என்பது வள்ளுவம்.

இன்று 'நாம்' என்பது குறுகிய 'நான்' எனும் வட்டத்துள் வாழ்கின்றோம்.

பொதுநலம் குன்றி சுயநலமே தலையோங்கி நிற்கின்றது.

தன் உதரத்தை மற்றவனின் உதிரத்தால் நிரப்புவதற்கும் மனிதன் தயங்குவதில்லை. மனிதநேயம்.... பண்பாடு.... கலாசாரம்... விழுமியம் என்பவைகளெல்லாம் வெறும் ஏட்டளவில் நிற்கும் காட்சிப் பொருளாகி விடுமோ .... என்ற கலக்கம் கற்றவரிடையே காணப்படுகின்றது.

இந்நிலையில் சமய சமூகப் பணிகளையே தனது மூச்சாகவும், பேச்சாகவும் கொண்டு அரிய பெரிய சாதனைகளை அநாயாசமாகச் செய்து முடிக்கும் ஒரு உழைப்பாளி, சோதனைகளையே சாதனைகளாக்கிய ஒரு முயற்சியாளன், இனிய மொழியால் இளைஞர்களை தன்பால் ஈர்த்து நல்லாற்றுப்படுத்திய... ஒரு தொண்டன்.

ஆம்.. இவைகளின் ஒட்டுமொத்த உருவம் தான். 'பாலா' என்றழைக்கப்படும் பாலசுப்பிரமணியம்.

இவ்விழா .... உழைப்பிற்கு ... முயற்சிக்கு... தொண்டிற்கு கட்டியம் கூறும் விழா. தனிமனித விழாவல்ல.

வாருங்கள்......... ஒன்றிணைவோம்.

*நன்றியுடன்*
வசந்தா வைத்தியநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தர்



மண்ணின்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே

*(மூன்றாந் திருமுறை)*

# ஆசியுரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
முந்நாள் பிரதமகுரு

# மணிவிழா வாழ்த்துச் செய்தி

நா. மகாதேவ குருக்கள்



கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நான் பிரதம குருவாக இருந்த காலத்தில் திரு. க. பாலசுப்பிரமணியம் எனக்கு அறிமுகமானர். அல்லும் பகலும் அனவரதமும் இறைபணியில் சலிப்பின்றி ஊக்கத்துடன் ஈடுபட்ட தொண்டன் திரு. பாலசுப்பிரமணியம் ஆவார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என தனது தொழில், தனது உடல் நலம் அனைத்துக்கும் மேலாக இறைபணியையே அவர் தனது முழு மூச்சாகக் கொண்டிருந்தார். கோபுரத் திருப்பணிச் சபை, தேர்த் திருப்பணிச் சபை ஆகியவற்றின் காரியதரிசியாக இருந்து அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. அத்தகைய இறைப்பணிச் செம்மல் திரு. பாலசுப்பிரமணியத்தின் சஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு மணிவிழா சபையினர் மலர் ஒன்றினை வெளியிட இருப்பது பாராட்டுக்குரியது. இம் மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியினை அனுப்புவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். சிவத்தொண்டன் திரு. பாலசுப்பிரமணியம் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் நலமாய் வாழ்ந்து, தொடர்ந்தும், இறை தொண்டு புரிய எல்லாம் வல்ல எம்பெருமான் கொம்பனித் தெரு முருகன் திருவருள் பாலிப்பாராக.

*மணி விழா நாயகனுக்கு*

*எனது வாழ்த்துக்கள், ஆசிகள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
கொழும்பு - கொம்பனித்தெரு

**அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்**
**අරුල්මිහු සිවසුප්පරමණිය සුවාමි කෝවිල්**
**Arulmihu Sivasubramaniya Swamy Kovil**

Bankers : Hatton National Bank Ltd. Colombo-10.
Indian Overseas Bank Colombo-1.
T.Phone : 432225

131, Kew Road,
Colombo 2.
22nd Oct 1999

உ

முருகனருள் பெருக!

# என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே!

## சந்திர சேகரக்குரு



தேச முவக்க திருத்தொண்டு சிவத்தொண்டு பஜனைத் தொண்டு பாசமுடன் பல பதிகள் சென்று பாங்காக அரும்பணிகள் செய்தும் மாசிலா மனத்துடனே மாவேற்கைத் திருமுருகன் கோவில் கொம்பனி வீதியிலே கோபுரமும் ஆலயமும் மிளிரக்காலம் தவறாது கற்றார் உற்றார்களைக் களிப்புடனே கண்டு பெருந்தொண்டு செய்து மருந்துண்டு மனம் வாடித் தேர் தொண்டு செய்து தெருவீதி வலம்வரவே பொருள் கொள்வாரைக் கண்டு அருந்தங்க முடி கொண்டு பெருந்தே ரேறியே பெருமை தர சிவசுப்ரமணியன் அருள் சுரக்க அன்பர்கள் அணிசேர்ந்து அதிசயித்தார். செல்பிறப்பின் புண்ணியமே யிப்புனித தொண்டினை ஊக்குவிக்க இப்பிறவி பெரும் பயனைத் தந்ததுவே தொழில் பாராச் சுற்றம் பாராத் தொண்டு செய் பெரும்பணியே வாழச் செய்கின்றார். கைலைபுகும் வழியும் கண்டார் பொருளுடையோர் கல்வியுடையோர் பொதுத்தொண்டு செய்வோர் மொழி வளர்த்தோர் மகேஸ்வர பூசை செய்வோர் உலகம் போற்றும் பெரியோராவார்.

ஆக சென்ற பிறப்பின் புண்ணிய நெஞ்சமே நற்புனித தொண்டினை செய்யத்தூண்டியது. பாலசுப்பிரமணியம் அவர்களைப் பத்து வருடங்களாக எனக்குத் தெரியும் உத்தியோகத்திற்கும் போகாமல் இருந்த நாட்களும் உண்டு. காலம் தவறாது கொம்பனி முருகன் ஆலயத்தில் வந்து தொண்டு செய்வது தவறாது வாழ்நாளையே முருகன் தொண்டின் அர்ப்பணித்திருக்கிறார் எனவே மணிவிழா கொண்டாட முருகனருள் எல்லார் நெஞ்சிலும் உந்து விளைய அமைந்தது. மகிழ்ச்சியுடன் இன்னும் பல்லாண்டு காலம் பணியினைத் தொடர முருகனைப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
கொழும்பு - கொம்பனித்தெரு

**அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்**
**අරුල්මිහු සිවසුප්පරමණිය සුවාමි කෝවිල්**
**Arulmihu Sivasubramaniya Swamy Kovil**

Bankers : Hatton National Bank Ltd. Colombo-10.
Indian Overseas Bank Colombo-1.
T.Phone : 432225

131, Kew Road,
Colombo 2.
22nd Oct 19.99

# பூர்வ புண்ணிய பயன்

பிரதமகுரு சிவஸ்ரீ இராமநாத விஜயகுமாரக் குருக்கள்
சிவாஹம கிரியா சிரோத்தினம்
சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கொம்பனித்தெரு



கொழும்பு கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் முன்னாள் அறங்காவலர் சபைச் செயலாளர் என்ற வகையில் திரு. க. பாலசுப்பிரமணியம் J.P. அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவை முன்னிட்டு அவர் முருகப் பெருமானுக்கு ஆற்றிய தொண்டும் பணிகளும் தொண்டரோடு ஆலயத்தில் தொண்டனாக இருந்து . இரவு பகலாக அரும் பெரும் பாடுபட்டும் முருகனின் திருநாமத்தில் பாலசுப்பிரமணியம் என்ற நாமத்துடன் பூர்வ புண்ணியமாக பூமியில் வந்துதித்து அவன் ஆலயத்தில் இப்பெரிய சேவைகளை எல்லாம் ஆற்றி அடியார்களின் மனதில் பக்திபரவசம் ஊட்டி பஜனைகள் புரிந்து திருவிழா காலங்களில் பெரும்பாடு பட்டு உழைத்த மகான் திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு கொம்பனித் தெரு சிவசுப்பிரமணிய பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து அவருக்கும் அவர் குடும்பத்தினரும் பெருவாழ்வை நோய் நொடியில்லாமல் நூறாண்டு காலம் வாழ்ந்து உலகத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கி வரும் அவரின் அறுபதாவது ஆண்டு (சஷ்டியப்த பூர்த்தி) மிச சிறப்பாக நடை பெற எனது ஆசிகள் உரித்தாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sivo Sri S. KUNCHITHAPATHA KURUKKAL

SRI PONNAMBALAWANESWARAR THEVASTHANAM

# நிறைகுடம்

குஞ்சிதபாதக் குருக்கள்



சைவமும் தமிழும் சிறக்க உழைத்த ஒருவருக்கு 60 வயது பூர்த்தியை முன்னிட்டு மணிவிழா எடுக்க முன்வருவது என்றால் அவர் எல்லோர் மனதிலும் நிறைந்து விளங்குகிறார் என்பதே காரணமாகும். திரு. க. பாலசுப்பிரமணியத்தை அறியாதவர்கள் யாருமிலர். கொம்பனித் தெரு முருகன் தொண்டையும் சைவமுன்னேற்றச் சங்கத்தின் பணியையும்ட ஒருக்காலும் மறவாது இடையறாது சேவை செய்து வருவது அவரது தினசரி நடவடிக்கை. ஒருகால் தன் உத்தியோகம் நின்றபோதும் அவர் முருகன் பணியைவிடவில்லை. முருகனே சோதிக்கச் செய்தாரோ என்னவோ பழையபடி அவரது வேலை அவருக்கு தானாகவே முருகனருளால் கிடைத்தது. ஆனால் திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களோ வேலை போன போதும் சரி. திரும்ப வந்த போதும் சரி எவ்வித சலனமுமின்றி முருகன் தொண்டை விடவில்லை. ஏனைய கோயில்களில் ஏதாவது தொண்டு தேவை ஏற்படினும் வந்து செய்வார். இப்படிப்பட்ட தொண்டன் நீடுழி வாழ்ந்து கடவுளுக்கும் பொதுப்பணிகளுக்கும் தன்னை ஈடுபடுத்திவாழ வேண்டும் சமயம், பஜனை. சைவம் சிறக்கவேண்டுமென எல்லாம் வல்ல ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரனை வேண்டி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*மேன்மை கொள் சைவநீதி*
*விளங்குக உலகம் எல்லாம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் யொன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணை கூர்முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய.

ஓம்

முருகா

# செந்தில் ஆண்டவன் துணை



*பிரதிஷ்டா சிரோண்மணி*

சாமி விஸ்வநாதக்குருக்கள் குடும்பத்தினர்,

சிவாச்சார்யதுரந்தரர், கிரியாகலாநிதி, சுவானுபூதி, சிவாச்சாரியசக்கரவர்த்தி

*பிரான்ஸ் நகர்.*

திருவருளும் குருவருளும் நிறைந்த தர்மகுணசீலன் ஆலய அறப்பணிச் செம்மல் தமிழுக்கும் சைவசமயத்திற்கும் பெரும் சேவையாற்றிவரும் உயர்திரு "பாலசுப்பிரமணியம்" தம்பதிகளின் அரும்பெரும் ஆத்ம பணியையும் எம்பெருமான் முருகன் மீது அளவுகடந்த பக்தியும் பெரியார்களின் அன்பும் ஆசியும் பெற்று எல்லாம் வல்ல ஸ்ரீ கொம்பனித் தெரு ஞான முருகன் கும்பாபிஷேக திருப்பணி செம்மலாக விளங்கிய அவருக்கு நல்லருள் ஆசியுடன் சகலநலங்களும் பெற்று சீரும் சிறப்புடன் தேக சௌக்கியத்துடன் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்க என அன்புடன் வாழ்த்துகின்றேன் மேலும் தமிழுக்கும் சைவசமயத்திற்கும் தொண்டாற்ற எல்லாம் வல்ல முருகப் பெருமானின் ஆசி கிடைக்க வேண்டுகின்றோம்.

"முருகன் அருளால் நீடுழி வாழ்க வளர்க தெய்வப் பணி"

*06. 10. 1999*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்
Sri Nagulambika Sametha Sri Naguleswara Swamy Temple

Sivasri K. Naguleswara Kurukkal
GOVERNING AUTHORITY & CHIEF PRIEST
Naguleswaram, Keerimalai,
Kankesanthurai, Sri Lanka.

சிவஸ்ரீ கு. நகுலேஸ்வர குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம், கீரிமலை,
காங்கேசன்துறை, ஸ்ரீலங்கா

# தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே

சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்
*ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில் கீரிமலை*

தொண்டினையே தம் வாழ்நாள் முழுவதும் இலட்சியமாகக் கொண்டவர் சிவத் தொண்டன் கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள். தொண்டின் பெருமையால் சிவத்தொண்டன் சைவப்புரவலர் சிவ நெறிச் செல்வர், சிவநெறிச் செம்மல், இறைபணிச் செம்மல் முதலாய பட்டங்களையும் பெற்றவர். அவ்வாறு பாராட்டுப் பெற்றுச் சிவ நெறியில் நின்று தொண்டாற்றி வருபவர்.

நல்லைக் கந்தன் எழுந்தருளிய நல்லூரில் பிறந்தவர். கொழும்பிலும் கொம்பனித் தெரு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத் தொண்டோடும் தம்மைப் பிணைத்துக் கொண்டவர். அவரது தொண்டு (30 ஆண்டுகாலமாக) சைவ முன்னேற்றச் சங்கச் செயலாளராக, தர்மகர்த்தாச் செயலாளராக, சமூக சேவனாக, சைவசமயப் பாதுகாவலனாக, சிவநெறி ஒழுக்க சீலனாக, செந்தமிழ்ச் செம்மலாக உயர்ந்து நிற்கின்றது. இத்தகைய உயர்வைக் கொழும்பு – கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் இராஜ கோபுரமும் தங்கத்தேரும் இன்று எடுத்துக் காட்டுகின்றன; அவை அவ்வாறே என்றும் எடுத்துக்காட்டுவனவாக. அவரது இடைவிடாத பன்முகச் சமய சமூகப் பணிகள் மணிவிழாக் கண்டும் தொடர்வனவாக அவரது சஷ்டியப்த பூர்த்தியையிட்டு மணிவிழாச் சபையினர் வெளியிடும் மலருக்கு எமது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் அளிப்பதில் அளவிறந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

வாழிய பல்லாண்டு வளம்பல பெற்றே
ஆழிசூழ் உலகில் அளப்பெரும் தொண்டால்
ஊழி தோறும் உலகெலாம் உயர்க
வாழிய மணிவிழா மங்கலம் பொங்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நண்பர்களின் உரைவிடம்

பிரம்ம ஸ்ரீ பா. ஷண்முகரத்ன சர்மா ஜே. பி.

திரு. கந்தையா பாலசுப்பிரமணியம் ஜே. பி. அவர்கள் ஓர் சிறந்த இறைபணியாளர். கதியாகவே கந்தனைக் கொண்டாடி, சிந்தையில் நிதமும் முருகனையே தொழுபவர். இவரை யான் மிக இளம் வயதிலிருந்தே நன்கு அறிவேன். இவரின் தந்தையார் கந்தையா ஆசிரியரும் ஒரு சிறந்த சிவதொண்டர்.

இவரது திருமணக் கிரியைகளை யானே செய்து ஆசீர்வதித்தேன். அவரது பாரியாரும் பத்தாவிற்கு ஏற்ற பதிவிரதையாக, அவர் ஆற்றும் நற்பணிகளுக்கெல்லாம் உறுதுணையாக இருந்து குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நற்பணி ஆற்றிவருகின்றார்.

திரு பாலசுப்பிரமணியம் அவர்கள் 13. 10. 1999 அன்று சஷ்டியப்த பூர்த்தியடைவதையிட்டு அவரின் அன்பர்களும் நண்பர்களும் எடுக்கும் "மணிவிழா" மிகவும் சிறப்புற நடந்தேற அன்புடன் வாழ்த்துகிறேன்.

மதிபோல ஒளியுற்ற புகழ் நெடுங்கரமுடைய ஸ்ரீ பால செல்வ விநாயகர் அருளால் எவ்வித விக்கினமுமின்றி, இன்றுபோல் என்றும் திரு பாலசுப்பிரமணியம் தம்பதிகள் இனிதே சிவதொண்டு செய்து, தமிழுக்கும் சைவத்திற்கும் பெரும்பணி ஆற்ற வேண்டுமென அவாவுறுகிறேன்.

அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமியே துணையென்று உறுதியாய் நம்பி பக்தனாயிருந்து அவன் பாதமே சாட்சியாக இறைபணி புரியும் திரு பாலசுப்பிரமணியம் தம்பதிகளை பாரதனில் உள்ளளவும் சகல பாக்கியங்களும் பெற்று பாங்குடன் வாழ எனது மனமார்ந்த ஆசிகளை வழங்குகிறேன்.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தன்னிகரற்ற சேவையாளர்"

கயிலை இராம நாகநாதசிவம் குருக்கள்

இறைப்பணிச் செம்மல் திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களது மணிவிழா அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றோம். தன்னலம் கருதாது சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் அவர் ஆற்றிவரும் பெரும்பணிகள் எழுத்திலடங்கா. அவர் மட்டுமல்லாது அவரோடு இணைந்து பலரும் இன்று இறைச்சேவையில் இமயங்களாக விளங்குவதை கண்டு பெருமையடைகிறோம்.

இலங்கை கொழும்பு மாநகரின் கொம்பனித் தெருவில் கலையழகோடு அருட்தென்றல் வீசக் கூடிய ஸ்ரீ வல்லீ தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் ஆலய பரிபாலன சபையில் நெடுங்காலம் அறப்பணியாற்றி முருகன் திருவருளை பரிபூரணமாக அடைந்த இவர்தம் மணிவிழா அருளாளர்களின் அருளாசியோடும் அறிஞர்களின் தமிழாசியோடும் மணம் கமழும் என்பதில் ஐயமில்லை. உலகின் பல பாகங்களிலும் சமய சமுதாயச் சேவையினை பிரதானமாகக் கொண்டு எதிர்கால சைவசமய விண்மீன்களாகிறது இன்றைய சிறார்களுக்கு ஆன்மீக உணர்வை போதிப்பதில் தன்னிகரற்ற சேவை புரிந்துவரும் சைவ முன்னேற்ற சங்கத்தினது இணையற்ற தொண்டர்களில் ஒருவராக விளங்கிவரும் இவர் இதனூடாக பல நாடுகளுக்குச் சென்று சமயப்பணியாற்றி வந்துள்ளார்.

ஆன்மீகத்தில் அடியாராக, செந்தமிழில் அறிஞராக, அடக்கத்தில் அன்பராக, பதவியில் திறமையானவராக, செயல்திறன் வாய்ந்த செயலாளராக, அனைவருக்கும் நண்பராக விளங்கிவரும் இவருடைய இணையற்ற சேவைக்கு இவர்தம் துணைவியரான அம்பிகைமலர் அவர்களின் ஒத்துழைப்பு மிகவும் போற்றுதலுக்குரியது. இப்பிறப்பிலும் இல்லற வாழ்க்கையிலும் இறைவழிபாட்டிலும் 60 ஆண்டுகளை நிறைவு செய்யும் இவர் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து நோயற்ற வாழ்வும் நுடங்கா உடலும் நீடுவாழ் நாளும் நிலையான செல்வமும் பெற்று பேரானந்தமடைய வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை வணங்கி வாழ்த்தி மகிழ்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பூபால விநாயக் கோவில் பேலியாகொடை

# மக்களின் மனதில் இடம் பெற்றவர்

பிரதமகுருசாமி S. ஜெகநாத குருக்கள்
ஸ்ரீ பூபால விநாயகர் கோவில்



என்றும் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த (மணி மாஸ்டர்) க. பாலசுப்பிரமணியம் அவர்கள் கொம்பனி தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய ஒழுங்கு நெறியாளருக்கும் பேலியா கொடை ஸ்ரீ பூபால விநாயகர்க்கும் நற்பணிகள் புரிந்து தமிழையும் சைவத்தையும் வளர்க்க அரும் பெரும் பாடு பட்டு தனது அயராத செயல்பாட்டினால் சகலரும் முருகன் அருள் பெற மிகவும் உயரமான ராஜகோபுரம் அமைய தன்னால் இயன்ற முயற்சி செய்து சகல சைவ பெரும்மக்களும் ஏனைய மத மக்களும் வந்து இறைவனை வழிபட செய்த பெருமை சிறு பிள்ளைகள் தொடக்கம் பெரியார் வரையும் அன்புடன் பழகும் தன்மை பொருந்திய இறைபணி செம்மல் பாலசுப்பிரமணியம் மாஸ்டர் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ மனதார வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச இந்துமத குருபீடம்
ජාත්‍යන්තර හින්දු ආගමික ගුරුපීඨම්
**INTERNATIONAL HINDU RELIGIOUS GURU PEEDAM**
SRI LANKA (HEAD OFFICE)
90/22, Joseph Dias Lane, Blomendhal Road, Colombo -15. T.P. & Fax. : 527025
SRI SASTHA PEEDATHIPATHI
CHIEF ORGANAIZER :– DR. SRI IYAPPATHASAN SAMBASIVA SIVACHCHARYAR
(JUSTICE OF PEACE FOR ALL ISLAND)

சர்வதேச இந்துமத குருபீட ஸ்தாபக தலைவரும்,
இலங்கைப் பிராம்மண சமாஜத்தின் தலைவருமான
"சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி"
"சிவாகம கிரியா கலாநிதி"
**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**
(அகில இலங்கை சமாதான நீதவான்)

# "தன்னலங் கருதாத் தங்க மனத்தான்"



பணிவுடையன் இன்சொலன் ஆதல்
ஒருவற்கு அணி அல்ல மற்றுப் பிற.

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க எல்லோரிடத்திலும், பணிவோடும் அன்போடும் பழகி அனைவரின் உள்ளங்களிலும் தனக்கென ஓர் தனி இடம் கொண்டவர் "பாலா மாஸ்டர்" என்றழைக்கப்படும் சிவத் தொண்டர், சிவநெறிச் செல்வர்" திருவாளர். க. பாலசுப்பிரமணியம். J.P. அவர்கள்.

கொழும்புத்தலைநகரில் சைவமும், தமிழும் சிறந்து விளங்கவேண்டுமென என்றுமே பாடுபட்டுக்கொண்டிருப்பவர் பாலா மாஸ்டர்.

கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் பொதுச் செயலாளராகக், கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான அறங்காவலர் சபைப் பொதுச் செயலாளராகத் தொடர்ந்து பல ஆண்டுகள் ஆன்மீகப் பணிபுரிந்து அதன் மூலம் பல சாதனைகளைச் செயற்படுத்திய ஓர் செயல் வீரன் பாலா மாஸ்டர் என்றால் அது மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னலங்கருதாது நல்ல மனத்துடன் பல அறநெறிப்பணிகளைப் பல இன்னல்களுக்கு மத்தியிலும் கொம்பனித் தெரு முருகப் பெருமான் அருளால் திறம்பட நடாத்தி முடித்த சாதனையாளன் பாலாமஸ்டர் அவர்களுக்கு "மணிவிழா" என்ற செய்தி அறிந்து சந்தோஷமடைகிறேன்.

உலகில் பெரியது எது? என்று! ஔவையிடம் முருகப்பெருமான் கேட்க.

"தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"
என ஔவை கூறியதற்கிணங்க சிவத்தொண்டன் பாலா மாஸ்டர் அவர்களின் சமயப்பணி எத்தன்மையுடையது என்பதனை அனைவரும் அறிவர்.

கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் இரண்டு ஆண்டுகள் பிரதமகுருவாகவிருந்து பாலா மாஸ்டரின் சமயத் தொண்டினை நேரில் கண்டறிந்தவன் என்ற வகையில் அவரின் சிறப்பை கூறவேண்டியது எனது கடமையாகும்.

பாலாமாஸ்டர் அவர்களின் சமயப்பணிகளைப் பாராட்டி எமது அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடத்தின் ஏற்பாட்டில் 1988ம் ஆண்டு, முன்னாள் இந்து சமய கலாசார அமைச்சர். செல்லையா இராசதுரை அவர்களாலும், 1991ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மாண்புமிகு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களாலும் பாராட்டுப்பெற்ற பாலா மாஸ்டர் மணிவிழாக்கண்டு. தொடர்ந்தும் சமயப் பணி ஆற்றி பவளவிழாக்காண வேண்டுமென எல்லாம் வல்ல சபரிமலை ஐயப்பசுவாமியின் திருவருளைப் பிரார்த்தித்து எமது பரிபூரண அருளாசிகளை வழங்குகிறேன்.

வாழ்க பல்லாண்டு

தொடர்க சமயப்பணி

ஸுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி விழா காணும் பாலசுப்பிரமணிய தம்பதி வாழி வாழி

ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (துன்னையூர்)



சிரித்த முகமும் சிங்கார குரலும்
சீர்செய் சமய சமூக பணியும் தன்னுள்
வரித்த வள்ளல் பாலசுப்பிரமணிய தம்பதி
வளமாய் காணும் வாழ்வியல் அறுதில் செய்த
விரித்த செயல் யாவும் புவியார் அறிய வேண்டி
வியந்து சமய சமூக சங்கமெடுக்கும் மணி விழாவில்
சரித்திர புகழ் ஆசி பலதும் ஒருங்கே பெற்று என்றும்
சாந்தமாய் பாலசுப்பிரமணிய தம்பதி வாழி வாழி

பம்பரமாய் சுழன்று நின்று என்றுமே
பகல் இரவு பாராது பாரிய தொண்டுதனை
கொம்பனி வீதி முருகனுக்கு முக மலர்ச்சியோடு நீவீர்
கோலாகலமாய் புரிந்தே குடமுழுக்கு விழாவாற்றி
தம் சமய மொழி வளர தங்கத்தேர் வலம் வர வுழைத்தே
தரணியிலே சைவமுன்னேற்ற சங்கமதை அறம்காத்தே
எம் சமய புரவலராய், செம்மலாய், தொண்டனாய் என்றும்
ஏற்றமாய் பாலசுப்பிரமணிய தம்பதி வாழி வாழி

மங்களம் நிறைந்த வாழ்வியல் பெற்றிட
மருவி நின்றே மாட்சிகள் ஓங்கிட
பங்கயமாய் கொம்பனி வீதிவேலோன் அருள்தந்திட
பாரினிலே உம் சமய சமூக தொண்டு தொடர்ந்திட
இங்கிதமான இனிய ஷஷ்டிய பூர்த்தி நன்நாளிலே
இன்பங்கள் இதயத்தில் பூரணமாய் சுரந்திட
தங்ககுளம் நிறைந்த தரணிபோற்றும் தொண்ரரே – என்றும்
தளர்வின்றி பாலசுப்பிரமணிய தம்பதி வாழி வாழி

சுபமஸ்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பத்திரகாளிகாம்பாள் தேவஸ்தானம்
ශ්‍රී භද්‍රකාලිකාම්බාල් දේවස්ථානය
SRI BADRAKALIGAMBAL DEVASTHANAM
No. 61, 2nd Nawagampura,
New Kelani Brige Road,
Colombo - 14.

# வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறேன்
## பாலா தொண்டர் அவர்களை

சிவஸ்ரீ. கு. ல . மு. மோஹன் சர்மா
களிகாதாசன் தொண்டுமாமணி
*(ஆலய நிர்வாகியும் பிரதம குருவும்)*



நாடு போற்ற நலமே சைவமும் தமிழும் நன்னிரு கண்கள் எனப் போற்றி வாழும் தொண்டருக்குத் தொண்டர். என் அன்புடைய பாலசுப்ரமணியம் அவர்கள் இன்று அகவை அறுபதை காண்கின்றார். எனிதால் அது கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானின் திருவருளேயாகும். மேலைத்தேய நாடுகள் சென்று தன் சைவப் பணிகளால் உயர்ந்து மேன்மையான பட்டங்கள் தெய்வ அருளாசிகள் பெற்ற வள்ளல். இன்றும் இலங்கை வாழ்மக்கள் நன்கறிந்த ஈடில்லாத் தொண்டர். பொதுப்பணிகள் எங்கு தேவையோ அவையறிந்து அங்கு தன் தலயாய சபைப் பணியில் தொண்டு செய்து வரும் பெரியார். அகவை அறுபதைக் காணும் திரு. க. பாலசுப்பிரமணியம் என்றும் முருகன் திருவருளால் நீடு வாழ்ந்து ஈடு இணையற்ற சேவையைச் சைவர்கழுக்குச் செய்து வர எம்பெருமாட்டி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் துணைபல புரிந்தருளப் பிரார்த்திக்கின்றேன்.

(தசவருடங்களாக பல ஆலயங்களை ஒன்றிணைந்து தலை நகரில் எழுர்ச்சிமிகு பாற்குடம் ஏந்திய பாத யாத்திரையை தலைமை தாங்கி செய்வதே இணையற்ற தொண்டு ஈடில்லாத் தொண்டாகும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசர்



ஆலின்கீ ழறங்களெல்லா மன்றவர்க் கருளிச்செய்து
நூலின்கீ ழவர்கட்கெல்லா நுண்பொருளாகிநின்று
காலின்கீழ்க் காலன்றன்னைக் கடுகத்தா[illegible]ந்துபின்னும்
பாலின்கீழ் நெய்யுமானார் பழனத்[illegible]மனரே.

(நான்காந்திருமுறை)

# அருளுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RAMAKRISHNA MISSION
Ceylon Branch
40, Ramakrishna Road, Colombo 6

Phone: 588253
075 513805
Email: rkm@eureka.lk

5.10.99

# பணியின் பணிவு

சுவாமி ஆத்மகானந்தா
ராம கிருஷ்ண மிஷன், இலங்கை கிளை

திரு. கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு, எதிர்வரும் 24.10.99 அன்று மணிவிழா நடைபெற இருப்பதாக அறிந்து, அவர்களுக்கு எங்கள் நிறைவான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



தற்பொழுது இவர், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறங்காவலரும், துணைத்தலைவரும் ஆவார். இவர் இச்சங்கத்தின் பொதுப் செயலாளராகவும் முப்பது ஆண்டுகள் சேவை செய்துள்ளார். தவிர, இச்சங்கத்தின் நால்வர் மணிமண்டபம் அமையவும், தொண்டரணி, மாதரணி குழுக்களை அமைக்கவும் தனது பங்களிப்பைச் செய்துள்ளார். மேலும், கொழும்பு கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் அறங்காவல் சபையின் செயலாளராகவும் 1984ம் ஆண்டு முதல் 1998 ஜனவரி வரை பணியாற்றி உள்ளார். இக்கோயிலின் இராஜகோபுரத் திருப்பணிச் சபையின் செயலாளராகவும் இருந்துள்ளார்.

மேற்கூறப்பட்ட சேவைகளின் மூலம் இவர் மக்களது நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றுள்ளார்.

இவரது சேவைகள் மேலும் தொடர, இறைவனது திருவருளைப் பிரார்த்திக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

# "தோன்றிப் புகழொடு தோன்றுக"

### ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்

அன்பானவர்களுக்கு:-

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் 60 வது வயதை நிறைவு செய்வதையிட்டு மன மகிழ்ச்சி அடைகின்றோம். மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும் என்பது மனித தர்மமாகும் இத்தர்மத்தை மனிதன் தனதாக்கி கொள்வதற்கு தெய்வ சக்தியும் ஆத்ம பலமும் இன்றியமையாதது. இது அனைவருக்கும் கிடைப்பது [illegible]ரிது. ஆகையால் தான் தோன்றில்புகழோடு தோன்றுக. என்பது பொய்யா மொழி[illegible]கும். இப்பொய்யா மொழிக்கு இலக்காக வாழ்ந்து கொண்டிருப்பவர் திரு பாலசுப்பிர[illegible]ரியம் ஆவார். பழகுவதற்கு இனிமையானவரும் பார்ப்பதுக்கு எளிமையானவரும் எடுத்த காரியத்தை செவ்வனே ஆற்றும் திரு. பாலசுப்பிரமண்ியம் அவர்கள் சமய சமூக பணிகளில் தன்னை அர்ப்பணித்து தொண்டாற்றி வருவது யாவரும் அறிந்தது. பிறந்த நாட்டுக்[illegible] மொழிக்கும் சமயத்துக்கும் தொண்டாற்றுவதை மிக விருப்பமாக கொண்டவ[illegible] பனித் தெருவில் எ[illegible]ருளி இருக்கும் முருகப் பெருமான் மீது [illegible] கொண்[illegible] இவ்வா[illegible] அயராது உழைப்பவரும் கொழும்பில் [illegible] கலாச[illegible] கலந்து சிறப்பிப்பதில் தன்னிகர் இல்[illegible] இவரது பணிக்கு[illegible]துணையாக இருக்கின்ற மனைவியும் குழந்தைக[illegible] இவரை போன்று இன்[illegible] வராகவும் அவர் எடுக்கும் பணிக்கு [illegible]றுதுணையாக இருப்பதும் பாராட்[illegible]யதாகும். 60 வயதுவரை செய்த தொண்டுகளை தொடர்ந்து செய்வத[illegible]சுப்பிரமணியம் தம்பதியினர்களை இறைவன் ஆசிர்வதிப்பானாக. [illegible] மணிவிழாக்காணும் திரு. திருமதி [illegible] தம்பதியினர் இ[illegible] போல் என்றும் சமய சமூக பணிகளை நிறைவாக செய்ய இறைவன் ஆசிர்வதிப்பானாக

*வாழ்க வளமுடன்*

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "தன்னலமற்ற தொண்டன்"

## உலக சைவப் பேரவை தலைமைச் செயலாளர்
## தவத்திரு சிவநந்தி அடிகள்

*போற்றி ஓம் நமச்சிவாய சிவநலமே மலர்க,*



இன்றைய உலக சூழ்நிலையில், எமது பாரம்பரிய சைவமும், தாய்மொழியாகிய தமிழுமே எமது பண்பாட்டையும், வாழ்வியல் விழுமியங்களையும் பிரதிபலித்து, வழிகாட்டுகின்றன. இவற்றின் பாதுகாப்புக்காக இலங்கைத் தலைநகரில் தன்னலமற்ற சமய சமூகப் பணிகளில் முன்னின்று உழைத்துவரும் எமது பேரன்புக்குரிய சிவத்திரு க. பாலசுப்பிரமணியம் அவர்களின் மணிவிழா மலர் வெளிவருவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். பணிசெய்யும் தொண்டர்களை அவர்கள் இருக்கும் போதே சிறப்பித்து, மேலும் ஊக்குவிப்பது சைவத்தின் தனிச்சிறப்பு.

திரு பாலசுப்பிரமணிம் அவர்கள் மேலும் பல்லாண்டு இன்ப அன்போடு வாழ்ந்து சைவத் தமிழ்ப் பணிபுரிய தில்லைநடராசப் பெருமான் திருவடிகளை நினைந்து எமது அருளாசி வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது

சகோ. பப்டிஸ்த் குருஸ்

- திருக்குறள்-



திரு. க. பாலசுப்பிரமணியம் ஐயா அவர்களது சஷ்டியப்த பூர்த்தியையிட்டு நான் பெரிது மகிழ்ச்சியடைகிறேன். இதையிட்டு இறைவனுக்கும் மனமார நன்றியைத் தெரிவித்தும் கொள்ளுகிறேன். இப்பெரியாரின் தன்னலமற்ற சமய சமூகப் பணிகள் இன்னும் சிறந்தோங்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. க. பாலசுப்பிரமணியம் ஐயா அவர்கள் நம் சமுதாயத்திற்கு மட்டுமன்றி, சிவநெறிக்கும் செந்தமிழுக்கு செய்து வரும் அரும் பெரும் சேவைகள் நம் எல்லோருக்கும் தெரிந்ததே. இரவு பகலாக இவர் பல துறைகளில் பணிபுரிந்துள்ளார். அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் முன்னாள் அறங்காவலர் சபைத் செயலாளராய், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க அறங்காவலராய், துணைத்தலைவராய், முன்னாள் பொதுச்செயலாளராய் அளப்பெரிய சேவைகள் புரிந்துள்ளார். இவர் தலைமைவகுத்த கூட்டங்களில் நான் பங்குபற்றி இவருடைய தலைசிறந்த குணாதிசயங்களையும் திறமைகளையும் நான் ரசித்துப் பெருமைப்பட்டிருக்கின்றேன்

உலக உத்தமர் மகாத்மா காந்தியடிகள் ஒருமுறை கூறினார். "நான் மனித வர்க்கத்திற்குச் சேவை செய்வதன் மூலம், இறைவனுக்கு சேவை செய்கின்றேன் ஏனெனில் இறைவன் வானத்திலுமல்ல, பூமியிலுமல்ல, பாதாளத்திலுமல்ல........... எந்த உள்ளத்தில் அன்பிருக்கின்றதோ, பண்பிருக்கின்றதோ, பாசம், நேசம், மன்னிருக்கு மனப்பான்மை இருக்கின்றதோ, அந்த உள்ளத்திலே இறைவன் வாசம் செய்கின்றார்."

"பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கின்றார்
அவர் கருணையுள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கின்றார்."

என்று கவிஞர் கண்ணதாசன் அழகாகக் கூறியுள்ளார்.

ஆகையினால், நம்மால் இயன்ற பணிகளையும், சேவைகளையும், மானிட வர்க்கத்திற்கு நாம் ஓயாது செய்ய வேண்டும். இதற்கு திரு. க. பாலசுப்பிரமணியம் ஐயா அவர்களது சேவைகள் ஒரு எடுத்துக் காட்டாக இருக்கின்றன. திரு. க. சுப்பிரமணியம் ஐயா அவர்களையும், அவரது அன்பார்ந்த குடும்பத்தையும் இறைவன் என்றென்றும் ஆசிர்வதிப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்



முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கர்
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே!
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா ! பழையனூர்மேய
அத்தா ஆலங் காடாஉன் னடியார்க் கடியேன் ஆவேனே

*(ஏழாந்திருமுறை)*

# வாழ்த்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டுநெறியே சைவநெறி

திருக்குமார் நடேசன்



'தொண்டு நெறியே சைவ நெறி' என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர் இன்று மணிவிழாக்காணும் இறைபணிச் செம்மல் திருகந்தையா பாலசுப்பிரமணியம் J. P. அன்னார் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் அடிகளின் அருள்வாக்கினை தனது வாழ்வின் உன்னத குறிக்கோளாகக் கொண்டு இளம் பராயம் தொட்டு இன்று வரை சிவத் தொண்டும், சமூகத் தொண்டும் ஆற்றிவருகின்றார். அன்னாரின் 60 ஆவது வயது பூர்த்தியா வதையொட்டி வெளியிடும் மலருக்கு இச்செய்தியினை அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தலைநகர் கொழும்பில் கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் அழகு இராஜகோபுரத்தையும் இருமருங்கும் மணிக்கோபுரங்களையும் கொண்டு கம்பீர தோற்றத்துடன் மிளிர்வதற்கும், ஆண்டு தோறும் தேர்த்திரு விழாவன்று ஆறுமுகப்பெருமான் தங்கத் தேரில் ஆரோகணித்து பவனிவரும் தங்கத் தேரினை திறம்பட உருவாக்குவதற்கும் முன்னின்று அயராது உழைத்தவர் இன்று கோலாகலமாக அறுபதாண்டு பூர்த்தி விழாக்காணும் சிவநெறிச்செம்மல் பாலசுப்பிரமணியம் அவர்கள். அன்னார் மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது, எவ்வெவர்தீமையும் பாராது, செவ்வி அருமையும் பாராது, இறைநம்பிக்கையுடன் எடுத்துக் கொண்ட கருமமே கண்ணாக உழைத்ததின் காரணமாக அவர்தொட்ட பணிகள் அனைத்தும் துலங்கின

இவரின் சிவபணிகள் மேலும் மேலும் சிறக்கவும், மனைவிமக்களுடன் எல்லாச்சிறப்புக்களும் பெற்று பல்லாண்டு உடல் நலத்துடன் வாழவும், இன்றைய விழா சிறப்புடன் நடைபெறவும் கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் கோயில் கொண்டு அருள் ஆட்சி புரியும் முருகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

சிவதொண்டு செய்வோர் தீநெறிச் செல்லார்
சிவதொண்டு செய்வார் [illegible] செல்வார்
சிவதொண்டு செய்வார் [illegible]கார்
சிவ தொண்டு செய்வார் சிவமே [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
අරුල්මිහු සිවසුබ්‍රමණිය ස්වාමි කෝවිල්
Arulmihu Sivasubramaniya Swamy Kovil

# மணிவிழாக் கொண்டாடும் "மணி மாஸ்ரருக்கு"!
## - எனது இனிய வாழ்த்துக்கள் -

*கதிரேசு கனகசபாபதி*
(ஆலய நம்பிக்கை பொறுப்பாளர்)



தங்கள் அறுபதாவது அகவைப் பூர்த்தி விழா நடைபெறும் இத்தருணத்தில் இவ்வாழ்த்துச் செய்தியினை அளிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தாங்கள் பல்லாண்டுகளாக மக்களுக்குச் செய்துவரும் பொதுத் தொண்டுகள், சமயத் தொண்டுகள் அளப்பரியன: முக்கியமாகக் கொம்பனித்தெரு வாழ் மக்களுக்கு நீங்கள் செய்த சேவை அளவிட முடியாதது. கொம்பனித்தெரு வாழ் மக்கள் அனைவரையும் ஏழைகள், செல்வந்தர்கள் என்று பாராமல் சம நோக்கோடு சேவை புரிந்துள்ளீர்கள். ஏழை மக்களின் வாழ்வு மலரவும் அவர்கள் வாழ்வில் உயர்ச்சி பெறவும் பல வழிகளிலும் உதவி புரிந்துள்ளீர்கள்.

கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் முக்கிய ஸ்தாபகராக விளங்கி அச்சங்கம் மூலம் கொழும்பு கொம்பனித்தெரு வாழ் மக்கள் சகல வழிகளிலும் முன்னேற்றமடையச் செய்ததில் தாங்கள் முக்கிய பங்கு கொண்டு உழைத்துள்ளீர்கள் என்பதனை நான் நன்கறிவேன்.

மேலும் கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்ரமணிய சுவாமி கோவிலிலும் பல ஆண்டுகளாகத் தர்மகர்த்தா சபைச் செயலாளராகப் பணிபுரிந்து அயராது உழைத்துள்ளீர்கள். அங்கு வழிபட வரும் அடியார்கள் மனதில் நல்லெண்ணத்தை வளர்த்துள்ளீர்கள். தாங்களும் தங்கள் துணைவியாரும் குடும்பத்தினரும் நல்ல உடல் நலமும் உள நலமும் பெற்று நீண்ட காலம் வாழ்ந்து, மேலும் நல்ல சேவை செய்ய அருள வேண்டுமென அருள்மிகு முருகப் பெருமானின் திருவடியை இறைஞ்சுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SRI PONNAMBALAVANESWARAR DEVASTHANAM

88, Sri Ramanathan Mawatha,
Colombo - 13
Sri Lanka
Telephone : 431252

1999-09-30

# சமூகசேவகன்

திரு. க. பாலசுப்பிரமணியம் J.P. அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழா வெகு விமரிசையாக நடைபெறுவதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு தலைசிறந்த தொண்டன், சமூக சேவகன் ஆவார். இவர் கொழும்பு, கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் திருத்தொண்டில் அரும்பணியாற்றியவராவார்.

*அவரது இறைபணி மேன்மேலும் வளர்வதாக!*

1999. 09. 30

டி. எம். சுவாமிநாதன்
*அறங்காவலர்*
*பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka

# தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்

## அருட்செல்வர் உயர்திரு க. பாலசுப்பிரமணியம் அவர்களின் மணிவிழா


தங்கம்மா அப்பாக்குட்டி

சமாதான நீதிபதி தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.




கொம்பனித்தெரு என்று சொல்லுகின்ற போது அங்கு எழுந்தருளி அருள் பாலிக்கும் சிவசுப்பிரமணியப் பெருமானின் அருட்காட்சி எம்மவர் அகத்தில் என்றும் நீங்காது இடம் பெற்றிருக்கும். கருவறையும் வசந்த மண்டபமும், இராசகோபுரமும் பிரகாரமும் எமது உள்ளத்தை என்றென்றும் ஈர்க்கும் சக்தி வாய்ந்தவை. இதற்கெல்லாம் இணையற்ற தெய்வீகத் தொண்டை கடந்த பல ஆண்டுகளாக நிகழ்த்திய பெருமை சைவப்பெரியார் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு உண்டு. சைவமுன்னேற்றச் சங்கத்தின் உன்னத பணியாளனாக இருந்த சிறப்பை நான் நன்கு அறிவேன். அறிவு மேம்பாடும், பக்தி மேம்பாடும் ஒரு சேரப் பெற்ற மாமனிதர் ஆகையினால் கொழும்பு மாநகரிலும், இலண்டன் மாநகரிலும் இவருடைய திருநாமம் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

தனக்கென வாழாப் பிறர்க்குரியராய இப்பெரியாரின் மணிவிழா ஆண்டு இதுவாகும். இத்தகைய விழாக்களின் உந்துதலினால் எமது சைவ இளைஞர்கள் மத்தியில் ஒரு புத்தூக்கம் ஏற்பட இடமுண்டு. உயர்திரு பாலசுப்பிரமணியம் அவர்கள் செயல்வீரர்; சிறந்த திருத்தொண்டர்; பெரியோர்களை மதிக்கும் பெற்றி வாய்ந்தவர்; கருணை உள்ளம் படைத்தவர். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எமது மண்ணின் யுத்த அவலம் காரணமாக இடம்பெயர்ந்த பலாலி, மயிலிட்டி, கட்டுவன், காங்கேசன்துறை அகதிகளுக்கு வழங்கக் கூடியதான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை கொழும்பிலிருந்து கப்பல் மூலம் அனுப்பி வைத்த பெருங்கருணை உள்ளம் இவருடையது. அந்த நேரத்தில் எங்கள் கோயிலில் ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் தங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே மனிதநேயமும், பக்திமேம்பாடும் செயற்திறனும் கொண்ட பெரியார் பாலசுப்பிரமணியம் அவர்களை வாழ்த்திப் போற்றி நிற்பதோடு இன்னும் பல்லாண்டு காலம் அன்னார் நலமுடன் வாழ்ந்து நற்பணியாற்ற துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THIRU MURUGAN THUNAI

Phone : 431406 / 433881

# Sri Siva Subramania Swami Kovil

SERVED BY THE MANAGEMENT OF
The Thedchanathar Velalar Mahamai Paripalana Society Ltd.
(INCORPORATED)

Devasthanam Office:-
*No. 98, Gintupitiya Street.*

## பல்லாண்டு பல்லாண்டு வாழப் பிரார்த்திக்கின்றோம்

தேசபந்து விஸ்வப்பிரஸாதினி
வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை
*அகில இலங்கை சமாதான நீதவான், தர்மகர்த்தா*



திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களது சஷ்டியப்த பூர்த்தி விழாவை முன்னிட்டு மணிவிழாச்சபையினர் வெளியிடும் மலருக்கு எமது வாழ்த்து செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

மலர் வெளியிடும் ஆசிரியர்களான வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் ஜே. பி, கம்பவாரிதி இ. ஜெயராஜ் ஆகியோரும் போற்றுதலுக்குரியவர்கள்.

திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களை அறியாத இந்து பெருமக்கள் இருக்கமாட்டார்கள். கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் நெடுங்காலமாக அறங்காவலர் சபை செயலாளராக இருந்து வருகின்றார்கள் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க அறங்காவலர், துணைத் தலைவராகவும் தொண்டாற்றி வருகின்றார்கள்.

இன்னும் சிவதொண்டன், சைவப்புரவலர், சிவநெறிச் செம்மல், இறைபணிச்செம்மல் என்னும் பட்டங்களையும் அலங்கரித்துள்ளார்கள். யாழ்ப்பாணத்திலும், லண்டனிலும் கூட சைவப் பணி பெருகவும் தொண்டாற்றி வருகின்றமை பெருமைக்குரியது.

கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிக்கு தங்கதேர் செய்ய வேண்டும் என்று கடும் முயற்சி எடுத்து, இவரது காலத்தில் அதையும் நிறைவேற்றி வைத்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வண்ணம் சிவநெறி, செந்தமிழ், சமூக நலன் பெருக திரு. க. பாலசுப்பிரமணியம் உழைத்து வருவதை முன்னிட்டு சஷ்டியப்த பூர்த்தி விழாவுடன் நில்லாது நூற்றாண்டு விழாவும் சிறக்க வேண்டும். மேலும் நீடிய வாழ்வும் நிறைந்த செல்வமும், குடும்பச் சிறப்பும், கீர்த்தியும் பெற்று பெருவாழ்வு வாழ நமது ஜிந்துப்பிட்டி முருகப் பெருமான் திருவருள் புரிவாராக.

14. 10. 99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டாஞ்சேனை
ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோவில் அறங்காவலர்
தெ. ஈஸ்வரன்

# வள்ளுவன் வாழ்த்து வாழுகிறான்.



எல்லாமே எனக்கு எனக்கு என்று தேடுகிறான் மனிதன். இந்த அழகிய வீடா இது போன்று எனக்கு இல்லையே! ஓ இது போன்ற அழகிய கார் எனக்கு இல்லையே! நல்ல உடையா இதுவும் எனக்கு இல்லையே! மனித மனம் எல்லை இல்லாமல் ஆசைப்படுகிறது.

இதை வள்ளுவன் "ஆரா இயற்கை அவா" ஒரு போதும் நிரம்பாத தன்மையுடைய அவா என்று குறிப்பிட்டார்.

கண்ணதாசன் தனது பாடலில் "கையளவு மனசு வைத்தான் கடலளவு ஆசை வைத்தான்" என்று குறிப்பிடுவார்.

இப்படிச் சுயநலமே கண்ணும் கருத்துமாக இருக்கும் இவ்வுலகத்தில் பிறரைப்பற்றி சிந்திக்க எங்கே நேரம் இருக்கிறது. மற்றவர்களுக்கும் சில தேவைகள் இருக்கின்றன என்று எண்ணுகின்றவர்கள் நூற்றில் ஒருவர். இல்லை இல்லை ஆயிரத்தில் ஒருவர். இல்லை இல்லை லட்சத்தில் ஒருவர்.

மற்றவர்களுக்கு என்ன தேவை? என்ன இல்லை? எதை நாம் கொடுக்க முடியும் என்ற சிந்தனையில் வாழுகின்றவர்கள் மட்டுமே உயிர் வாழ்கிறார்கள் என்பது வள்ளுவன் வாக்கு.
"ஒத்ததறிவான் உயிர் வாழ்வான்".

நமது சுயநலமான ஆசைகளை திசைதிருப்பி பிறருடைய ஆன்மீக தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சிக்கக் கூடிய மிகச்சிலருள் திரு. பாலா அவர்கள் முன்நிலை வகிக்கிறார்கள். திரு. பாலா அவர்கள், பலவிதமான பிரச்சனைகளால் மனம் சலித்து துவண்டு கிடக்கும் நமது சமுதாயத்தை தட்டிக்கொடுத்து ஆறுதல் தருபவர். இதை செவ்வனே செய்ய ஆன்மீகத்தையும் கலையையும் உறுதுணையாகக் கொண்டு செயல்படுபவர்.

அவர் செய்யும் பணிகள் பலப்பல. குழந்தைகள் பால், மாணவர்கள்பால் மிகவும் அன்புடையவர். எல்லோர் உள்ளத்திற்கும் உணர்வுகளுக்கும் உணவிடும் வகையில் நம்நாட்டுக்கு வருகின்ற அனைத்துக் கலைஞரையும் அழைத்து நிகழ்ச்சி நடத்துவதில் வல்லவர்.

வள்ளுவன் வாழ்த்த வாழும் சைவப்பெருந்தகை திரு. பாலா அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு நோய்நொடி இன்றி, பெயருடனும் புகழுடனும் வாழ எங்கள் வரதராஜ விநாயகரைப் பணிந்து நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
ஸ்ரீ பூபால விநாயகர் கோவில்
ශ්‍රී භූපාල විනායගර් කෝවිල්

# மணிவிழ மலரட்டும்

அறங்காவலர் தி. செந்தில்வேள் J.P



மணிமாஸ்டர் என்று நாம் அன்புடன் அழைக்கும் திரு. க. பாலசுப்பிரமணிம் அவர்களுக்கு சான்றோர்கள் மணிவிழா எடுப்பதை அறிந்து அளவிலா ஆனந்தமடைகின்றேன். இவர் பேலியாகொடை ஸ்ரீ பூபாலவிநாயகர் – கொம்பனித் தெரு முருகப் பெருமான் – சபரிமலை ஐயப்பப்பசுவாமிகள் ஆகியோர் மீது அளவு கடந்த பக்தியுடையவர். கொம்பனித் தெரு ஆலயத்திலிருந்து கடந்த பத்து ஆண்டுகளாக ஆடிவேல் திரு விழாவின்போது ஆயிரக் கணக்கான அடியார்கள் பக்தியோடு பாதயாத்திரையாக பல்வேறு ஆலயங்களிலிருந்தும் மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் மூன்றும் ஒன்றிணைந்த பேலியாகொடை பூபாலவிநாயகர் கோவிலுக்கு வரும் பெரும் பணிக்கும், கொம்பனித் தெரு முருகப் பெருமானுக்கு 1993ம் ஆண்டு முதல் நடைபெறும் கொடியேற்றத் திருவிழாவின்போது "கொடிச் சீலையை" பூபால விநாயகப் பெருமானது பாதத்தில் வைத்துப் பூசை செய்து விக்கினங்கள் எதுவுமின்றி பிரமோற்ச காலத் திருவிழாக்கள் அனைத்தும் சிறப்புடனும் ஒழுங்குடனும் நடைபெற பிரார்த்தித்து எடுத்துச் செல்லும் செயலுக்கும்திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களும் உறுதுணையாய் பணியாற்றி வருபவர்களுள் ஒருவர் என்பதில் மகிழ்கின்றேன்.

அவர்களது மணி விழா சீரும் சிறப்புடனும் நிறைவுடன் நடைபெறவும், அவர் நற்பணி தொடரவும் அவர் பல்லாண்டு காலம் வாழ்வாங்கு வாழவும் ஸ்ரீ பூபால விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OM MURUGA

இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
LONDON SRI MURUGAN TEMPLE
Charity Registration Number: 271097
78, Church Road, Manor Park, London E12 6AF
Entrance via Browning Road
Telephone: 0181 - 478 8433 Fax: 0181 - 514 8947

# "பிறவி பெருமையுறுகின்றது"

சி. சம்பத்குமார் (தலைவர்)
இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

சிவத்தொண்டன், சைவப்புரவலர், சிவநெறிச் செம்மல், இறைப்பணிச் செம்மல் திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களது மணிவிழா அழைப்புமடல் கிடைக்கப் பெற்றோம் பெருமகிழ்ச்சி அடைந்தோம்.

இறை தொண்டிலும் இவ்வுலக வாழ் தமிழ் மக்களின் தொண்டிலும் ஈடுப்பட்டு தன்னலம் கருதாது சேவை புரிந்துவரும் இவர்தம் பெருமை உலகறிந்தது.

தாய்நாட்டிலும் பிறநாடுகளிலும் சைவமுன்னேற்ற சங்கத்தின் வாயிலாக ஆற்றிவரும் பணிகளால் இவர்தம் பிறவி பெருமை அடைகிறது. இவர்தம் மணிவிழா பலரும் போற்றும் வண்ணம் நடைபெற்று பெருமையுறவும் இறைப்பணிச் செம்மல் சிவத்திரு பாலசுப்பிரமணியம் தம்பதிகள் பல்லாண்டு வாழ்ந்து வாழ்வில் வளமும் மேன்மையும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்திடவும் வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை வணங்கி வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST**

ESTABLISHED [illegible]

Registered Charity No. [illegible]

HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA, England, U.K.

Tel: [illegible] Fax: [illegible]

## பிரித்தானிய இந்து ஆலய நிர்வாகம்

# போற்றுதற்குரியவர்

வ. செல்லத்துரை

*உயர் வாசல் (High Gate Hill) முருகன் ஆலயம்*

திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்கள் கொழும்பு கொம்பனித்தெரு சிவசுப்பிரமணியம் ஆலயத்தைச் சார்ந்த பரிபாலன சபையில் தம்மையே அர்ப்பணித்து – இறைப்பணியுடன் தமிழ்ப் பணியும் சைவப் பணியும் புரிந்து இன்பம் பெறும் நல்ல உள்ளம் படைத்தவர் என எண்ணும் போதெல்லாம் பெருமகிழ்ச்சி.

அவரது பணியைப் போற்றி அவரது அறுபது அ[illegible] நிறைவு விழா எடுக்கும் பெரியோர்களும் போற்றற்குரியவர்கள் விழா பொலி[illegible] இனிமையான விழாவாக வேண்டும் என்றும் அவர்கள் குடும்பத்துடன் பல்லாண்டு வாழ்ந்து சேமமுடன் பல நலங்களும் பெற்று தம் பணியை தொடர லண்டன் உயர் வாசல் முருகன் எல்லா அருளை அள்ளி அருள வேண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Sivayogam சிவயோகம்



# அளப்பரிய பணி

நா. சீவரத்தினம்

*(தலைவர், அறங்காவல் சபை, சிவயோகம் அறக்கட்டளை)*

சைவமுன்னேற்றச் சங்கத்தில் இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து கௌரவ பொதுச்செயலாளர் பதவியை வகித்து அச்சங்கத்தை உலகறியச் செய்து, இங்கிலாந்து நாட்டிலும் ஒரு கிளையை நிறுவி, கொம்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் வளர்ச்சிக்கும் அயராது தொண்டாற்றி, கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சிவநெறிக்கும் செந்தமிழுக்கும் தொடர்ந்து சேவை புரிந்து வரும் சைவபெருந்தகை திரு. கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு மணிவிழா கொண்டாடப்பட இருப்பது அறிந்து சிவயோகம் அறக்கட்டளையின் அறங்காவலர், திருக்கோயில் சிவாசாரியர்கள் மற்றும் நிர்வாக ஆலோசகர்கள் அனைவரும் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். இப் பெரியார் 1997 ம் ஆண்டு இந்நாட்டிற்கு வருகை தந்த போது இவரின் அளப்பரிய பணியைப் பாராட்டி சிவயோகம் அவரை கௌரவித்தது. மணிவிழா காணும் இப்பெரியார் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு குடும்ப சிறப்புடன் வாழ்ந்து எம் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் மொழிக்கும் பணியாற்ற எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முத்துமாரியம்மனின் திருவடிகளை பிரார்த்திக்கின்றோம்.

09. 10. 99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை
Thirukoneswara Temple Paripalana Sabai

*President:*
M. K. SELLARAJAH J.P. U.M.
Attorney at Law & N. P.
Justice of peace all Island
&
Unofficial Magistrate



143, Main Street,
TRINCOMALEE.

# வரலாற்றுச் சான்றாளர்

எம். கே. செல்வராசா ஜே. பி. யு. எம்

*திருக்கோணேஸ்வர ஆலய சபைத் தலைவர்*



"மணிவிழாக் காணும் திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களின் பொதுப்பணி சிறப்புற்று விளங்கியமை. சைவ தமிழ் மக்கள் மீது அவர் கொண்டுள்ள மேலான பற்றுக்கு உதாரணமாகும்.

வையத்துள் பிறப்போர் பல்லாயிரம் பேர் அவர்களில் ஒரு சிலர் மட்டுமே தம் கடன் பணி செய்து கிடப்பதே என்ற உணர்விற்கு உறை விடமாகி விடுகின்றார்கள்..

அவர்களை கௌரவித்து பாராட்டப்பட வேண்டிய மனிதர்களுக்குரிய பாரிய கடமையாகும். திரு. க. பாலசுப்பிரமணியத்தின் சேவையை மதித்து மணிவிழா சபையினர் வெளியிடும் மலர் எதிர்கால சமுதாயத்திற்கு ஓர் வரலாற்றுச் சான்றாக அமையும் என்பதில் ஐயமில்லை.

சேவைக்கு அணிகலனாக விளங்கிய திரு. க. பாலசுப்பிரமணியம் பல்வேறு தலைமைச் சான்றுகளுடன் நிலையான சிரஞ்சீவித் தன்மை கொண்டுள்ள அருளாளர்.

மலர் வெளியீட்டுக் குழுவினரின் முயற்சியை மதித்து அவர்களுக்கு நன்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். மணி விழா வைபவத்தைக் காணுவது சைவ தமிழ் உலகிற்கு பெரும் மகிழ்ச்சியான செய்தியாகும்.

மணிவிழாச் சபையின் வைபவம் சிறப்பாக நடைபெற "ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் கோணேசப் பெருமானின் திருவடிகளை வாழ்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாங்கு வாழ்பவன்

அ. பரசுராமன்
*சித்திவிநாயகர் ஆலய நிர்வாக சபை மாளிகாவத்தை*

சஷ்டியப்த பூர்த்தியையிட்டு மணி விழா காணும் இறைபணிச் செம்மல் திரு. க. பாலசுப்ரமணியம் ஐயா அவர்கள் தாம் கடந்துவந்த ஆறு தசாப்த காலத்தை சிவநெறியும் – செந்தமிழும் தலைநகரில் தழைத்தோங்க தன்னை அர்ப்பணித்து வாழ்வாங்கு வாழ்பவர்.

முருகப் பெருமானுக்கு ஆறுபடை அமைந்ததுபோல ஐயா பாலசுப்பிரமணியத்துக்கும்: சைவமுன்னேற்றச் சங்க துணைத்தலைவர், அறங்காவலர், பொதுச் செயலர், சிவத்தொண்டர், சைவப் புரவலர், சிவநெறிச் செம்மல், இறைபணிச் செம்மல் என்ற ஆறு அமானுஷ சக்திகள் அவரை ஆட்கொண்டிருக்கின்றன.

ஆறுபடை முருகன் அகிலத்துக்கு அருள்வதுபோல ஆறு தசாப்தம் கண்ட ஆறு அமானுஷ சக்திகளைக் கொண்ட ஐயா பாலசுப்ரமணியத்தின் பணி மென்மேலும் தழைத்தோங்க வேண்டும். இன்னும் இறைபணிச் சக்திகள் அவரிடமிருந்து பிறக்க, மணிவிழா சிறக்க எமது மாளிகாவத்தை சித்தி விநாயகர் ஆலய அறங்காவலர் சபை அன்னாரை வாழ்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வீரமஹாகாளியம்மன்
கோவில்

ශ්‍රී වීරමහා කාලියම්මන්
කෝවිල

**SRI VEERA MAHA KALIAMMAN TEMPLE**

NO. 36, SRI RAMANATHAN ROAD, COLOMBO-13

☎ 431833

DATE:

# நீடூழிவாழ்வீர்

பொ. துரைசிங்கம்

*அறங்காவலர் ஸ்ரீ வீர மஹாகாளி அம்மன் கோவில்*



கலியுக வரதனும் கண்கண்ட தெய்வமுமான முருகப் பெருமான் திருக்கோவில் கொண்டு அருள் ஆட்சி புரியும் கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுடன் இரண்டற கலந்து சேவையாற்றும் சிவதொண்டன், சைவப் புரவலர், சிவநெறிச் செம்மல், இறைபணிச் செம்மல் உயர்திரு. கந்தையா பாலசுப்பிரமணியம் J.P. அவர்கள், நற்றவம் பலவும் முற்பிறப்பில் ஆற்றியவர் என்பதனை இப்பிறப்பில் அன்னாரின் ஒப்பில்லா உயர் வாழ்க்கை நமக்கு உணர்த்துகின்றது.

அவரின் சஷ்டியப்த பூர்த்தி விழா நடைபெறவுள்ளதை அறிந்து அப்பெருவிழாவுக்கு இவ்வாழ்த்துச் செய்தியை மனமுவந்து அனுப்புகின்றேன்.

இப்பெரியார் எங்கள் சமுதாயத்தின் பெருநன்மைக்காக இன்னும் நெடுகாலம் வாழ்ந்து முருகப் பெருமானின் தொண்டுகளைச் சீரும் சிறப்புடன் நடாத்த எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

*வாழ்க அவரின் திருவருள் சேவை*

21. 10. 1999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெமட்டக்கொடை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்

# அயரா உழைப்பின உருவம்

அ. சங்கரப்பிள்ளை J.P.
கௌரவ செயலாளர் ஆலய பரிபாலனசபை

மனிதகுலம் முன்னேற்றம் அடைந்து வரும் இக்காலத்திலே சலனமுற்றதாகவும் உள்ளீடு அற்ற புறவாழ்க்கையாகவும் காட்சியளிக்கின்றது எமது வாழ்க்கை. அது நிலையில்லாதது. அநித்தியமானது. அதன் பகட்டான வெளித்தோற்றத்தில் ஏங்கித் தவிக்கும் இன்றைய சமுதாயம் மன அமைதியைத் தேடி அலைகின்றது. வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளக் துடிக்கின்றது.



இக்காலகட்டத்தில் எமக்கு வேண்டுவது மனவமைதி. துன்பமில்லா வாழ்வு இதற்கு உறுதுணை இறைவழிப்பாடு, பற்றற்ற தியானம், இவை தவிர வேறில்லை.

உண்மைப் பரம் பொருள் ஒன்றே நித்தியமானது ஒருவரே கடவுளான போதும் பக்தர்களின் வழிபாடு உயத்துவதற்காக பல்வேறு உருவங்களை ஆண்டவன் எடுத்துள்ளான். இந்த உருவங்களுள் சிவசக்தி ஜோதியில் ஆவிர்பதித்த மஹா தேஜஸ்ஸிடன், மற்ற எவராலும் சம் ஹரிக்க முடியாத சூரன், சிங்கன், தாரகன் முதலிய அசுரர்களைச் ஸம்ஹரித்து பக்தர்களுக்கு வேண்டிய அருளை வாரி வழங்கும் கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமிகோவிலின் முன்னாள் அறங்காவலர் சபையின் செயலாளரும், கொழும்பு சைவமுன்னேற்றச் சங்க அறங்காவலரும் துணைத் தலைவரும், செயலாளருமாகிய சிவநெறியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழும் சிறந்தோங்க தலை நகரில் தன்னலமற்ற சமய சமூகப்பணிகளில் முன்னின்று தன்னலம் கருதாது உழைத்து வரும் சமாதான நீதிவானாகிய திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களது சஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு மணிவிழாச் சபையினர்கள் வெளியிடும் சிறப்பு மலர் ஒன்றிற்கு ஆசிசெய்தி ஒன்றினை வழங்குவதில். வட கிறேண்ட்பாஸ் நவகம்புர ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபையினர்களும், அப்பகுதி அம்பாள் அடியார்களும் மட்டற்ற மகிழ்ச்சியும், பேரானந்தமுமடைகின்றோம்.

கல்தோன்றி மண்தோன்றா காலத்து மூத்த தாய் மதமாகிய எமது இந்து மதம் இன்றுவரை காலத்தின் எத்தனையோ வகையான எதிர்பார்ப்புகளின் மத்தியிலும் சிறிதேனும் சிதிலமடையாது மீண்டும், மீண்டும் புதுபொழிவுடன், அழிவுகள் முடிவல்ல ஆரம்பமே என்பதுபோல் இன்றுவரையல்ல இன்னும் கோடி வருடங்கள் வாழும், அப்படி வாழப் போகின்றதென்றால் அதன் மூலக்காரணம் முன்னோர்கள் வழிவந்த ஆழ்வார்களும், நாயன்மார்களும், சமய சமூகப் பணிகளில் அயராத உழைத்தவர்களேயாம்.

அந்த வகையில் சிவதொண்டன் – சைவப்புரவலர் – சிவநெறிச் செம்மல் – இறைபணிச் செம்மல் என்று மனதார போற்றி புகழும், செம்மல் திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்து.

*மேன்மை கொள் சைவநீதி உலகெல்லாம் விளங்குக*

*இன்பமே சூழ்க*
*எல்லோரும் வாழ்க*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
# அகில இலங்கை இந்து மாமன்றம்

தலைமையகம் : இல.91/5, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 2. இலங்கை
தொலைபேசி : 434990 தொலைபேசி : 344720

# "பணிபுரியும் பண்பாளன்"

வி. கயிலாசபிள்ளை
*தலைவர்*
*அகில இலங்கை இந்து மாமன்றம் கொழும்பு*

அன்புடையீர்,



சிவதொண்டன், சைவப்புரவலர், சிவநெறிச் செம்மல், இறைபணிச் செம்மல் ஆகிய திரு. க. பாலசுப்பிரமணியம் ஜே.பி. அவர்களது சஷ்டியப்த பூர்த்தியையிட்டு ஓர் மணிவிழா எடுப்பதை அறிந்து மிகவும் மகிழ்வுறுகின்றேன். திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் முன்னாள் துணைத்தலைவரும். செயலாளருமாக தன்னலமற்ற பணி புரிந்து கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டவர் என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

மேலும் திரு. பாலசுப்பிரமணியம் தன்னலமற்ற பல சமய சமூகப் பணிகளில் பங்குபற்றி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். திரு. பாலசுப்பிரமணியம் பல்லாண்டு வாழ்ந்து எமது சமயத்திற்கும், சமூகத்திற்கும் தொடர்ந்து தொண்டாற்ற வழிவகுக்குமாறு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

மணிவிழா சிறப்புற நடைபெற எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டனின் தொடர்கதை, தொடரும் ஒரு புனித வரலாறு.

கந்தையா நீலகண்டன்



'நாமும் வாழ்வோம் – மற்றவர்களையும் வாழ விடுவோம்' என்ற சாதாரண மனித உணர்வுகளைத் தாண்டி, 'மற்றவர்களையும் வாழவைப்போம்' என்ற உன்னத நோக்குடன் வாழ்கின்ற மனித உள்ளங்கள் வெகுசில. அப்படியான, மகத்தான உடன் பிறப்புகளில் ஒன்றுக்கு மணிவிழாக் காண்கின்ற இப்புனிதமான தருணத்தில், மணிவிழா நாயகன் பல்லாண்டு வாழ்ந்து சேவை பல செய்ய ஆண்டவனைப் பரிந்து பிரார்த்தித்து நிற்கின்றோம்.

தந்தை கந்தையா, பாலகன் பிறந்ததும் ஸ்ரீசுப்பிரமணியப் பெருமானுக்கு அவனை அர்ப்பணித்து அக்குழந்தையை பாலசுப்பிரமணியம் என விளித்தார். பெற்ற பெயருக்கேற்ப பாலசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியமாக வளர்ந்து பாலசுப்பிரமணியமாக வாழ்ந்து பாலசுப்பிரமணியமாக இன்று வாழ்த்திப் போற்றப்படுகிறார்.

'மக்களின் சேவையே மகேசுவரன் பூசை' என்ற நல்ல நோக்குடன் மக்கள் தொண்டனாக, இறைபணி செய்யும் அடியானாக ஆறு தசாப்தங்கள் வாழ்ந்த மணிமாஸ்டருக்கு ஆறுமுகப் பெருமானின் அருளால் ஆறு பத்து ஆண்டுகள் நிறைவுக்கு அவர்களின் சேவையை என்றும் உள்ளத்தால் போற்றுகின்ற நல்ல இதயங்கள் விழா எடுக்கின்றார்கள்.

வடமராட்சி 'ஆபரேஷன்' கொடுமையை நிறுத்தக் குரல் கொடுக்க நீதியரசர் வி. மாணிக்கவாசகர் தலைமையில் இந்து பிரஜைகள் குழு அமைத்தோம் – ஓடிவந்து உதவினார் பாலசுப்பிரமணியம். கொம்பனித்தெரு முருகனுக்கு இராஜ கோபுரம் கட்ட தெருத்தெருவாக அலைந்து உழைத்தவர். அந்தத் திருப்பணியின் நிறைவின் எதிரொலியாக, அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டிடம் எழுந்த வேளையில் உதவிகள் பல செய்து பாடுபட்டார்; திருச்செந்தூர் போன்று தங்கத்தேர் ஓட்டிடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குமார் தலைமையில் குழு அமைத்து அந்தத் தர்மத்தையும் செய்து வைத்தார் எங்கள் பாலா. அகில இலங்கை இந்து மாமன்றத்தில் என்ன விழாவோ, ஓடிவந்து ஒழுங்குகள் செய்திடுவார் எங்கள் மாமன்ற உதவிச் செயலாளர் பாலசுப்பிரமணியம். கொம்பனித்தெரு முருகனையும் அன்னதானக் கந்தனாகக் கண்டு பெருமையடைந்தவர் பாலா. இப்படி அவர் பணிகளைப் பல படிகளில் உயர்த்திப் பறைசாற்றலாம். ஆனால், அவரின் சிறப்பு – இல்லை, அது அவரின் தனித்துவமான அடக்கமான இயல்பு என்னவென்றால், தான் செய்தவற்றைப் புகழ் பாடாது இன்னும் என்ன தொண்டு செய்யலாம் என ஆர்வத்துடன், தன்னைத் தொண்டனாக அர்ப்பணிக்கின்ற அந்தப் பெரும் மனப்பான்மையே. அவரின் தொண்டு ஒரு தொடர்கதை. அத்தொடர் கதையில் இன்னும் பல அத்தியாயங்கள் நிச்சயமாக எழுதப்படும். அது ஒரு தொண்டனின் வெறும் தொடர்கதையல்ல; ஒரு புனித வரலாராக என்றும் போற்றப்படும்.

பாலாவைச் சாடுகின்ற சிறுமையானவர்கள் பலரைக் கண்டிருக்கிறேன். ஆனால், அவர் எவரையும் தூற்றுவதில்லை – பதில், மற்றவர்கள் எறிகின்ற அம்புகளை அன்பு மலர்களாக ஏற்று தன் கடமையைத் தொடர்வது, அவருக்கு ஆண்டவன் தந்த தனிப்பிரசாதம் என்றே கூறலாம்.

இன்று எமது இனம்படுகின்ற இன்னல்களை எழுதுவதென்றால், நண்பர் நடராஜா எழுதியது போன்று இலங்கைத் தமிழரின் கண்ணீர்களாக பல நூல்களை எழுதிக் குவிக்கலாம். இப்படியான காலகட்டத்தில் பல சமூகப் பணிகளை நிறைவேற்றத் தொண்டர்கள் இல்லாது தத்தளிக்கின்ற நிலை. மணிமாஸ்டர் தொண்டர் களுக்கெல்லாம் தொண்டராக உயர்ந்து மணிவிழா காண்கின்றபோது, அவரை மீண்டும் பாராட்டி வாழ்த்தி அவருக்கு ஆண்டவன் அருள் வேண்டிப் பிரார்த்தித்துக் கொண்டு, நிறைவாக எங்கள் உடன் பிறப்புகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோள் விடுக்க விழைகிறேன். மணிமாஸ்டரைப் போன்ற தொண்டர்கள் பலர் எங்கள் தம்பி தங்கைகள் மத்தியில் உருவாக வேண்டும். மற்றவர்களைத் தூற்றுவதிலும் ஒருவன் நல்லதைச் செய்து, மற்றவர்களின் மெச்சுதலைப் பெற்றால், அதில் பொறாமை கொண்டு எங்கள் உள்ளம் கருக எங்களை அழித்துக் கொள்வதையும் தவிர்த்து, நாமும் "நல்லதையே செய்வோம், நல்லதையே எண்ணுவோம், நல்லதையே சொல்வோம்" என்ற நல்நோக்குடன் தொண்டர்களாக மாற முன்வரவேண்டும். அதுவே மணிவிழா நாயகனுக்கு மனம் நிறைய நாங்கள் செலுத்தும் நல்ல பாராட்டாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத் தலைவர்
## எஸ். பி. சாமி அவர்களின்
# "அடக்கமான அருளாளன்

சைவநீதியும் சைவமரபும் தழைத்தோங்கப் பணிபுரியும் வாய்ப்பு ஒருவருக்கு இலேசாக வந்து எய்த மாட்டாது. ஒருவன் உயர்வு பெறவேண்டுமானால் அடக்கமாக இருக்க வேண்டும். அடக்கமாக உள்ளவன் நிறைந்த வாழ்வைப் பெறுவான். பண்பிலும், பாவனையிலும், நடையிலும் எல்லா விடயங்களிலுமே மிக உயர்ந்து விளங்குவது "எளிமை" தான், நிரம்பிய தன்னடக்கத்துடனும் எளிமையுடனும் சைவப் பணிபுரிந்து வரும் இறைபணிச் செம்மல் க. பாலசுப்பிரமணியம் அவர்களின் அறுபது ஆண்டு நிறைவையொட்டி மணி விழாக் காணும் நிகழ்வு எழுந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

கொழும்பு, கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் பின்னணியில், தலைநகரில் சிவநெறியும் செந்தமிழும் செழித்தோங்கும் வகையில் தன்னலமற்ற சமய சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி அருள் வாழ்க்கையைத் தொடர்ந்து வருபவர் அன்பர் பாலசுப்பிரமணியம். இவர் சிறந்த முருக பக்தர். அரச பணிகளில் ஈடுபட்டிருந்த காலத்திலும், ஓய்வுபெற்ற பின்னரும் முருகப் பெருமானின் அருள் வயப்பட்டுப் பணிபுரிபவர். தொண்டரடிப் பொடியாகித் தாம் வாழும் தலைநகரிலே சைவ நெறியைத் துலங்க வைப்பவர். நாடெலாம் செறிந்துள்ள அறங்காவலர் சபையிலே நீண்டகாலமாக அதன் மூல விசையாகச் செயற்பட்டு வந்தமை நினைவு கூரத்தக்கது.

தமிழ் மக்களின் இன்னல்கள் போயகல ஆறுபடை வீடு கொண்ட முருகப் பெருமானின் பேரருள் தான் தோன்றாத் துணையாக இருக்கவேண்டும். "பஞ்சம் படை வந்தாலும், பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி – கிளியே, ஆறுமுகன் தஞ்சமடி" என்ற குருநாதர் யோகர் சுவாமிகளின் அருள் வாக்கின் வழிநின்று, சைவத்தின் மேன்மையை விளக்குவதற்கு அன்பர் பாலசுப்பிரமணியம் ஆற்றிவரும் பணிகள் அளவிடற்கரியன.

கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்கம், உயிர்ப்புடன் ஆற்றிவரும் பணிகளுக்கெல்லாம் தமது முழு நேரத்தையும் அர்ப்பணித்து வாழ்ந்து வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதார சக்தியாகிய முருகப் பெருமானின் பேரருளால் தொண்டு செய்து வரும் வாழ்வையே முருகப்பெருமான் தமக்கு அருளிய "அருள் பிச்சையாகக்" கருதிப் பணிவுடனும், இன் சொல்லுடனும் வாழ்ந்து பணி செய்து வருகின்றார். தனக்கென வாழாப் பிறருக்குரியாளராக வாழும் இறைபணி செம்மல் க. பாலசுப்பிமணியம் அவர்கள் சகல நலமும் பெற்று தொண்டு வாழ்க்கை மேலும் பெருகி வாழவேண்டும்.

அன்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் தனது இடையறாத அருள் பணியின் காரணமாகச் சைவமுன்னேற்றச் சங்கத்தின் எழுச்சிக்கு வழிகாட்டியாக விளங்கி வருகின்றார். இளைய தலைமுறையினருக்குச் சமய ஒளியூட்டும் சேவகனாகத் தம்மை அர்ப்பணித்து, எடுத்த கருமம் எதையும் மனங்கோணாது செய்து சாதனைகளைப் புரிந்து வருவது மகிழ்ச்சி தரும் விடயமாகும். இது பாராட்டுதற்குரியது.

சைவப் புரவலராகவும், சிவநெறிச் செம்மலாகவும், சிவதொண்டராகவும் வாழ்ந்து வாழ்வின் முழுமையினை இறைபணியில் ஈடுபடுத்தி வரும் தொண்டர், அன்பர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள் சகல நலமும் வளங்களும் பெற்று மேன்மை கொள் சைவ நீதியை உலகெலாம் விளங்க வைக்கத் தொண்டு புரியவேண்டும் என்று வாழ்த்துவோமாக!

"எங்கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கு இலக்கணமாக வாழும் இறை பணிச் செம்மல் க. பாலசுப்பிரமணியம், செவ்வேள் ஏறிய மஞ்ஞையைத் தொழுது வாழ்பவர். முருகப் பெருமானின் பேரருளால் இரு வினை நீங்கி அவனருள் வயப்பட்டுப் பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்களைப் போற்றித் தமது தொண்டு வாழ்வை மேலும் மேலும் தொடரவேண்டும்! வாழ்க அவர்தம் பணிகள்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு விவேகானந்த சபை

*கொழும்பு விவேகானந்த சபைச் செயலாளர் சிவஞானச் செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் அளிக்கும்*

# *வாழ்த்துச் செய்தி*

இன்று, நேற்றல்ல பல ஆண்டுகளாக அன்பர் பாலசுப்பிரமணிம் எனது இனிய நண்பர். இவரது அயராத முயற்சியால்த் தான் கொம்பனித் தெரு மக்கள் சமயத் தெளிவு பெற்றார்கள். சைவ முன்னேற்றச் சங்கத்தின் மூலமாக இவர் ஆற்றிய பணிகள் பற்பல. ஊணையும், உறக்கத்தையும் ஏன்...... தொழிலைக் கூடத் துறந்து இவர் கொம்பனித் தெரு முருகன் ஆலயத்தோடும் சங்கத்தோடும் இரண்டற ஒன்றினார்.

சைவ நல்லன்பர் திருமிகு. சி. தனபாலா அவர்களை திருப்பணிச் சபைத் தலைவராகக் கொண்டு சிவசுப்பிரமணிய சுவாமிக்கு மிகப் பெரிய குடமுழுக்கு விழா நடத்திய தோடல்லாமல். சைவப் பெரியார் திருமிகு தி. செந்தில்வேள் அவர்களுடன் இணைந்து பேலியகொடை ஸ்ரீ பால விநாயகர் ஆலயத்திற்கும் திருக்குமரர் நடேசன் அவர்களைக் கொண்டு தேர்த் திருப்பணித் தொண்டுகள் பலவும் செய்துள்ளார். மார்கழி மாதம் திருவெம்பாவை பஜனையினூடாக இளைஞர்களையும், சிறுவர்களையும் ஒன்றிணைத்து சமயப் பணிபுரிய அவர்களை ஊக்கப்படுத்தினார்.

இது போல பற்பல தொண்டுகள் – அவைகளை விரித்தால் பெருகும். தொகுத்தால் எஞ்சும் மணி விழாக் காணும் பாலா தம்பதிகள் நீடூழி வாழ்ந்து சிறக்க வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (இந்து விவகாரம்)

## திரு. நடராஜா பரம்சோதி

### "பல்லாண்டு காலம் வாழ்ந்து பணிபுரிவீர்"



இறைபணிச்செம்மல் திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தியையொட்டி அமைக்கப்பட்ட மணிவிழாச் சபையினர் ஒழுங்குசெய்து வெளியிடுகின்ற மணிவிழாச் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கொழும்பிலே கொம்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவில், சைவ முன்னேற்றச்சங்கம் என்பவற்றில் பல தசாப்த காலமாகத் தனது முழு உழைப்பையும் தந்து ஆலயத்தின் வளர்ச்சிக்காகவும், சங்கத்தின் முன்னேற்றத்திற்காகவும் அரும்பணியாற்றியவர் திரு. பாலசுப்பிரமணியம் ஆவார்.

கொம்பனி வீதி ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயில் இராஜகோபுரம் அமையும் காலகட்டத்தில் அறங்காவலர் சபைச் செயலாளராகக் கடமையாற்றிய இவரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் சீரிய உழைப்பும் தலைநகர் வாழ் இந்து மக்களுக்கு மறக்கமுடியாத விடயங்களாகும்.

அவ்வாறே சைவமுன்னேற்றச் சங்கத்தின் மூலம் பல சமய சமூகத்தொண்டுகளைப் புரிந்து வருகின்றார். ஆலயத்தையும் அதனுடன் சேர்ந்த பணிகளையும் தனது முழுநேரக் கடமையாக எண்ணி வருகின்ற அவரை வாழ்த்திப் போற்றுவது நாம் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாக அமையும் என எண்ணுகின்றேன்.

மணிவிழாக் காணுகின்ற திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து அருள் தொண்டுகள் புரிந்திட இறையருளை வேண்டி என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பர் அருள் நெறி மன்றம்

# "பொதுப்பணியே இறைபணி"

தேவசேனாதிபதி – சட்டத்தரணி– மன்றத் தலைவர்



திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களை கடந்த 25 ஆண்டு காலமாக எனக்குத் தெரியும் அப்பொழுது நான் றோயல் கல்லூரியில் மாணவனாக இருந்தகாலம் செட்டியார்தெரு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா ஆடிவேல் விழாக் காலங்களில் அனைத்திலங்கை இந்துவாலிபர் சங்க 'அப்பர் அருள்நெறி மன்றத்தினால்' நடாத்தப்பட்டு வரும் பஜனைகளில் திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கொழும்பு சைவமுன்னேற்றச் சங்க பஜனைக் குழுவினர் தவறாது கலந்து கொள்வார்கள். அச் சமயம் மற்றய சகோதர சங்க பஜனைக் குழுவினருடன் இவர் பழகும் விதம் என்னையும் ஏனையோரையும் மிகவும் கவர்ந்தது.

இவர் பொதுப்பணியே இறைபணியாகக் கொண்டு இரவு பகலாகப் பணியாற்றும் பாங்கு போற்றத்தக்கது. கொம்பனித்தெரு அருள் மிகு சிவசுப்பிரமணியன் கோவிலையும் – சைவ முன்னேற்றச் சங்கத்தையும் இரு கண்களாகக் கருதி அளப்பரிய பணிகள் ஆற்றியுள்ளார்கள். குறிப்பாக கொம்பனித் தெருவாழ் சைவமக்களுக்காவும் சிறப்பாக தலைநகர்வாழ் சைவத் தமிழ் மக்களுக்காக ஏன் கடல் கடந்த பிரித்தானிய நாட்டிலும் சை. மு. ச. வின் கிளைச்சங்கம் ஆரம்பித்து பணிபல ஆற்றியுள்ளார். ஏன் இன்றும் ஆற்றி வருகின்றார். கொம்பனித் தெரு சிவசுப்பிரமணியப் பெருமானுக்கு தொண்டு செய்வதற்கன்றோ இவருக்கு பெருமான் பாலசுப்பிரமணியம் என்னும் பெயரை வைப்பித்தாரோ.

இவரது சமய – சமூகப்பணி பலரால் போற்றப்பட்ட போதும் – இவர் மேல் கொண்ட காழ்ப்புணர்வால் சிலரால் வேதனைக்கும் சோதனைக்கும் ஆளானார். சட்டத்தரணி என்ற வகையில் நான் பலசந்தர்பங்களில் நீதிமன்றத்தில் எதுவித வேதனமுமின்றி வாதாடி வெற்றிமாலை சூட்டியுள்ளேன். வஞ்சகம் சூது வாது பொய் களவு இன்றி நீதியோடும் நேர்மையோடும் இவர் வாழ்ந்துவருவர் என்பது எனது திடமான நம்பிக்கை இதன் அடிப்படையைக் கொண்டே அன்றும் இன்றும் ஏன் என்றுங் கூட நான் இவருக்கு உதவிபுரிய காத்திருக்கின்றேன். இறைவனால் இவரது நற்பண்பிற்கேற்ற இல்லாளையும் பண்பு உள்ளம் கொண்ட மூன்று குழந்தைச் செல்வங்களையும் இவருக்கு கொடுத்துள்ளார். இவரது அருமைப் பிள்ளைகள் எங்கள் அருள் கல்வி வட்டத்திலும் பல ஆண்டுகள் கல்விபயின்றார்கள் என்று எண்ணும் போது அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இதுமட்டுமல்லாது எனது தாய் – தந்தையின் ஆசியையும் இவர் பெற்றவராவர்.

இவர்களுக்கு இன்று பார் போற்ற எடுக்கும் அறுபது ஆண்டு பூர்த்தி மணி விழா – தன்னலமற்ற பொதுத் தொண்டு ஆற்றி வரும் ஏனைய தொண்டர்களையும் ஊக்கிவிக்கும் செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பண்புரையாளர் தொடர்பு"

**Rm. Sp. Sethuraman Chettiar**
Valayapatti S. India, Pudukottai Dist



ஆயிரம் பிறைகண்ட ராம. சுப. சேதுராமன் செட்டியார் அவர்களின் மனமார்ந்த ஆசியுரை :

திரு. க. பாலசுப்ரமணியம் அவர்களின் அறுபதாம் ஆண்டு மணிவிழா நிகழ்வது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். காரிய வீறு, செயல் திறமை, சாதுர்யம், சொல்வன்மை, பிறருடன் பழகும்போது காட்டும் பணிவு, இனிய அன்பு போன்ற நற்குணங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் பாலசுப்ரமணியம் அவர்களைத் தெரியாத கொழும்பு வாழ்மக்களே கிடையாது என்று ஆணித்தரமாகச் சொல்ல முடியும்.

*"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்*
*பண்புடையாளர் தொடர்பு"*

என்ற வள்ளுவர் வாக்குப்படி பண்புடையாளராக வாழ்ந்து பாலசுப்ரமணியம் அவர்களை நான் கடந்த 40 ஆண்டு காலமாக நன்கறிவேன். ஸ்ரீ கொம்பனித்தெரு சிவசுப்ரமணியசுவாமி கோவிலுக்கு இவர் ஆற்றிய அரும்பெருந்தொண்டை கொழும்பு வாழ் பெருந்தகையாளர்கள் என்றென்றும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

ஒழுக்கம் மிக்க விருப்பமுடைய பாலசுப்ரமணியம் அவர்கள் பண்புடையாளர் தொடர்பு பாங்குறக் கொண்டவர். இவர்கள் வாழ்க்கைப் பணியோடு இறைபணியிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். குறிப்பாக பாலசுப்ரமணியம் புகழ் விரும்பாது, பொதுவாக பல நல்லறங்களுக்கும் சிறப்பாக இறை வழிபாட்டுப் பணிகளுக்கும் இடையறாது பெரும் பொருள் திரட்டி கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோவிலின் வளர்ச்சிக்கு மென்மேலும் பாடுபட்டுக் கொண்டிருக்கும் அன்னாரை நலமுடன் வாழ வாழ்த்துகிறோம்.

இங்ஙனம், திரு. க. பாலசுப்ரமணியம் தம்பதியினர் பல்லாண்டு சீரும் சிறப்பும் கொண்டு பேரும் புகழும் பெற்று, இன்னும் பல விழாக்கண்டு இனிது வாழ கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்ரமணிய சுவாமியை மனமுடன் பிரார்த்திக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணாசலம் திருநாவுக்கரசு
# அகில இலங்கை சமாதான நீதவான்
# இளைப்பாறிய சுங்க உதவியட்சகர்

அ. திருநாவுக்கரசு
*மணிவிழாச் சபைச் செயலாளர்*

"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்பது முருகமூர்த்தி தமிழோடு விளையாடிய போது கிடைத்த பதில். இறைவரோ தொண்டர்தம் உள்ளத்துள் ஒடுக்கம் என்பதையும் கேட்டு மகிழ்ந்தான்.

நால்வர் பெருமக்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோர் தொண்டின் வழிநின்றே இறைபணி செய்து தமிழையும் சைவத்தையும் வளர்த்து. தெய்வத் திருமுறைகளையும் எமக்குத் தந்ததனாலேயே நாம் எல்லோரும் இன்றும் தமிழனாகத் தலைநிமிர்ந்து வாழ்கின்றோம். சைவர்களாக வாழ்கின்றோம்.

சைவர்களாகிய நாம் நால்வர் வழி நின்று வாழ்ந்தால் செந்தமிழும் மேன்மை கொள் சைவநீதியும் உலகெலாம் பரவும். இதை நன்குணர்ந்த அன்பர் திரு பாலசுப்பரமணியம் அவர்கள் நால்வர் நெறி நின்றே கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தில் தொடர்ந்து முப்பது ஆண்டு காலமாக பொதுச் செயலாளராகவும், தற்போது அறங்காவலராகவும், துணைத்தலைவராகவும் பணியாற்றி வருகிறார். இவர் பல சைவ அன்பர்களையும் பெரியோர்களையும் சேர்த்து முன்னின்று உழைத்து சங்கத்திற்கென ஒரு நால்வர் மணி மண்டபம், நால்வர் அறநெறிப் பாடசாலை, தொண்டரணி, மாதரணி, நால்வர் நூலகம் யாவும் அமையப் பணிசெய்தார்.

பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கம், பேலியாகொடை சைவ முன்னேற்றச் சங்கம், சிலாபம் சைவ முன்னேற்றச் சங்கம் ஆகிய சங்கங்களின் அங்குரார்ப்பண ஆலோசகராகவும், ஸ்தாபகர்களில் ஒருவராகவும் பணியாற்றி வருகின்றார்.

கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் அறங்காவல் செயலாளராகவும், நகரின் நடுவே ஆலய முன்றலிலே கம்பீரத் தோற்றத்துடன் 81 அடி வானுயர்ந்து கொழும்பு மாநகரெல்லாம் முருகநாமத்தைப் பறைசாற்றும் இராஜகோபுரத் திருப்பணிச் சபையின் செயலாளராகவும் இயங்கி கும்பாபிஷேகம் செய்ய வைத்த பெருமையும் இவரையே சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத் தேர்த் திருப்பணிச் சபையின் தலைவர் திரு. திருக்குமார் நடேசனுடன் சேர்ந்து சபையின் செயலாளராகப் பணியாற்றி ஒரு வருட காலத்துள் நிதி சேகரித்து, தங்கக் குடம் பதித்த தங்கத்தேர் செய்து முருகனை ஆரோகணிக்க வைத்து, நல்லூர்க் கந்தனின் தேரோட்டத்தன்று கொம்பனித்தெரு வீதியெல்லாம் வலம் வரச் செய்த பெருமையெல்லாம் இவரையே சாரும்.

இவர் ஆற்றிய பணிகள் எல்லாம் இலைமறை காயாக எத்தனை எத்தனையோ இருக்கின்றன. இவர் ஆற்றிய தொண்டைச் சிறப்பிப்பதற்காக "சிவதொண்டன்", "இறைபணிச்செம்மல்", "சைவப் புரவலர்", "சிவநெறிச் செம்மல்", ஆகிய பட்டங்களை இலங்கையிலும் இலண்டனிலும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கிறார்.

அன்பர் பாலா இறைபணியாற்றுவதற்காகவே தனது பதவியையும் இழந்து கஷ்டப்பட்டார். இவர் ஆற்றிய இறைபணியின் உண்மைகளை எத்தனை பொய்களாலும் மறைத்துவிட முடியாது. இவர் ஆற்றிய தொண்டுகள் யாவும் அருள் திருமுருகனின் செம்பொற் பாதங்களில் அன்றலர்ந்த செந்தாமரையாக அணிசெய்யட்டும்.

இறைபணிச் செம்மல் பாலசுப்பிரமணியம் தம்பதிகள் 13.10.1999 அன்று சஷ்டியப்த பூர்த்தி அடைவதையிட்டு அவர்களுக்கு "மணிவிழா" எடுத்துப் பாராட்ட வேண்டுமென அவாவுறுகிறோம். மணிவிழாவைச் சிறப்பாகச் செய்ய உலகளாவிய ரீதியில் அன்பர்களும் நண்பர்களும் முன்வந்தனர். பல அன்பர்களையும் நண்பர்களையும் நேரில் சந்தித்தோம். மணிமாஸ்டருக்கு மணிவிழா எடுப்பது நன்றென நல்கி, பாராட்டி, பொற்குவையும் ஈந்து விழாவிற்கு வருகை தரவும் விரும்பியமையும் பாராட்டுதற்குரியது. இத்தகைய பெரியார்களும் சிறந்த இறைபணியாளர்களே!

மணிவிழா எடுக்கிறோம் – தொண்டின் மகத்துவத்தைப் பெருமைப்படுத்துவதற்காக – சைவ உலகில் பல பாலசுப்பிரமணியங்கள் தோன்ற வேண்டும். தோன்றி தமிழுக்கும் சைவத்திற்கும் தூய பணி செய்ய வேண்டும். அத்தகைய பணியால் ஒவ்வொருவர் மனதிலும் இறைபணி உணர்வு தோன்ற வேண்டும். செந்தமிழும் சைவநீதியும் ஜெகமுழுதும் ஒற்றைத் தனிக்குடை கவித்து மேற்சிங்காதனத்தில் உந்து செங்கோலும் மனுநீதி முறைமையும் பெற்று திகிரியுலகாள சிவனருள் பாலிக்க வேண்டும்.

முருகவேள் அருளால் திரு பாலசுப்பிரமணியம் தம்பதிகள் காலமெலாம் சகல செல்வங்களும் பெற்று வாழவேண்டுமென வாழ்த்தி, இன்றைய மணிவிழாவிற்கு வருகை தந்திருக்கும் பெருந்தகையோர் எல்லோரையும் வருக வருக என மனமகிழ்ச்சியுடன் இதயம் பணிந்து வரவேற்கின்றோம்.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்போற்றும் ஒப்புரவாளர்

இ. ஜெயராஜ்
(அமைப்பாளர், அகில இலங்கை கம்பன் கழகம்.)



தமிழர்தம் வாழ்வின் அறஎல்லைகளை வளமுற வகுத்துத்ததந்தவன் வள்ளுவன்.

அப்பெருந்தகை இல்லறம், துறவறமென தனிமனித வாழ்வு நிலைகளை இரு வகையாய்ப் பிரித்தனன்.

அவற்றுள் இல்லறப்பகுதி சமூகவாழ்வின் அடிப்படையாம்.

அவ்வில்லறத்தின் இம்மைப்பயனாய் வள்ளுவன் சுட்டுவது புகழினையே.

அப்புகழுக்குக் காரணம் ஈகை, ஒப்புரவு எனும் இரண்டுமென்பான் வள்ளுவன்.

இவற்றுள் ஈகை என்பது, தனிமனிதற்குச் செய்யும் உதவி.

ஒப்புரவென்பது சமூக நலன் நோக்கிச் செய்யும் உதவி.

இவற்றுள் சமூக நலன் நோக்கித் தொண்டாற்றுபவர்கள் ஒப்புரவாளர்கள் எனப்படுவர்.

அவ் ஒப்புரவாளர்தம் உயர்வு ஒப்பற்றது.

இன்று தமிழ் மக்கள் இந்நாட்டின் போர்ச்சூழ்நிலையால்,

சமுதாய வாழ்விழந்து,

வாழ்விடம் தொலைத்து,

சிதறிச் சீர்குலையும் நிலையில்...........

அவர் தம் பாரம்பரிய விழுமியங்கள் தேய்வுறும் அவலநிலை.

ஊர்தோறும் பிரிந்து தலைமையற்றிருக்கும் நம் தமிழ்ச்சமுதாயத்தை,

ஒப்புரவாளராய் சமூகத்தொண்டாற்றும் ஒருசில தனிமனிதர்களே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கிநிற்கின்றனர்

நம் இனத்தை இடர்சூழ்ந்த இக்காலகட்டத்தில் தன் பெருந்தொண்டால் ஒப்புரவாளராய் உயர்ந்து நிற்பவர்,

"இறைபணிச்செம்மல்" திருமிகு க. பாலசுப்பிரமணியம். J.P. அவர்கள்.

கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்,

கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கம்,

ஆகியவற்றைத் தன் சேவைக்களமாய் அமைத்து,

இவர் ஆற்றிய, ஆற்றும் - பணிகள் அளவிறந்தவை.

பெரியார்களைப் போற்றுவதிலாகட்டும்,

ஆலயத் தொண்டாற்றுவதிலாகட்டும்,

அறப்பணிகளிலாகட்டும்,

இளைஞர்களை ஊக்குவிப்பதிலாகட்டும்,

என்றும் இவர் பிரசன்னம் முதன்மைபெறும்.

வார்த்தையிலும், செயலிலும் இனிமையும் பணிவும் நிறைந்த பண்பாளர்.

இளைஞராய்த்திரியும் இவர்க்கு அறுபது வயதாம்.

மாண்புறு மணிவிழாச் செய்தி கேட்டு மகிழ்வுறுகிறேன்.

எமது கம்பன் பணிகளிலும் கை கொடுத்து உதவும் தோழர்

அவர்தம் பணிகள் நம் சமுதாயத்திற்காய் மேலும் பல்லாண்டுகள் தொடர,

என் அப்பன் கம்பன் பாடிப்பரவும்

பரம் பொருளை வேண்டிநிற்கிறேன்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ முன்னேற்றச் சங்கம் (U.K.)
SAIVA MUNNETTA SANGAM (U.K.)
"Community Service Through Hindu Concern"
2 Salisbury Road, Manor Park, London E12 6AB
Registered Charity No: 292085

# வாழிய பல்லாண்டு !

*சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர்*
திரு. வி. நாகரத்தினம்

சேவைக்கென்றே வாழ்ந்தவர் திரு கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள். சைவ முன்னேற்றச் சங்கத்தைத் தோற்றுவித்த பெருந்தகைகளில் ஒருவர் இவர். இவர் மணிவிழாக் கோலம் பூணுவது மனதுக்குள் மகிழ்வைத் தருகின்றது. சைவ முன்னேற்றச் சங்கத்தின் மீது இவர் ஏற்படுத்திய பாதப் பதிவுகள் என்றைக்கும் அழியாதவை. ஆலயங்களில் இவர் புரிகின்ற தொண்டுகள், துன்பப்படும் மக்கள்மீது இவர் கொண்டுள்ள அன்பு இவற்றையெல்லாம் வார்த்தைகளால் அளப்பதென்பது இயலாத காரியம்.

இவரது மணிவிழா சிறப்புற நிகழ வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் அங்கத்தவர்கள் சார்பிலும், ஆட்சிக் குழுவின் சார்பிலும் வேண்டிக் கொள்கின்றேன்.

ஓம் நமசிவாய !

10. 10. 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum

R. Pathmanathan [illegible]

'Love all Serve all'

" [illegible] "
17 Mulberry Court,
Bishop's Stortford,
Hertfordshire
CM23 [illegible]

TEL [illegible]
MOBILE [illegible]

# SRI KANDIAH BALSUBRAMANIAM J.P
# A PERSONAL TRIBUTE
## Rattinam Pathmanathan



I am privileget to send this message of congratulations to our most loved " Mani Master" on his attaining his 60th birthday and Sashdiyaptha poorthi Villa.

Mani Master, true to his name a gem of a man, is a description most fittingly bestowed upon him and repeated by all who loved him thousands of times. There is of course no harm in repeating or even chanting the name and seeking the company of a great man and paying respect to him is I Consider the greatest of all virtues. Thirukkural confirms this greatest virtues. He oozed decency and homespun goodwill to all.

I enjoyed the good fortune of being his understudy, in life experience when I was in my adolescent days as early as 1965 when I began my banking career and savouring my first life experience as an independent and individual member of the society in Colombo. Mani Master took me under his wings and started to nurture me and guide me into moulding me into a man committed to selfless service to the humanity and leading a life with decent values based on Hindu Tamil culture.

He drew me into Saiva Munnetta Sangam (Colombo) and Arulmihu Sivasubramaniaswamy Kovil in Kompanitheru and helped me to serve the community in my available time. I make this note with caution as Mani Master would always exclaim, I quote' There is no

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

such thing as you have no time for service, You make time for service' - I will never forget this.

His work ethic in his selfless service to the community was and is always hailed as an example for others to emulate. His tireless energy, drive and enthusiasm provided us the youth with a role model to follow.

It was not all work and no play!. Our collective efforts in organising and staging many great charity events or celebratory events were offen rewarded with a delicious meal in a posh vegetarian restaurant or a late night tamil film at the Navah Cinema. Mani Master is kind and generous and selflessly help out any person in difficulty.

He is a great source of comfort in times of distress. I was and still a beneficiary right until today of his enormous ability to listen and give his valuable guidance and sensible advice to ease any pain, and more importantly to help see something positive in any adversity and to show a way forward.

His tireless and selfless commitment in serving the Community through Saiva Munnetta Sangam (Colombo) and Arulmihu Sivasbramaniaswamy Kovil kept binding families together not only in Sri Lanka but all over the globe. He is a focused man and found the graceful ambience of Lord Murugan and his consorts as the focal point in all his vision and personal and community service. The results are evident in the manner in which the Kovil and the Sangam has grown in great proportions.

Mani Master is blessed with a long and happy married life with his loving Ambikai and he is blessed with loving and caring children likewise their father.

Mani Master! When you are celebrating your Sashdiyaptha Poorthi, We all pray that may Lord Murugan bless you with long healthy and a full life with energy to serve humanity. My humble offering to you is not a birthday present, but I bow down and touch your feet with deep humility to thank you and say" if not for you/ I will not be a man of today and through me my children would not have been men and women of tomorrow".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்
சைவ முன்னேற்றச் சங்கம் (U.K.)
"சைவாலயக் கருத்துணர்வினூடாகச் சமூகசேவை"
SAIVA MUNNETTA SANGAM (U.K.)
"Community Service Through Hindu Concern"
2 Salisbury Road, Manor Park, London E12 6AB
Tel: (01279) 757074 / 0181 - 924 8492 Fax : (01268) 561805
Registered Charity No: 292085

# "கண்டேன் – கேட்டேன் மகிழ்ந்தேன்"

**S. Markandu**
*Harrow Middx, London.*

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. இலண்டன் உயர்வாயிற்குன்று முருகன் ஆலயத்தில் ஒரு அபிஷேகம் காரணமாக மக்கள் அதிகமாகக் காணப்பட்டார்கள். அந்த மக்களோடு நானும் ஒருவனாக ஓர் பக்கத்தில் நின்று பூசையை கண்டு களித்துக் கொண்டிருக்கும் போது, இங்கு எங்கெல்லாம் பொதுப் பணி வைபவங்களோ, மகாநாடுகளோ நடக்கின்றதோ அங்கெல்லாம் காணக்கூடியதாகவுள்ள "ராமா" என்று எல்லோராலும் அன்பாகவும், செல்லமாகவும் அழைக்கப்படும் அந்த தசரத மைந்தனான திரு. ராமநாதன் அவர்கள் என் அருகில் வந்து நலம் விசாரித்த பின்னர் "மணிமாஸ்டருக்கு" என்று ஆரம்பிக்க, நானும் அவருக்கு ஏதோ சுகவீனம், ஆஸ்பத்திரி என்று எண்ணி விபரத்தை முழுமையாகக் கேட்ட பின்னர்தான் அவருக்கு கொழும்பில் ஒருவிழா எடுக்கிறார்கள் என்பதை அறிந்தேன். எத்தனை ஆர்வமாகவும், மகிழ்ச்சியாகவும் திரு. ராமனாதன் அவர்கள் அந்த விழா தனக்கு எடுக்கப்படும் ஒன்று என்பது போல் மிகவும் பெருமையுடன் கூறினார். அந்த உயர்ந்த நோக்கு அவருக்கு இயற்கையாகவே அமைந்திருந்தபடியால் நான் வியப்படையவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்னர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களை இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் 20 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இங்கு வரவழைத்து கௌரவித்தமையையும், மற்றும் பல்வேறு சைவஸ்தாபனங்களும், திருக்கோவில்களும் அவருக்கு வழங்கிய பாராட்டுக்களையும் இன்றும் நான்நினைவு கூருகிறேன்.

ஒரு மனிதனின் சேவையையும், அவன் குணாதிசயங்களையும் அவன் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே பாராட்டிக் கௌரவிக்க வேண்டும் என்றும். அவன் இறந்த பின்னர் சிலை எடுப்பதும், பாராட்டு விழாக்கள் ஏற்பாடு செய்வதும் அர்த்தம் இல்லாதது என்றும் இங்கு ஒரு பேரறிஞர் விழாவொன்றில் கூறினார். அந்த வகையிலே இந்த விழாவை திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு எடுப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடு செய்த அனைவரும் போற்றப்பட வேண்டியவர்கள். "மணிமாஸ்ரர்" என்றும் "பாலா மாஸ்ரர்" என்றும் எல்லோராலும் கவரப்பட்ட திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கொம்பனித்தெருவில் உள்ளமும்மினத்தாரின் சொத்தாகவே திகழ்ந்தார். தனது கனிவான பேச்சாலும் நுணுக்கமான அணுகுமுறையாலும் எல்லோரையும் தன்வசப்படுத்தும் ஆற்றல் படைத்தவர் என்றால் அது மிகையாகாது. தற்போது பெருமையோடு ஓங்கி உயர்ந்த திருக்கோபுரத்துடன் காட்சி தரும் அந்த ஆலயமும், சைவமுன்னேற்றச் சங்கமும் வளரக் காரணமாக இருந்து உழைத்த அந்தக் கால கட்டத்தை எவராலும் மறக்க முடியாது. தனிமரம் காடாகாது என்றதற்கிணங்க எல்லோரையும் ஒன்றுபடுத்தி, ஆர்வம் காட்டி வழிகாட்டிய பெருமையும் அவரையே சாரும். "பாலா – "தன பாலா" என்ற திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களும் சி. தனபாலா அவர்களும் நகமும் தசையும் போல் இருந்து இருதூண்களாக விளங்கி ஆற்றிய சேவையை அங்குள்ள மக்கள் மறக்கவே மாட்டார்கள். காலம் சென்ற திரு. திருவிளங்கம் அவர்களால் கோவிலில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுப் பிரார்த்தனை, காலப் போக்கில் எத்தனையோ மாற்றங்களைக் கண்டு, சைவமுன்னேற்றச்சங்கமாக உருவெடுத்து பெலியகொடை, முன்னீஸ்வரம் போன்ற இடங்களில் கிளை விட்டுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக புலம் பெயர்ந்து வாழும் நம் மக்களின் குழந்தைகளுக்கு சைவநெறிகளையும், தாய் மொழியையும் மறவாது போற்றிப் பேணும் பொருட்டு இலண்டனிலும் சைவமுன்னேற்றத்தின் கிளை ஒன்றை உருவாக்கிய பெருமை திரு. பாலசுப்பிரமணியம் அவர்களையே சாரும். கடந்த 30 ஆண்டுகளாக அவர் தன் வாழ்வின் பெரும் பகுதியை சைவமுன்னேற்றச் சங்கத்துக்கும் அந்த திருமுருகன் ஆலயத்துக்கும் அர்ப்பணித்தமையை யாவரும் அறிவர். சில சந்தர்ப்பங்களில் இரவு 11 மணிவரை சிலமுக்கியமான பிரச்சனைகளில் இணக்கப்பாடு காணும் பொருட்டு கோவிலிலோ, சங்க மண்டபத்திலோ அவரை காணக் கூடியதாக இருக்கும். தனது உத்தியோகத்தில் கூட பிரச்சினைகள் ஏற்பட்டவேளை, அவற்றை எல்லாம் பெரிதுபடுத்தி துன்பப்படாமல் தனது பணியிலே தொடர்ந்து சென்றார். ஒரு மனிதன் தன்னை பொதுப்பணியில் ஈடுபடுத்திக் கொள்ள எத்தனையோ விதமான சகிப்புத்தன்மை வேண்டும். ஒரு மனிதனின் உயர்வுக்கு பின்னால் ஒரு பெண் உண்டென்பதற்கிணங்க இவருடைய துணைவியார் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்ததும் இவருடைய உயர்வுக்கும் சகிப்புத் தன்மைக்கும் முதற் காரணம். கண்ணதாசன் கூறியது போல் நிலையாமையே நிலையானதென்ற கருத்திற்கேற்ப இம்மாமனிதர் அந்தத் தத்துவத்தை ஏற்று. வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருப்பதையும், அந்த குறுகிய வாழ்க்கைக்குள் தம்மை அடிமைப்படுத்தாமல் இப்பொதுச் சேவையில் ஈடுபடுத்தியதற்காகவும் மக்களால் வழங்கப்படும் "நன்றிக்கடன்" தான் இவ்விழாவாக அமைந்தது. நம் முருகன் ஆலயத்தின் ஓங்கி உயர்ந்த ராஜ கோபுரம் எவ்வாறு திரு. S. தனபாலா அவர்களின் தலைமையில் உருவாகியதோ அதே போல் குறுகிய காலத்திற்குள் ஓர் தங்கத்தேரை உருவாக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ்சென்ற திரு. C.நடேசன் அவர்களின் திருக்குமாரர் திரு. திருக்குமார் அவர்களை இந்தக் கைங்கரியத்துக்குள் கொண்டு வந்த பெருமை மணிமாஸ்டரையே சாரும். அவரின் தந்தையாருக்கு (Late Mr. C. Nadesan) அந்த நாட்களில் பெரிய தொழிலதிபர்களின் செல்வாக்கும், பெரும் அரசியல் தலைவர்களின் செல்வாக்கும் இருந்தது ஒரு சிலருக்குத் தான் தெரியும். ஒரு தடவை அவர் உயர் அதிகாரியாக இருந்த அந்த வங்கியில் ஒரு நூல் வெளியாகி அதில் முக்கியமானவர்களை வரைவிலக்கணங்காட்டி விளக்கி இருந்தார்கள். அதில் திரு. திருக்குமார் அவர்களின் தந்தையை (Late Mr. C. Nadesan) " THE AXIS ON WHICH I - O - B - ( Indian Overseas Bank) EXISTS." என்று குறிப்பிட்டிருந்தார்கள். உண்மையிலே அந்த நாட்களில் அந்த மாமனிதர் தான் அந்த வங்கியைத் தாங்கிக் கொண்டிருந்தார். அந்தத் தந்தையின் மைந்தனை இப்பொதுப் பணிக்கு ஈடுபடச் செய்த பெருமை திரு. பாலசுப்பிரமணியம் அவர்களையே சாரும். இவற்றை எல்லாம் நன்குணர்ந்த பெருமக்கள், இவ்விழாவை திரு. பாலசுப்பிமணியம் அவர்களுக்கு எடுக்க வேண்டும் என்பதை நினைக்கும் போது நன்றிக் கடன் என்பதன் அர்த்தம் புலனாகிறது.

கடைசியாக நம் கொம்பனித் தெருவில் நடுநாயகமாக வீற்றிருக்கும் அந்தச் சிவ சுப்பிரமணியம். இந்த பாலசுப்பிரமணியத்தை என்றும் பால – சுப்பிரமணியனாக இருக்க அருள்பாலிப்பாராக!

THE REAL SACRIFICE - Sacrifice is when we think less and less of ourselves and more and more of others. It is to Spend yourselves in service. A kind word, helping hand, a supporting Shoulder - such little deeds of service are Real Sacrifice - we find all these qualities in our K. B, the J.P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலசம்
KALASAM
Religious Quarterly Magazine

# மனிதர்களே! வாழ்த்த வாருங்கள் மணி மாஸ்டரை

ச. ஆனந்ததியாகர்

அன்புக்குரி மணி மாஸ்டருக்கு வாழ்த்தெழுதும் இந்த நேரத்தில் மனதில் பல நினைவுகள் எழுகின்றன. பல ஆண்டுகளின் சரித்திரங்கள் நெஞ்சில் நிழலாக ஓடுகின்றன. இத்தனையையும் கட்டுப்படுத்தி ஒரு வாழ்த்தாக எழுதிவிடுவது சுலபமல்ல. ஆனால் இங்கு பதிக்கின்ற ஒவ்வொரு வார்த்தையிலும் பலரது சார்பாக நிறைவான நல் வாழ்த்துக்கள் கலந்திருக்கின்றன.

முதற் கண், இவ் வாழ்தெழுதுவதால் நாம் உயர்ந்து விட்டோம். மிக நீண்ட காலமாகச் சிவப் பணி செய்கின்ற சீலர்களை வாழ்த்துவதும் அப் பணியைப் போற்றுவதும் சிவபெருமானுக்குச் செலுத்துகின்ற வழிபாடாகி அவை சிவனைச் சென்றடையும் அர்ச்சனையாகின்றன. எனவே மணி மாஸ்டரை வாழ்த்துவதால் ஒரு நல்ல செயலில் பங்கெடுத்த பெருமையை நாமும் பெறுகின்றோம். இன் சொல்லொன்று சொல்வது மொழியால் நாம் செய்கின்ற அறமாகின்றது. 'யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே' என்றார் திருமூலர் எனவே மணி மாஸ்டரை வாழ்த்தக் கிடைக்கின்ற இச் சந்தர்ப்பம் எமக்கு இன்னொரு அறச் செயலைச் செய்ய வழி வகுக்கின்றது. இது மேலோர் எப்போதும் தருகின்ற நன்மைகளுள் ஒன்று. மேன் மக்களின் சிறப்பு நிலைகளுள் ஒன்று.

மணி மாஸ்டரின் சிவப் பணியை உணர்ந்து அவருடைய வாழ் நாளிலேயே அதைப் பாராட்டுவது நன்றி மறவாத நற் செயலாகின்றது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் எமக்கு மணிமாஸ்டரின் தொண்டின் உயர்வை சற்று நேரம் சிந்திக்க வைக்கின்றது. இவருடைய இப்பணி இல்லாமல் இருந்திருந்தால் என்னவாகியிருக்கும் என நினைக்க வைக்கும் நேரமிது. இப் பணியில் ஈடுபட்டதால் அவருடைய வாழ்க்கையில் அவருக்கு ஏற்பட்ட இன்னல்களைத் திரும்பிப் பார்க்க வைக்கின்றது – அவற்றையும் கடந்து அவர் செய்யும் சேவையைப் பார்த்து வணங்கச் சொல்லும் நல்ல நேரமிது. மனமாற வாழ்த்துவதும் நிறைவான பலவற்றை எண்ணிப் பார்த்து பாராட்டுவதுமே நாம் செய்யக் கூடிய குறைந்த அளவு அல்லது ஒரு சராசரிக் காரியமாகும். எனவே மனிதர்களே ஏன் தயக்கம்? வாருங்கள் வாழ்த்துவோம். அல்லது பாவம் செய்தவர்களாகிவிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ உலகம் மணி மாஸ்டரின் உறவை மறந்து விட முடியாது முக்கியமாக கொழும்பு வாழ் சைவ மக்கள் நெஞ்சங்களில் மணி மாஸ்டரின் தொண்டின் சிறப்பு என்றென்றும் நிலையான ஒன்று. இன்று இலண்டனில் புகழுடன் இயங்கும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் இன்றைய நிலைக்கு எமது தாய்ச் சங்கத்தின் உறுதியான வளர்ச்சிதான் மூல காரணம். தாய்ச் சங்கத்தை அந்த மேலான நிலைக்குக் கொண்டு வரப் பாடுபட்ட பலரது பெயர் வரிசையில் முதலில் எழுதப்படும் பெயர் திரு. கந்தையா பாலசுப்பிரமணியம் தான். இதை மாற்றிவிட இனி ஒரு சரித்திரம் படைக்க வேண்டும். அது எனது வாழ் நாளின் போது நடக்கும் என்ற நம்பிக்கை இல்லை. எனவே இந்த உறவைப் போற்றுவோம், பாதுகாப்போம். நன்றியுள்ள மனிதர்களாக நடப்போம். இதிலே பின்னிற்க வேண்டாம். அப்படிப் பின் நிற்பவர்களை அளக்கும் அளவு கோல் ஒளவையின் பின்வரும் பாடல்.

*அற்றகுளத்தி னறுநீர்ப் பறவை போல்*
*உற்றுழித் தீர்வா ருறவல்லர் – அக்குளத்திற்*
*கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே*
*ஒட்டி யுறுவா ருறவு.*

குளத்தை விட்டகலா கொடியைப் போல் இன்று ஒன்று சேர்ந்து வாழ்த்திப் பெருமைப்படுவோம். இந்த மணி விழாவின் மணியோசை கொம்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மணி ஒலியாக எல்லோரது நெஞ்சங்களையும் நிறைக்கட்டும். மணி மாஸ்டரும் அம்பி அக்காவும் இவர்களது சந்ததியும் முருகனது பராமரிப்பில் என்றும் இருப்பார்கள். இது சைவம் கூறும் சத்தியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KALASAM
Religious Quarterly Magazine

*கலசம் ஆசிரியர்*
## மு. நற்குணதயாளன்

ஓம் நமசிவாய !

பூமியிலே உயிர்கள் படைக்கப்படுவதில்லை என்பது சைவ சமயத்தின் அடிப்படைக் கோட்பாடு. அப்படியெனில் எப்படி உயிர்கள் வந்தன என்பது வினாவாகின்றது.

இவ் வினாவுக்கு இலகுவான விடை உயிர்கள் உலகில் இருந்தன என்பதே. அப்படியாயின் நாங்கள் வணங்குகின்ற இறைவனின் பணி என்ன என்னும்போது அவரே இந்த உயிர்கள் ஆயினார் என்பது அடுத்த மிக இறுக்கமான பதிலாகின்றது. அதாவது ஒவ்வொரு உயிரும் இவ்வுலகில் இறைவனின் அம்சங்களே என்பது சைவ சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

ஆக சில ஆத்மாக்களில் இறைவனின் அம்சம் கூடுதலாக இருக்கின்றது. இப்படியான ஓர் ஆத்மத்தின் அடைக்கல உடம்பைக் கொண்டவரே மதிப்புக்குரிய கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள். பெரியவர் மாஸ்டர் எனச் செல்லமாக அழைக்கப்படுகின்ற பாலா அவர்களுக்கு மணி விழாக் கொண்டாடும் இவ் அரிய வேளையில் கலசம் அதனைத் தனது விழாவாக எண்ணி இறும்பூ தெய்துகின்றது. சேவை செய்தே தேய்ந்து போன இம்மனிதரை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. சொற்களுக்குள் அடங்காத சேவையின் சொந்தக்காரர் இவர்.

இன்னும் இன்னும் பல காலம் இவர் வாழவேண்டும்.
என்றும் இவர் நெஞ்சம் மக்களுக்காய் உழைக்கவேண்டும்.
நன்று இவர் மனமும் நன்று என நாள்தோறும் மானிடர்கள் கூறவேண்டும்.
மன்றுகளில் மாமனிதராய் இவர் தினமும் விளங்க வேண்டும்

ஓ நமசிவாய !

10. 10. 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ முன்னேற்றச் சங்கம் சிலாபம்

# "வாழ்க பல்லாண்டு"

ராஜகுரு சேனாதிபதி கனகரெட்னம்

அறுபது நிறையும்
அருமை நண்ப
நீ, வரைந்த ஓவியங்கள்
செதுக்கிய சிலைகள்
கட்டிய கோயில்கள்
அழகிய கோபுரங்கள்
எத்தனை, எத்தனை

ஆக்கியோர் ஆளானோர்
அறவழி காட்டியோர்
எத்தனை எத்தனை
அத்தனைபேரும்
இந்த அருமை நன்னாளில்
என்றுமுள நம் தமிழ் போல்
பல்லாண்டு பல்லாண்டு
வாழ்கவென வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைக்கோர் சேனாதிபதி

## திருமதி லோகேஸ்வரி நவரட்ணம்



கொம்பனித்தெரு மக்களுக்கோர் சைவ முன்னேற்றச் சங்கம் காலப்போக்கில் உலகளாவிய சைவ முன்னேற்றச் சங்கமாக உருவெடுத்து மிளிர்கின்றது. இதற்கெல்லாம் காரண கர்த்தா யார்? எங்கள் முன்னை நாள் சைவமுன்னேற்றச் சங்க கௌரவ பொதுப் செயலாளர் கௌரவ க. பாலசுப்பிரமணியம் அவர்களே சேவையின் சிகரம் என்று கூறவேண்டும். தன்னலமற்ற செயல் திறன். எல்லோரையும் சகோதரர்கள் போல் ஒன்று திரட்டும் பேராற்றல், துணிவு எல்லாம் நிறைந்த மனிதர் மக்களுக்கு கிடைத்த பெரும் வரப்பிரசாதம்.

இவர் ஆற்றிய தொண்டுகள் எண்ணிலடங்காது. பிறமத சூழலில் வாடிய மாணவர்கள் சமயக் கல்வி பெற்று. நல்வழி செல்ல. நால்வர் சமயப் பாடசாலை அம் மாணவர்களுக்கு கடந்த 10 ஆண்டுகாலமாக சத்துணவு அவர்களின் கல்வி வளர்ச்சிக்கான பல வழிமுறைகளை நால்வர் சமயப் பாடசாலை மூலம் ஆற்றுவித்தார். நல்ல பல பெரியார்களின் ஒத்துழைப்புடன் பாரிய பல திட்டங்களை சைவமுன்னேற்றச் சங்கத்தால் முன்வைத்தார். அது மாத்திரமின்றி, அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலயத்திலும் சொல்லில் அடங்கா பணிகளை புரிந்துள்ளார். பெரியோர் முதல் சிறியோர் வரை அறிந்த தெரிந்த மணி மாஸ்ரர் லண்டன் மாநகரில் ஒரு சைவமுன்னேற்றச் சங்கம் பேலியகொடையில் ஒரு சைவ முன்னேற்றச் சங்கம் சிலாபத்தில் ஒரு சைவமுன்னேற்றச் சங்கம் இப்படி பல திக்கிலும் உருவாக்கினார். அப்பெருமையெல்லாம் அன்னாரையே சாரும். கடந்த 44 ஆண்டகளாக. சைவத்திற்கு தமிழுக்கும் அவர் ஆற்றிய பணி. எவருக்கும் எளிதில் கிடைக்காது அது முருகப்பெருமான் பெரும் வரம்அவருக்கு. 1953.3.29 ந் திகதி ஆரம்பித்த எமது பாடசாலை இன்று வரை அழியாப் புகழுடன் திகழ்வதற்கு காரணம் இவரின் அயராத உழைப்பு கொழும்பில் இருக்கும் மக்களுக்கு மட்டு மன்றி வடக்கு, கிழக்கு மக்கள் அல்லலுறும் பொழுது உலர் உணவு, உடை முதலியவற்றை சேகரித்து பல இடர்களுக்கு மத்தியில் அனுப்பி வைத்தார். தொண்டரணி, மாதரணி என்றெல்லாம் ஸ்தாபித்து சங்கத்தை வெற்றி நடை போட வைத்துள்ளார்.

மேலும் சமய சமூக மேம்பாட்டிற்காக அவர் மேற்கொள்ளும் எல்லா முற்போக்கு முயற்சிகளும் இறையருளால் இனிதே, இனிமேலும் வெற்றி பெற வேண்டுமென்றும் இளையவன் முருகவேளை சிரத்தையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

*வெற்றிவேல்! வீரவேல்!!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் அடக்கமும் நிறைந்த பண்பாளர்

அன்னலட்சுமி இராஜதுரை

*சிரேஷ்ட பத்திரிகையாளர் வீரகேசரி*

என்கடன் பணிசெய்துகிடப்பதே என்ற உயரிய கொள்கைக்கு ஏற்ப வாழ்ந்து வருபவர் இறைபணிச் செம்மலான திரு.க. பாலசுப்பிரமணியம் அவர்கள்.

தமிழும் சைவமும் இருகண்களென வாழ்ந்து அரும்பணியாற்றிய நல்லை நகர் நாவலர் அவர்களின் வழியை தனது வழியாகக் கொண்டு, தம்மாலான இறைபணிகளை அவர் ஆற்றிவருவதை சைவ உலகம் நன்கு அறியும்.

திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களைக் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேல் நான் அறிவேன். கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமியின் திருவருட்கடாட்சம் மிகப் பெற்று, இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு இவர் தம்மாலான அனைத்துப் பங்களிப்பையும் வழங்கி வருவதும் நாமறிந்ததே. இவரைப் போன்ற சைவ அடியார்களின் மெய்த் தொண்டினால், இன்று இவ்வாலயம். தலைநகரில் இராஜகோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. சைவத் தமிழ் உள்ளங்களைக் குளிர்விக்கின்றது.

கொழும்புத் துறைமுகத்தைச் சேர்ந்த ஓர் உத்தியோகத்தராக இவர் கடமை புரிந்த போதும் இவரது கண்ணும் கருத்தும் ஆலயப் பணிகளில் நிலைத்திருந்ததினால் உத்தியோகத்தையும் இழக்கும் நிலை ஏற்பட்டது இருப்பினும் மனந்தளராது, "கைவிட மாட்டான் கந்தப் பெருமான்" என்ற பூரண நம்பிக்கையோடு, தொடர்ந்தும் உற்சாகமாக இறைபணியாற்றி வந்ததும் நாம் அறிந்ததே. எங்கும் நிறைந்த, எல்லாம் வல்ல முருகப் பெருமானின் கருணையினால், அவர் அனைவரதும் அன்பைப் பெற்று சிறப்புற வாழ்ந்து வருவது நமக்கு மகிழ்ச்சி தருவது.

உயர்கல்வி பெற்றுவிடுவதால் மட்டும் ஒருவர் சிறந்த மனிதராகி விடுவதில்லை. பிறரை நேசிக்கும் பாங்கு, மற்றவர்களை பொதுநோக்கிற்காக அரவணைத்தல், பண்போடும், இங்கிதமாகவும் பழகுதல், பிறர் நலன் விரும்புதல் போன்ற நற்பண்புகள் ஒரு சிறந்த மனிதனை நமக்கு இனங்காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. பாலசுப்பிரமணியம் அத்தகைய ஒருவர் என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கொம்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய பரிபால சபைப் பணிகளுடன் மாத்திரம் அவர் திருப்தி அடைந்தாரில்லை. அத்தோடு இணைந்ததாக, கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கம் அமைந்தமை அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய சமய குரவர்கள் நால்வருக்கும் மணி மண்டபம் அமைத்தமை, ஞாயிறு சமயப் பாடசாலை, தொண்டரணிகள் அமைத்து நல்ல பல பொதுப்பணிகளை செயற்படுத்தியமை ஆகியவற்றிலும் இவர் கணிசமான பங்கு கொண்டிருக்கிறார். திரு. பாலசுப்பிரமணியத்தின் நிர்வாகத் திறனுள்ள சிறப்பான பணிகளே, அவர் பேலியகொடை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய பரிபாலன சபைப் பணிகளோடும் இணைத்துவைத்துள்ளன என நான் நம்புகிறேன்.

நல்லவரும் வல்லவருமான அன்னார் அறுதாம் அகவை எய்தும் இவ்வேளை, அவர் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து இறை பணியாற்ற எல்லாம் வல்ல ஸ்ரீ சிவ சுப்பிரமணியம் பெருமான் அருள் புரிவாராக. அவரது மணிவிழா மலருக்கு இச்சிறிய வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

06. 10. 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க வளமுடன்!

**Dr. திருமதி இந்திரா சத்தியநாதன்**
சுதேச வைத்திய தேசிய நிறுவனம், நாவின்ன



எல்லோருக்கும் மிக இனியவரும் நல்லவருமான அன்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் மிக அமைதியானவர். அடக்கமான முருக பக்தர். துறைமுக இலாகாவில் சேவையாற்றும் காலத்திலேயே இறை பணியையும் மேற் கொண்டார். சைவ முன்னேற்றச் சங்கத்தின் வரலாற்றில் திருவாளர் பாலசுப்பிரமணியத்தின் பணி பதிந்துள்ளது. அதன் தோற்றம், வளர்ச்சி என்பவற்றின் முதுகெலும்பு அன்னாரே ஆவார். சிவசுப்பிரமணிய கோவில் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களை நினையாது இருக்க முடியாது.

சுமார் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பே தலைநகரில் சைவம் வளர அரும்பாடுபட்டு பணியாற்றும் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் அறுபதாம் அகவையில் பாதம் பதிக்கும் இந் நாளில் பல்லாண்டு வாழ்ந்து மேலும் சைவம் வளர பணியாற்ற தமிழ்த் தெய்வம் முருகனின் அருளும் ஆசியும் அளிக்க வேண்டுகிறேன். வாழ்க வளமுடன்! ஓங்குக பணி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aru. Thirumurugan, B.A.
Teacher

# அருந்துணை செய்யும் அற்புத மனிதன்

செஞ் சொற் செல்வர் ஆறு. திருமுருகன் (B.A. Dip. in-Ed)
*(பலாலி இணுவில்)*

முருகனே! மூச்சு என்றும் வாழும் பிறவி, ஊர் அடங்கலாம். ஓயாது மாரி யொழியலாம், ஆனால் மணியம் ஐயா என்ற மானியம் ஓய்ந்ததில்லை.

கொம்பனித்தெரு முருகனுக்கு பலநூறு திருப்பணிகள் தொடக்கி, வானுயர்ந்த கோபுர வாயிலோடு கொலுவீற்று இருக்கச் செய்த தொண்டர்க்கு தொண்டன். தங்கரதத்தில் தமிழ்த் தெய்வம் முருகவேளை தலைநகரில் வீதியுலாச் செய்த மீளா அடியவர்களில் முதலாம் அடியவர். கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் சரித்திர நாயகன். அண்டி வந்து ஆறுதல் கேட்பவர்க்கு அஞ்சலஞ்சேலென்று கூறி அருந்துணை செய்யும் அற்புத மனிதன். தலைநகரில் சைவத் தமிழ் விழாக்களை ஏற்படுத்திய வரலாற்று நாயகன்................

என எல்லையில்லாத அரிய பணிகளை அடுக்கிக் கொண்டே போகலாம். சிவநெறிச் செம்மல் கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கட்கு அகவை அறுபது நிறைவது அறிந்து அகமகிழ்கிறேன். வாழ்த்துதலுக்கும் போற்றுதலுக்குமுரிய மகத்தான மனிதரை தலைநகர் வாழ் மக்கள் மட்டுமல்ல உலகம் வாழ் சைவ நிறுவனம் சார்ந்த அன்பர்கள் அனைவரும் அறிவர். முத்தமிழ் கலைஞர்கள் முதல் சிற்ப ஓவியக் கலைஞர்கள் வரை தலைநகரில் அன்பர் பாலசுப்பிரமணியத்தின் அரவணைப்பில் அகப்பட்டு ஆனந்தம் கொள்வர். கலைஞர்களை கௌரவிப்பதில் ஆதீத பிரியம் கொண்டவர் இவர். சமுதாயப்பணிகளுக்காக தனை அர்ப்பணித்து பணியாற்றும் இப் பெருந்தகை எத்தகைய சஞ்சலங்கள் தன்னைச் சூழ்ந்தாலும் வேலுண்டு வினை இல்லை என்று விட்டு தன் கடன் பணி செய்தல் என வாழும் அற்புதம் யாவரும் அறிவர்.

செயற்கரும் பணிகளோடு சிறப்பாய் வாழும் பாலசுப்பிரமணியனார் நிறைந்த தம்பதிகளாய் பல்லாண்டு பல்லாண்டு வாழ இறைவனை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சஷ்டியப்த நாயகன்"

கனகசபாபதி நாகேஸ்வரன் B.A. (Hons.), M.A

பேரன்புடையீர்! பணிவான வணக்கம்



திரு. க. பாலசுப்பிரமணியம் J.P. அவர்களின் மணி விழாச் சிறப்புற்றமைய வேண்டும் என்று அம்பிகை நாகபூசணியைத் தொழுதிறைஞ்சி வேண்டுகிறேன்.

பணிகளுட் சிறந்தது சமயப்பணி. காரணம் சமூகம் நன்றியறிதலுடன் பணிக்குரிய பலாபலன்களை நல்க மாட்டாது. ஆனால் இறைவன் சமூக, சமயப்பணிக்குக்குரிய பெரும்பயனை நல்குவான். சமூகப்பணியில் 'திருப்தி' என்பதில்லை. ஆனால் சமயப்பணியிலே ஆத்ம திருப்தி கைகூடும் முருகனது பால வடிவம் உள்ளத்திலே என்றென்றும் சாந்நித்யமாய் நிற்பது. பெயருக் கேற்பவும் கலியுகவரதனாம் சுப்பிரமணியரின் திருவருள் போலவும் அசுரர்க்கும் அன்புசெய்யும் உளவளம் வாய்த்தவர் சஷ்டியப்த நாயகன் சமாதான நீதிவான் க. பாலசுப்பிரமணியம் அவர்கள். சிவத்தொண்டன் என்னும் பட்டம் மிகமிகப் பெரிது. சிவதொண்டு அன்பு; அறம்; நீதி; வாய்மை; பொதுநலன்; பரோபகாரம் எனும் ஐந்து தூண்களினாலும் அசையாது உறுதிபட அமைவது. மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி தருவதிலே மகிழ்கிறேன். நீடு வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அப்பாவிற்கு அன்புநிறைந்த வாழ்த்துக்கள்

திருமதி முகுந்தன் ஆனந்தரூபி - கனடா



எனக்கு என்றுமே அப்பா என்பதில் பெருமிதம் கலந்த கர்வம் உண்டு. எம் நினைவு தெரிந்த நாளில் இருந்து அப்பா என்ற சிந்தனையோடு 'சைவ முன்னேற்றச் சங்கமும், கொம்பனித்தெரு முருகன்' ஆலயமும் நினைவில் நின்றிருக்கிறது. அந்தளவிற்கு அப்பாவின் வாழ்வில் பொது வாழ்வும் இரண்டறக் கலந்துள்ளது.

கொம்பனித் தெருவைப் பொறுத்தவரையில் சிறார் முதல் பெரியோர்கள் வரையில் 'மணி மாஸ்டர்' அன்பிற்குரியவர். அத்தோடு மட்டுமன்றி உற்றாராய் உறவினராய் அன்பினிலே கலந்தவர்,
'சைவ முன்னேற்றச்சங்க' வரலாற்றிலோ, அதன் 'மணி மண்டபத்திலோ, சங்க செயற்பாடுகளிலோ, கொம்பனித் தெரு முருகன் ஆலயத்திலோ, அதன் பணிகளிலோ அப்பாவின் உணர்வு பூர்வமாக ஒன்றிய உழைப்புண்டு. அப்பாவின் பொழுதுகள், சிந்தனைகள் எங்களோடு, எங்களுக்காக என்று கழிந்ததைவிட சங்கம், கோவில் என்றே நகர்ந்திருக்கின்றது.

கொம்பனித் தெருவும், முருகன் ஆலயமும் அப்பாவினதும் எமதும் உணர்வோடு ஒன்றிவிட்ட ஒன்று. முருகன் நம்பினோரைக் கைவிடான் என்ற வாக்கு என்றுமே பொய்த்ததில்லை. அப்பாவினது பணிகளில் முருகனே வழிநடத்தி காத்து வந்துள்ளான். என்றும் முருகன் அருளாசி எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திக்கிறேன். அத்துடன் எங்கள் அப்பாவிற்கு மணி விழா எடுக்கும் பெரியோர்களை நன்றியோடு நினைவு கூறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்

## அறுபது வயதுவரை
## 30 வருடங்களும் அதன் தொடர்ச்சியும்

திரு. அ. சோமசுந்தரம் J.P. *துணைத்தலைவர்,*



*ஆயிரம் கோடி அறிஞர்கள் பற்பலர்*
*அறிவுடன் கூடிய அடியவர் அதில் சிலர்*
*சேவையில் உயரிய செயல்வீரர் அவர்*
*தேடாமல் கிடைத்த செல்வம் அவர்*
*செல்லமாக அழைக்கும் ''மணி மாஸ்டர் அவர் ''*

*முப்பது ஆண்டுகள் முப்பதினாயிரம் சேவைகள்*
*முத்தமிழ் வேந்தர் நின்றால் முறையாக வாழ்த்திருப்பானே*
*தமிழ் வளரட்டும், சமயம் வளரட்டும் – தலைநகரில் மட்டுமல்ல*
*தரணியெல்லாம் தழைக்க என்று*
*தவத்திரு தோற்றம் பெற்றவர் – மணி மாஸ்டர் அவர்*

*எங்கு பிறந்தேன் நான்? எப்போது பிறந்தேன் யான்?*
*என்ற இரண்டும் எனக்கு ஏற்புடையதன்று*
*எங்கும் தமிழ் வளர்ப்பேன் நான் எப்போதும் சமயம் வளர்ப்பேன் யான்*
*அவையிரண்டும் முடிவிலியாகத் தொடர்வேன் நான்*
*என்ற எண்ணம் கொண்டவர் – 'மணி மாஸ்டர் அவர் '*

*சங்கம் தோன்றியது அது சைவ முன்னேற்ற சங்கமாக கொழும்பில் தோன்றியது.*
*பின் ஸ்ரீ சிவசுப்பிரமணி சுவாமி கோவிலின் ஓர் அங்கமாக தோன்றியது.*
*உருவாக்கம் தொடர்ந்தது. அதன் விளைவானது லண்டன், பேலியாகொடை*
*உடப்பூர் வரை சைவத்தமிழ் விரிவாக்கம் வளர்ந்தது*
*அந்த விரிவாக்கத்திற்கு உரமானவர் – 'மணி மாஸ்டர் அவரே*

*புகழுக்கும் புகழ் சேர்க்கும் புதுமையொன்று நடந்தது கொம்பனித்தெருவில்*
*நான் நினைத்திருக்கவில்லை. நம்மால் நினைக்கவும் முடியவில்லை. மறுக்கவும் முடியவில்லை*
*இறைவன் சித்தம் அவன் ஆணை. இறைமகன் இவர் வடிவில்!*
*எழுந்தது ராஜகோபுரம் 81 அடி. இதனிருமருங்கும்/ மணிக்கூட்டு மணிக்கோபுரங்கள்*
*எட்டுத் திக்கும் எண்ணிலாச் சைவர் போற்றத்தக்கவர் – ''மணி மாஸ்டர் அவரே''*

*சில வருடங்களின் பின் சிவசுப்பிரமணியன் திருத்தலத்தில் சிறப்பொன்று நடந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத்தேர் பவனிவந்தது. தமிழ் உள்ளங்கள் தழைக்க என
இதனால் ''சைவப் புரவலர் என்னும் புகழ்ப்பெயர் தானாக வந்தது இலண்டன் நகரினிலே
தகுந்தவர் / தக்கார் / தலைசிறந்தவர் / தன்னலம் கருதார்
திறமையில் மிக்கார் / தெய்வத் தொண்டன் திருவாளர் – மணி மாஸ்டர் அவரே

தேடித் தேடிச் சேர்க்கும் செல்வங்கள் 'சில'
தேடலின்றி செய்கையால் சேவையால் கிடைக்கும் செல்வங்கள் 'பல'
கிடைத்தன செல்வங்கள். உயிர்செல்வங்கள் அவை உறவினராக / உயர்கொடுப்போனாக
40 அங்கத்தவர்கள் கொண்ட நம் குடும்பம் போல்
நாற்பதினாயிரத்திற்கும் மேலான உறவுச் செல்வங்கள் கொழும்பில்
''மணி மாஸ்டர் அவருக்கே"

நிழலுக்கும் நிழலாகத் தயங்காதவர், தயாள குணம் கொண்டவர்
பரந்து கிடக்கும் பள்ளத்தாக்கைப் போல் செயல் பரப்புபவர்
கோபத்தில் உரைநடத்தினாலும் கோபிக்கத் தெரியாதவர்
மன்னிக்கும் மனம் கொண்டவர், மழலைகளுடன் மனம் விட்டு பேசக்கூடியவர்.
உற்றாரும் மற்றோரும் மதிக்கத்தகுந்தவர் ''மணி மாஸ்ரர் அவர்(ஐ)

மகான்களிடமும் மதியற்றோரிடமும் முறையாக உரையாடுபவர்
முத்தமிழையும் முயன்று வளர்த்தவர். முதுகெலும்பு போன்றவர்
60 வயதினில் அறத்தினில் சிறந்தவர். ஆயிரத்தில் ஒருவர் இவர்
அத்துணைக்கும் என் குடுபத்தில் ஓர் அங்கத்தவர்
சர்வமும் சங்கமமாகும் சாகரமானவர் ''மணி மாஸ்டர் அவர்"

நும்பணி விண்பணியாய் வளர்
நூற்றாண்டுக்கும் மேலான விழா கொண்டாடி மகிழ வாழ்த்துகிறேள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Justice of Peace (Whole Island)
Fax : 450044
PRAY FOR PEACE
Colombo - 10, Sri Lanka
Date.............................

# மணிவிழா

# வாழ்த்துப் பாமாலை

பெறுபவர் : திரு. கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள்
(சமாதான நீதிவான்)

அளிப்பவர்: கவிஞர் கலாநிதி வேலணை வேணியன்

காலம் : 31.10.99 ஞாயிற்றுக்கிழமை

நல்லைப் பெருமான் பதிகொண்ட நல்லைப்பதி அருகே
எல்லையில் இருபாலை எழிலோங்கும் பெருங்கிராம மதாம்
அல்லல் அகற்றி மகிழ் ஐங்கரன் பதியுமிங்கேதான்
வல்ல அவன் கணபதியே என்கவிதைக்குக் காப்பாமே

இருபாலை நற்பதியில் வாழ்ந்த பெருநல்லாசான் கந்தையா
மருவின் மனையாளோ நற்புகழ்சேர் நாகரத்தினம்
திருபெருகு மகனாகப் பெற்ற செல்வம் பாலசுப்பிரமணியம்
அருமைமிகு எனதன்பர் தொண்டர்க்குத் தொண்டனிவர்

கற்பக விநாயகர் துணைகொண்டு கல்வியில் மிகத் தேறி
பற்பல சேவையில் பணிபல புரிந்த பெருவள்ளல் இவர்
அற்புதமாகச் சைவத் திருப்பணி பல புரிந்தே தானும்
மற்றவர் இன்றும் போற்றும் மட்டிலாத் தொண்டராயே

மேலை நாடுகள் சென்று மேன்மைகள் பலவும் பெற்றேன்
காலை மாலை கந்தன் புகழது பாடியாடிநின்ற செம்மல்
சீலமாய் நின்று சீர்மிகு பட்டங்கள் பலவும் பெற்று
ஞாலமே என்று போற்றும் பாலா நலமுற வாழ்க

எம்பிரான் முருகன் எழுந்து தான் அருள் பாலிக்கும்
கொம்பனித் தெரு முருகன் அருள்பல பெற்ற தொண்டன்
நம்பினோர் பலருக்கெல்லாம் நன்மைகள் புரிந்த வள்ளல்
எம்பிரான் துணையாய் இன்று அகவை அறபது கண்டாய்

என்றும் நீ எமக்கு ஈடிலாப் புகழ் தேடித் தந்தோன்
நன்று நின் பணிகள் யாவும் நாடது போற்றுமென்றோ
குன்றுதோ றாடும் குமரன் கொடைபல பெற்று நீயே
நின்று வாழ் பல்லாண்டு! பல்லாண்டு! நீடிய புகழே பெற்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா மலர வாழ்த்துகிறோம்

திருமதி, ரதினிபிரதீப்குமார்
*(சை. மு. முன்னாள் ஆசிரியர்)*



தமிழும் சைவமும் இரண்டறக் கலந்து
தரணியில் வாழ்ந்திட்ட மாமனிதர்
அளப்பரிய தொண்டுகள் ஆற்றியே
அகம் மகிழ வாழ்ந்திடும் பெருமகனார்
கொழும்பு மாநகர் தனிலே மிளிர்ந்திடும்
கோபுரம் கொண்டுள்ள பன்னிருகையாளனுக்கு
எண்சாண் உடம்பாலே உருகி தொண்டுகள் ஆற்றி
எட்டுத்திக்கும் வியக்கும் வண்ணம் வாழ்ந்திடும் பெருமகனர்!

மணியின் நாதம் தனிலே – நாம்
மணி மாஸ்டரின் குரலோசை கண்டோம்
அவரின் அடக்கமான புன்னகையிலே
அறிஞர் பலரைக் கண்டோம்
எங்கு அவர் பிறந்தார் என்பதைவிட
எங்கே அவர் வாழ்கின்றார் என்பதை
இங்கு நெஞ்சங்கள் வரிவரியாய்
இயம்பிடும் வாசகங்களில் கண்டோம்!

ஆதவனின் பொற்கரங்களின் வண்ணங்களை
ஆணித்தரமாய் தனக்குள்ளே மிளிர வைக்கும்
மாண்புமிகு மணிமாஸ்டரின் உன்னத
மாட்சிமை பொருந்திய சேவைகளை
சந்தங்களாக சுரங்கள் பாடி
சரித்திரம் படைக்கும் மணி விழாவில்
வாசகங்களையும் எம் நேசங்களையும் சுமந்து
வலம் வரக்கண்டோம் இம் மணி மலரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகங்கள் மாற்றப்பட்டாலும் – அவர்
வாழ்ந்த வாழ்க்கையின் நினைவுகள்மாற்ற படுவதில்லை
என்பதற்கோர் எடுத்துக்காட்டு – அங்கு வீற்றிருக்கும்
எம் சைவ முன்னேற்றச் சங்கமன்றோ!
மாதர் அணியாம் தொண்டர் அணியாம்
மாணவர் அணியாம் ஆட்சிக்குழுவாம்
அனைத்தையும் வீறு நடைகொள்ளச் செய்தவர்
அவனியில் அதன் சேவை ஓங்கச் செய்த பெருமகனார்!

உலக சாதனையாம் சந்திரனில்
உலகோர் வியக்கும் வண்ணம்
சங்கத்தின் சேவையையும் பண்பையும்
சரித்திரங்களின் பக்கங்களுக்கு – வித்திட்ட நாள்
சந்திரனில் நீல் ஆமஸ்ரோங் காலடி வைத்தார் – எம்
சங்கத்தின் நீங்கா நினைவு புகழ்
தொண்டர் அணியெனும் இளைஞர் குழாம்
தொண்டாற்றும் பணியின் அன்று ஆரம்பமானது!

அன்று தொண்டர் எனும் பயிரை
அறுவடை செய்தே வளர்த்து – இன்று
தங்கத் தேரின் அச்சாணிக்கு
தன்னையே வித்திட்டார்
அழகு புகழ் இராஜ கோபுரத்திற்கு
அனைவரையும் கரம் கோர்த்து
ஆலோசனைகள் பல நல்கி அடுக்கடுக்காய்
ஆலயம் அமைத்த பெருமகனார்.

அன்றைய அணியின் கௌரவ செயலாளர்
இன்றைய மணிமலரின் விழா நாயகன்
சங்க காலத்தில் தமிழ் வளர்த்த பெருமையை
சைவ முன்னேற்றச் சங்கத்தினால் பெற்றுக் கொண்ட – மணிமாஸ்டரே
நின் ஆவல் வளரவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின் சேவை ஓங்கவேண்டும்
நின் புகழ் எங்கும் பரவ வேண்டும்
நீவிர் நீடுழி இப்புவியல் வாழ வேண்டும்!

ஒடையில் என் சாம்பல் கரையும் போது
ஒண் தமிழே நீ கலகலத்து ஒடவேண்டும் – என்று
ஆயிரக்கணக்கானோர் முன் தன் உரையில்
ஆவேசமாகக் கூறியதும் நம் மணிமாஸ்டரன்றோ!
நின் சேவை வையத்தில் சிறந்து
நின் குடும்பம் பல்லாண்டு வாழ்ந்து
சரித்திர ஏட்டில் ஒரு பக்கத்தை
சொந்தம் கொள்ளட்டும் உங்கள் திறமை!

சோழமன்னன் இந்நூற்றாண்டில் வாழ்ந்திருத்தால்
சொக்கிப் போயிருப்பான் இவர் சேவையால்
அரியாசனம் அமைத்து மணிமாஸ்டரை
அச் சபைக்கே அரசனாக்கியிருப்பான்!
எங்கே சோழனே! தமிழையும் சைவத்தையும் நீவளர்த்தாய் இன்று
எங்கள் மாஸ்டர் கருவிழியில் இரண்டையும் ஏந்தியிருக்கின்றார்,
எங்கே உன் வாழ்த்தும் அவரை வந்தடையட்டும்
எதிலும் அவர் சிறந்து பல்லாண்டு வாழட்டும்.

பன்னிரு திருக்கரத்தான் – அவன்
பாரையும் எம்மையும் காத்திடுவான் என்று
கோசமிடும் உன் தொண்டனை – வேலனே
கோடிமுறை காத்து பல்லாண்டு வாழவைத்திடப்பா!


பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து
பார் சிறக்க தொண்டுகள் புரிந்து – இன்னும்
மகத்தான விழாக்கள் காண நாமும்
வாழிய வாழிய பல்லாண்டு வாழிய என்று வாழ்த்திடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் கொழும்பு இந்து இளைஞர் மன்றம்

# நட்பின் இலக்கணம்

அ. மயில்வாகனம்
*(இறைபணிச் செம்மல்)*



திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களை 1960 களில் திருத்தொண்டு மூலம் அறிய வந்தேன். அதாவது நீர்கொழும்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய முதல் தேர்திருவிழாவின் போது பஜனை செய்வதற்காக என் அழைப்பையேற்று கொழும்பு சைவமுன்னேற்ற பஜனை குழுவினருடன் வருகை தந்த பொழுதுதான் அவரின் நட்பு திருவருளால் கிடைக்கப் பெற்று தொடர்ச்சியாக இரண்டு மூன்று முறை வந்துள்ளார்கள். நீர்கொழும்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேர் திருவிழாவிலும் கலந்து சிறப்பித்தார்கள், அன்று நான் பார்த்த உருவம் இன்றும் அதே போன்று இருக்கிறது என்னால் அவரின் சமயத் தொண்டுதான். திரு அருளும் குரு அருளும் நிறையப் பெற்ற நிறைந்த மனிதன் திரு. க. பா அவர்கள். கொழும்பில் எங்கு பஜனை நடந்தாலும் இவரைக் காணலாம்.

அன்பு தவழும் முகம் அருள் ஒழுகும் கண் காட்சிக்கு எளியவராய் கடுஞ்சொல் அற்றவராய் திருப்பணியே தன்பணி என்ற நோக்கோடு வாழ்கின்ற பெருமனிதர். திரு. க. பா. அவர்கள் நட்பிக்கு இலக்கணமானவர். நல்ல உழைப்பாளியாய் திகழ்பவர்.

கொம்பனித்தெரு ஆலயத்தின் திருப்பணியில் முன் நின்று பெரும் பணியாற்றினார், எடுத்த வேலையை சிறப்புடன் நடத்தி பார்த்தவர்கள் வியப்புரும் வண்ணம் செய்து முடிப்பவர் திரு. க. பா. அவர்கள்.

பாலா, பாலா என்று எல்லோராலும் அன்புடன் அழைப்பதால் என்னவோ அவர் என்றும் இளமையாய் இருக்கிறார் – இருக்க வேண்டும் பல்லாண்டு – வாழ்த்துகிறேன்.

அன்புறு மனத்தர் திருப்பணி பேணும் அருட்பெருந் திருவினர் திரு. க.பா. அவர்கள், உற்றவரும் சுற்றவரும் ஊரும் உலகமும் போற்றி பிறை நூறு கண்டு பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனை.

வளர்க அவர் தொண்டு - வாழ்க பல்லாண்டு
நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க மாதரணி

# இலட்சியத் தொண்டன்

திருமதி. தர்மராணி செல்லமுத்து, J.P (தலைவி)

*கொழும்பிடை உள்ளளோர்*
*அனைவரும் வாரீர் – சேர்ந்து*
*அவர் சேவையைப் – நாம்*
*போற்றிடுவோம் வாரீர்!*

சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றி பார் புகழும் சேவைகள் பல புரிந்து எம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர் நாம் போற்றும் மணிமாஸ்டர் ஆவார்.

எம் மணிமாஸ்டரின் மணிவிழாவில் வாழ்த்துக்களை நல்குவதில் நானும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது சங்கத்தை வளர்த்த பெருமையும் சத்துணவு திட்டத்தை அமுலாக்கிய பெருமையும் தங்கத் தேரினை கொழும்பு மாநகரில் பவனிவரச் செய்த பெருமையும் நம் அன்புக்குரிய மணிமாஸ்டரையேச் சாரும்.

திரு. க. பாலசுப்பிரமணியம் என்பதை விட நாம் அன்பு ததும்ப மண்மாஸ்டர் என்று மொழிந்தால் அவரை அறியாதவர் யாருளர் இந்த இலங்கையில் சிறியோர் முதல் பெரியோர் வரை மணிமாஸ்டரை அறியாதவர் யாருமிலர் என்று தான் கூற வேண்டும்!

எமது சைவ முன்னேற்றச் சங்கத்தில் ஒரு மாதரணிக் குழுவை உருவாக்கி, அவர் செயலாளராக இருந்த நாள் முதல் அதனை வழிநடத்தி மாதரணிக்கே என்று ஒரு தனி இடத்தைப் பெற்றுத்தந்து, அதன் வளர்ச்சிக்கு காரணமாக இருந்த பெருமையும் நம் அன்புக்குரிய மணிமாஸ்டருக்குரிய!

இந்தச் சந்தர்ப்பத்தில் அனைத்து மாதரணி உறுப்பினர்களின் சார்பில் நன்றிகளை கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இவ் விழா பொறுப்பாளர்களது வழிகாட்டலின் கீழ் சிறப்பு மலராக மலர்ந்துள்ள இம் "மணி மலர்" அவரது சேவைகளை என்றும் பரப்ப வேண்டும்.

இவரின் சேவைகள் பல்கிப் பெருகி
மென்மேலும் சிறந்து, அவர் பல்லாயிரத்தாண்டுகள்
இப்புவியில் நீடூழி வாழிய! வாழிய!
என்று வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சேவைக்கோர் சிகரமே"

"செஞ்சொற் செல்வன்" வி. என். மதியழகன்
அகில இலங்கை சமாதான நீதவான்
தலைவர், தேசிய நிகழ்ச்சிகள் ஒருங்கிணைப்புப் பிரிவு
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்



மனிதன் உலகியல் தேவைகளை அடையவே எப்போதும் முயல்கிறான்.
எனவே – அவலங்கள் பலவற்றிக்கு ஆளாகின்றான்.
ஆயினும் – உலகியல் தேவைகளை அடைந்து விட்டால் வாழ்க்கையில் நிறைவு வந்து விடும் என்றே அவன் நம்புகிறான்.
அதனால் – ஆசை, அங்கலாய்ப்பு, ஏக்கம், ஏமாற்றம் என்பனவே வாழ்நாள் முழுவதும் அவனை வாட்டி வதைத்து விடுகின்றன.

ஒரு தேவை பூர்த்தி செய்யப் படுகையில் மறுதேவை தோன்றிவிடும். அந்த அளவுக்கு உலகியல் தேவைகள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. பெருவாழ்வு வாழ வேண்டிய மனிதன் உலகியல் தேவைகளில் அமிழ்ந்து, அவலங்களுக்கு ஆளாகாமல் தேவைகளில் அமிழ்ந்து, அவலங்களுக்கு ஆளாகாமல் கை கொடுப்பது ஆன்மீகம் ஒன்றே! ஆன்மீகத்தை எம்மால் பெற்றுக் கொள்ள முடியுமா? என சாதராண மக்கள் சந்தேகம் கொள்கிறார்கள். ஆன்மீகம் எங்கே? நாம் எங்கே? என அவர்கள் குழப்பமடைகின்றார்கள். ஆன்மீகத்தைத் தேடி எங்கெல்லாமோ ஓடிப் பார்க்கிறார்கள்.
அவர்கள்–
ஆன்மீகம் என்பது எம்மோடு கூடிப் பிறந்தது என்ற உண்மையை மறந்து போனதே இதற்கான காரணம்!
ஒவ்வொரு மனிதனும்
ஆன்மீகத்தை உள்ளார்ந்த நிலையில் கொண்டிருக்கிறான்,
ஆகவே தான் –
பெருவாழ்வு தரவல்ல ஆன்மீகத்தைத் தானாக வெளிப்படுத்தும் பணிகளில் மனிதன் ஈடுபட வேண்டியவனாகின்றான். ஆன்மீகம் என்பது மனிதனோடு கூடிப் பிறந்த இயல்பு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு இயல்பான ஆன்மீகத்தை நானாகவே வெளிப்படுத்தினேன். பெருவாழ்வு பெற்றேன்". என்பதை எமக்கு எடுத்துக் காட்டும் மாமனிதனாக க. பாலசுப்பிரணியம் அவர்களைக் காணுகின்றேன்.

ஆன்மீகத்தை வெளிப்படுத்தியவன் – தூயவனாக பர்ணமிக்கிறான்.

ஆன்மீகத்தை வெளிப்படுத்தியவன் – மனிதப் பண்புகளை நேசிக்கிறான். அவன் –

"ஆன்மீகப் பாதையில் அன்பையே சொரிந்து செல்வான்" 'பாலா" என எல்லோராலும் மதிக்கப்படும் ஆன்மீகச் செல்வந்தனுக்கு 'மணிவிழா என்றால் ஆனந்தம் அடையாதார் யாரும் உளரோ?

அன்பும் அருளும் தழுவிய நிலையில் சேவை செய்ய வேண்டும் என்ற உத்வேகம் ஆன்மீகத்தை இயல்பாகவே வெளிப்படுத்திய பாலாவுக்கு ஏற்பட்டதில் வியப்பேதும் இல்லையே! மனிதத்தன்மையை உறுதிசெய்வது "சேவை". மனிதனை தெய்வீக நிலைக்கு உயர்த்தி விடுவதும் "சேவை". "சேவை" செய்ய வேண்டும்" என்ற அதி அற்புதமான உத்வேகத்தைத் தமது இளமைக் காலத்திலேயே பெற்றுக் கொண்டவர்தான் எமது அன்புக்குப் பாத்திரமான பாலா அவர்கள். ஆன்மீக நெறியிலே சேவை ஊடாக இடம் பெறுவதும் இறைவழிபாடே என்பதை கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் வாயிலாக அவர் தமிழ் கூறும் நல்லுலகுக்கு எடுத்துக் காட்டியவர். மகத்துவம் மிக்க சேவை செய்பவர்கள் செல்லுகின்ற பாதையில் அவ்வப்போது சில இடர்கள் தோன்றவே செய்யும். அதுவே நியதியும் கூட. அத்தகைய இடர்களையெல்லாம் துச்சமென எண்ணி நிமிர்ந்து நேராக நடந்து எடுத்த கருமத்தை எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்படியாகச் செய்து முடிப்பதே பாலாவின் ஆளுமை.

பணிவான குணத்தின் மத்தியிலும் இடர்களை முறியடிக்கும் திராணியும் எனக்கு உண்டு என்பதை நிரூபித்து உயர்வடைந்த இறைபணிச் செம்மலை எல்லோரும் சேர்ந்து வாழ்த்தும் காலம் மணிவிழாவுடன் வந்து விட்டது. கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்பிரமணியனை தனது கவலானாகக் கொண்டு, அடியார்க்கும் அடியாராக விளங்கி ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவற்றை மூலாதாரமாய்க் கொண்டு சமூக சேவைக்காகவே தியாக வேள்வி செய்யும் மனித நேயனை மனதாரப் பாராட்டுகிறோம்! வாயா ர வாழ்த்துகிறோம்!! சிரம் தாழ்த்திப் போற்றுகிறோம்.!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசகர்



*கூறும் நாவே முதலாகக் கூறுங் கரணம் எல்லாம்நீ*
*தேறும் வகைநீ திகைப்புநீ தீமைநன்மை முழுதும்நீ*
*வேறோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மை உன்னை விரித்*
*துரைக்கில்*
*தேறும் வகைஎன் சிவலோகா திகைத்தால் தேற்ற*
*வேண்டாவோ*

*(எட்டாந்திருமுறை)*

# தொடர்உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராண இதிகாசங்கள் காட்டும் வாழ்வியல் நெறி

(வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் J.P)



வாழும் முறைமை:

புல்லாகிப், பூடாய், புழுவாய், மரமாகிப்
பல்விருகமாகிப், பறவையாய்ப், பாம்பாகிக்
கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய்
வல்லசுராகி, முனிவராய்த், தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

என்று மனித இயல் பரிணாம வளர்ச்சியை அழகுறச் சித்தரிப்பார் மணிவாசகப் பெருமான். ஆம் பிறப்பிலேயே விழுமிய பிறப்பு மனிதப் பிறப்பே ஆதலால்த் தான் காரைக்காலம்மை, அப்பர், போன்ற அருளாளர்கள் "வாய்த்தது ஈதோர் பிறவி என்று மதித்திடுமின். என்று போற்றுகின்றார்கள். பெறற்கரிய பிறவியைப் பெற்றும் பிரான் அடியை எண்ணாதவர்கள் எண்ணும் முனைப்பு இல்லாத அடுத்தவர்கள் மனிதர்கள் விலங்குகளாகின்றார்கள்.

"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை" என்று தொடுத்தவர் – "மற்றவர் அறியா மாணிக்க மலையை" என்று முடிக்கின்றார் – இங்கு "கற்றவர்" என்பது வெறும் நூலறிவு பெற்றவர் மட்டும் இல்லை. அது இறைவனை அறியும் வாலறிவு. நெஞ்சிலே தூய்மை, கருணை, செம்மை, அன்பு, அருள், தியாகம் என்று ஒன்றினால் ஒன்றி உயர்கின்ற நிலையே கல்வி, வெள்ளத்தனையதே மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனையதே உயர்வு.

இத்தகைய சிறந்த வாழ்வியல் முறைகளைக் கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்த மனித தெய்வங்களை ஆதர்ச புருஷர்களைச் சித்தரிப்பதே புராண, இதிகாசங்கள். அவர்கள் வாழ்ந்து காட்டும் வழியில் கருத்தினைச் சிறிது ஓட்டுவோம்.

நன்றி மறவா நயப்பு:

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினைத் துணையாச் செயினும், பனைத் துணையாக் கொள்வார் பயன் தெரிவார். "நன்றி மறப்பது நன்றன்று" என்றெல்லாம் செய்நன்றிச் சிறப்பை வள்ளுவம் பேசும். பஞ்சமா பாதகங்களைச் செய்தோர்க்கும் கழுவாய் உண்டு. ஆனால் ஒருவன் செய்த நன்றியை மறந்தவர்களுக்கு உய்வே இல்லை என்று அழுத்தமாகப் புறநானூறு கூறும். உண்ட கையின் ஈரம் உலரும் முன்பே நன்றி மறந்து விடுகின்ற மக்களுக்கு மகாபாரதமும் இராமாயணமும் இரண்டு மகாபுருஷர்களை முன்னிறுத்தி நன்றியின் நயப்பை தெரிவிக்கின்றது. அவர்கள் தான் கர்ணனும் கும்பகர்ணனும். கமல மலர்க் கண்ணன் கர்ணனை சந்தித்து அவனுடைய தாய் குந்தி தேவியே என்றும் , சூரிய குமாரனான அவனுடைய சகோதரர்கள் பாண்டவர்கள் என்றும் அவர்கள் பால் வந்து விட்டால் உன்னை அரசனாக்கி மணி முடி சூட்டுவார்கள். என்றும் கூற, அதனைக் கேட்ட கர்ணன், ஊரும், பேரும் தெரியாத எனக்கு அரசபெருமையைத் தந்து, அங்க நாட்டையும் தந்து, நட்புணர்வோடு மானங்காத்த துரியோதனனுக்குத் தன் இன்னுயிரை அளிப்பதே தருமமும், கடமையும் என்று உணர்த்தி "செஞ்சோற்றுக் கடனின்" சிறப்பை உலகிற்கு எடுத்துக் காட்டுகின்றான்.

தன்னை ஆதரிப்போர் எவராயினும், அவருக்காகத் தன் இன்னுயிர் அளிக்கும் உத்தமர்களின் பெயருடன் "கர்ணன்" என்னும் சொல் இணைந்தே இருப்பது நினைவு கூறத்தக்கது.

துரியோதனனுக்காகப் போரில் உயிர்கொடுத்துப் புகழ் கொண்டான் கர்ணன்.

இராவணனுக்கு அறத்தின் தன்மையை இடித்துரைத்து "தையலை விட்டு அவன் சரணம் தாழ்ந்து நின் ஐயம்இல் தம்பியொடும் அளவளாவுதல் உய்திறம் என்று நல்லாறு புகன்றும் செவிக் கொள்ளாத தமையனுக்காக, போர்க் கோலம் கொண்டு புகழுடம்பு எய்தியவன்– கும்பகர்ணன் என்ற அறிஞன்.

நச்சுப் பாம்பினும் கொடிய கௌரவர்களிடையே தோன்றிய தாளாண்மையுடைய பெரியோன் விகர்ணன்–குப்பையிலே மலர்ந்த கொஞ்சு குருக்கத்தி – கௌரவர்களுக்கு அறம் உரைத்த சான்றோன். கர்ணன், கும்பகர்ணன், விகர்ணன் மூவரும் நன்றி மறவா நெறியை நமக்குப் புலப்படுத்தும் நல்லோர்கள்.

பாசப்பிணைப்பு –சகோதர ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டு வேண்டுமா?

"செஞ்சுடரின் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே – விஞ்சு
விரதமே பூண்டு இந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார் என்பது ஓர் தனிப் பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சித்தாந்தத்திற்கு உரிய தனிச் சிறப்புக்கள்

(சைவ சித்தாந்த வித்தகர் – திரு. பழ. இரத்தினம் செட்டியார்)

சைவசமய அடிப்படை உண்மைகளை விவரிக்கின்ற சாஸ்த்திரப் பகுதி சைவசித்தாந்தம் என்று வழங்கப்படும். வட மொழியிலுள்ள சிவாகமங்கள் சைவ சித்தாந்தத்திற்குரிய முதனூல்கள் என்று கூறப்படுகின்றன. ஆனால் அவ்வாகமங்களிற் பல இப்பொழுது கிடைக்கவில்லை. கிடைத்துள்ள ஆகமங்களில் சைவசித்தாந்த உண்மைகள் வரையறையுடன் காணப்படவில்லை. பிரம்ம சூத்திரத்திற்கு உரையாக எழுந்த நீலகண்ட பாடியம் சைவபாடிய மேயாயினும் அது சிவாத்துவித சைவத்தை உணர்த்துகின்றதேயன்றிச் சைவசித்தாந்தத்தை உணர்த்தவில்லை. சிவஞான போதத்திற்கு உரையாக வடமொழியில் எழுதப்பட்ட சிவாக்கிரபாடியம் கூடச் சைவ சித்தாந்தத்தை உணர்த்தவில்லை. ஆகவே வடமொழியில் சைவசித்தாந்தத்திற்கு ஆதார நூலாக எதுவும் இப்பொழுது இல்லையென்பது தெளிவு. இன்று உலகத்திற்குச் சைவ சித்தாந்தத்தை உணர்த்தும் ஆதார நூல்கள் தமிழ் மொழியில் மட்டுமே உள்ளன. இது தமிழ் ஆராய்வாளர் அனைவரும் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

இறைவனைப்போலவே உயிர்களும் உயிர்களைப் பிணித்துள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களும் யாராலும் படைக்கப்படாமல், அநாதி நித்தியமாக என்றும் உள்ளவையென்பது சைவ சித்தாந்தக் கொள்கையாகும். 'பதியினைப் போல் பசு, பாசம் அநாதி' என்று திருமந்திரத்தால் திருமூலர் அருளிச் செய்திருக்கிறார். திருமூலர் காலத்தால் ஞானசம்பந்தர் முதலிய சமயக் குரவர்க்கும், மெய்கண்டார் முதலிய சந்தான குரவர்க்கும் முற்பட்டவர். இதனால் சைவசித்தாந்தம் தமிழகத்திற்கு மிகப் பழைமையான ஒன்று என்பது புலனாகும்.

இறை, உயிர், தளை ஆகிய மூன்றும் என்றும் உள்ளவை என்னும் கொள்கை இந்திய நாட்டிற்கு வெளியே தோன்றிப் பரவியுள்ள ஆத்திக சமயங்களிற் காணப்படவில்லை. அவை இறைவனே உயிர்களையும் உண்டாக்கினான் என்னும் கொள்கையுடையனவாக இருக்கின்றன.

இறைவன் ஒருவன் உண்டு என நிலை நாட்டுவதில் ஏனை ஆத்திக சமயங்களிலும் பார்க்கச் சிறந்த காரணங்களைச் சைவசித்தாந்தம் காட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகை எந்த உயிரும் படைக்கக் கூடிய ஆற்றல் உள்ளதாக இல்லை. எனவே இவ்வுலகைப் படைத்த கடவுள் உண்டு என்பதே கடவுள் உண்மையை நிலைநாட்டுவதற்கு ஆத்திக சமயங்கள் காட்டும் காரணமாகும்.

'உலகைப்படைத்தவர் கடவுள் என்றால் கடவுளைப்படைத்தவர் யார்? கடவுளை யாரும் படைக்கவில்லை என்றால், உலகையும் யாரும் படைக்கவில்லை. என்று ஏன் கொள்ளக்கூடாது' என நாத்திகக் கொள்கையினர் கேட்கின்றனர். இதனையே முதற் கேள்வியாகச் சைவ சித்தாந்தம் எடுத்துக்கொண்டு, விடைகூறுகின்றது. 'உலகத்துப் பொருள்கள் அனைத்தும் அழியும் தன்மையுடையனவாக இருக்கின்றன. அழியாதபொருளாக இருந்தால் அவை என்றும் உள்ளவை என்று கூறிவிடலாம். அழியக்கூடியவையாக அவை இருப்பதால் அவற்றிற்குத் தோற்றமும் இருந்தேயாக வேண்டும். அறிவில்லாாத சடப்பொருள்களாகிய அவை தாமாகவே தோன்றியிருக்க வேறொரு பொருள் வேண்டும். அந்தப் பொருளும் அழியக்கூடியதாக இருந்தால், அதனைத் தோற்றுவிக்க மற்றொரு பொருள் வேண்டும். இங்ஙனம் ஆராய்ந்துக்கொண்டே போனால் இறுதியாக அழியாத ஏதோவொரு பொருள் இருந்தே ஆகவேண்டும் என்பதும், அங்ஙனம் இல்லையென்றால், அழியக்கூடிய இப்பொருள்கள் தோன்றக் காரணம் இல்லையென்பதும் புலனாகும். அந்த அழியாத பொருளே கடவுள் என்றும், அது பேரறிவும் பேராற்றலும் அழியாத தன்மையும் உடையதாக இருக்கவேண்டுமாதலால், அதனைத் தோற்றுவிக்கவோ, இயக்குவிக்கவோ யாரும் வேண்டியதில்லை. · என்றும் இதனாலேயே உலகம் படைக்கப்பட்ட பொருள் என்றும், ஆனால் இறைவனோ படைக்கப்படாத பொருள் என்றும் கொள்கின்றோம், எனச் ஞ்சைவசித்தாந்தம் இதற்கு விடை கூறுகின்றது. இதனை

"அவன் அவள் அதுவெனும்
அவைமூ வினைமையில்
தோற்றிய திதியே
ஒடுங்கி மலத் துளவாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்"

என்னும் சிவஞான போத முதற் சூத்திரத்தாலும், இதற்குச் சிவஞான சுவாமிகள் எழுதியுள்ள உரையாலும் நன்கறியலாம்.

உலக மூலகாரணப் பொருளாம் இயற்கை

"உலகத்துப் பொருள்கள் அழியக்கூடியனவாகும். ஆனால் உலக மூலகாரணப் பொருளாகிய இயற்கை என்றும் அழியாதது. இயற்கையினுள் ஆக்க ஆற்றலும் அழிக்கும் ஆற்றலும் இயல்பாகவே உள்ளன. இதனால் உலகம் தோன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுங்குகின்றது. இந்த இயற்கை நிகழ்ச்சிக்கு இறைவனைக் காரணமாகக் கூறுதல் பொருந்தாது." என நாத்திகர் மேலும் வினாவக் காண்கின்றோம். இதற்கும் சைவசித்தாந்தம் தக்க விடை கூறியுள்ளது.

"இயற்கையினுள் அந்த ஆற்றல் வலி கூடியதாக இருக்குமானால், அழிக்கும் ஆற்றலை அது செயல்படவிடாது; அதுபோலவே அழிக்கும் ஆற்றல் வலிமை கூடியதாக இருக்குமானால், அது ஆக்க ஆற்றலைச் செயல்படவிடாது. இருவகை ஆற்றலும் சம வலிமையுடையவனாக இருக்குமானால் இருவகைச் செயல்களுமே நடைபெறாமற் போய்விடும். ஆனால் உலகில் தோன்றுதல், அழிதல் ஆகிய இரண்டும் நிகழக் காண்கின்றோம். எனவே, ஒன்றுக்கொன்று முரணான இவையிரண்டும் இயற்கையினுள் அமைந்து கிடக்க இடமில்லை. அறிவுடைய ஒரு பொருளே அறிவில்லாத இயற்கையினுள், இவ்விருவகை இயக்கங்களையும் தேவைக்கேற்றவாறு தோற்றுவிக்க வேண்டும். ஒன்றுக்கொன்று முரணான இவ்விருவகைச் செயல்களும் விகாரமாகுமே அல்லாமல் இயற்கையாகமாட்டா" எனச் சைவசித்தாந்தம் விடை பகர்கின்றது.
இதனை

"இயல்பு காண் தோற்றிமாய்கை
என்றிடில் இயல்பினுக்குச்
செயலதின்று இயல்பு செய்தி
செய்தியேல் இயல்பதின்றாம்"

எனச் சிவஞான சித்தியார் கூறுவதிலிருந்து அறியலாம். இங்ஙனம் பகுத்தறிவுக் கொள்கையினர் ஏற்குமாறு இறை உண்மையை நிலைநாட்டுவது சைவசித்தாந்தத்திற்குரிய தனிச் சிறப்புக்களுள் ஒன்றாகும்.

இயற்கையினுள் தோன்றுதல், அழிதல் ஆகிய நிகழ்ச்சிகளைத் தோற்றுவிப்பவன் இறைவன் எனச் சைவசித்தாந்தம் கூறினும், இயற்கையை நாத்திகர் கூறுவது போல யாராலும் படைக்கப்படாத அநாதி நித்தியப் பொருளாகவே அது கொள்கிறது. மாயை என்னும் பெயரால் அதனை அது குறிப்பிடுகின்றது, உள்ளதே தோற்றும் என்னும் "சத்காரிய" வாதத்தைச் சைவசித்தாந்தம் உடன்படுகிறது.

## ஒருவித தேவையும் அற்றவன் இறைவன்

இறைவன் ஒரு தேவையும் அற்றவன்; எனவே அவனுக்காக, அவன் எதனையும் உண்டாக்கிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. உலகில் அறிவுடைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்களாகிய உயிர்களையும், அறிவற்ற சடப்பொருள்களையும் நாம் காண்கின்றோம். சடப்பொருள்களை உயிர்கள் பயன்படுத்தவும் காண்கின்றோம். இதனால் அவை இன்ப துன்ப அநுபவங்ளை எய்தி, அறிவுவிளக்கம் பெறுவதையும் காண்கின்றோம். சிலசமயம் அறிவு விளங்கியும், சிலசமயம் அறிவு மடங்கியும் உயிர்கள் திணறுவதை நோக்கும் போது அவற்றின் அறிவு ஏதோ ஒரு பொருளால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்றும், அம்மறைப்பினின்றும் விடுபடவே அவை செயலாற்றுகின்றன என்றும் கொள்ளவேண்டியிருக்கின்றது. இம்மறைப்புப்பொருளை 'ஆணவ மலம் எனச் சைவ சித்தாந்தம் குறிப்பிடுகிறது. உலக வாழ்வால் உயிர்கள் அறிவுவிளக்கம் பெறுகின்றன. எனவே, அவை ஆணவ மலத்தொடர்பினின்றும் விடுபட்டு அறிவு விளக்கம் பெறுவதற்காகவே மாயையினின்றும் உடல்களும் உலகத்து பொருள்களும் தோற்றுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது.

ஒருதேவையும் அற்றவனாதலால், இறைவன் உயிர்களைப் படைத்திருக்கமாட்டான். இதனால் உயிர்களும் இறைவனைப்போலவே யாராலும் படைக்கப்படாத அநாதி நித்தியப் பொருள்களாகவே இருக்க வேண்டும். உயிர்களின் அறிவை மறைக்கும் ஆணவ மலத்தையும் கருணையாளனாகிய இறைவன் படைத்திருக்கமாட்டான். எனவே அதுவும் அநாதி நித்தியப் பொருளாக இருத்தல் வேண்டும்; உயிர்களும் அநாதியிலேயே அதன் மறைப்புக்குள்ளாகி இருத்தல் வேண்டும். உயிர்களின் அறிவை மறைக்கும் ஆணவ மலத்தை இறைவன் படைத்திருக்கமாட்டான் எனக்கொள்ளும் போது அறிவுவிள்ங்கத் துணை செய்யும் இயற்கையாகிய மாயையையும் இறைவன் படைத்திருக்க மாட்டான் என்றே கொள்ள வேண்டும். ஆனால் அறிவற்ற சடப்பொருளாகிய மாயை தானே உலகாகவும், உயிர்கள் பொருந்துகின்ற உடலாகவும், மாற இயலாது. எனவே இறைவனும், உயிர்களும், ஆணவ மலமும் மாயையும் அநாதி நித்தியப் பொருள்களாக இருப்பினும், உயிர்கள் ஆணவமல மறைப்பினின்றும் விடுபடுவதற்காகவே இறைவன் தனக்கென எந்தத் தேவையும் இல்லாதிருந்தும் கருணையால் மாயையினின்றும் உடலையும், உலகையும் படைத்தளித்திருக்கின்றான் என உலகத் தோற்றத்திற்குச் சைவசித்தாந்தம் காரணம் காட்டுகின்றது. ஆத்திக சமயங்கள் எதுவும் இங்ஙனம் உலகத்தோற்றத்திற்கு காரணம், காட்டவில்லை. இஃதும் சைவ சித்தாந்தத்திற்குரிய தனிச்சிறப்பாகும்.

உயிர்கள் அநாதியிலே ஏன் ஆணவ மறைப்புக்குள்ளாக வேண்டும்? எல்லாம் வல்ல இறைவன் ஏன் அதனைத் தடுத்திருக்கக் கூடாது. ஆணவ மலத்தையே ஏன் இல்லாமல் செய்துவிடக்கூடாது? இக்கேள்விகளுக்கும் சைவசித்தாந்தம் விடையளித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுபவத்தால் உரம் பெறும் தன்மை

உயிர்கள் அறிவுடைப் பொருள்களாக இருப்பினும் அனுபவத்தால் உரம்பெறும் தன்மையுடையனவாகவே அவை இருக்கின்றன. அறிவுடைப் பொருள்கள் என்றால் அவற்றிற்கெனத் தனியே இச்சையும் செயலும் இருத்தல் வேண்டும். அநுபவமின்மை காரணமாக, அவை ஆணவ மலத்தை அநாதியே இச்சித்துப்பற்றியுள்ளன.

இவ்விச்சையை இறைவன் தன் வலிமையால் தடுத்துவிடலாம். ஆனால் அஃது இறைவன் தன் வலிமையை நிலைநாட்டிய செயலாக இருக்குமேயன்றி, உயிர்களின் அறிவிற்கு நலம்செய்த செயலாக இருக்காது. அறிவுடைய பொருள்களுக்கும் அவற்றின் இயல்பறிந்து அநுபவத்தை ஊட்டினால் தான் நலம்பெறும். அநுபவத்தால் நலம்பெறும் தன்மைவாய்ந்த உயிர்களின் அறிவை அனுபவம் இல்லாமலே நலம் பெறுமாறு மாற்றி அமைத்தால் அப்புறம் அவை அந்த உயிர்களாக விளங்கமாட்டா. இது புதிய உயிர்களை உண்டாக்கியதாகவே முடியும். புதிய உயிர்களை உண்டாக்க வேண்டிய அவசியம் இறைவனுக்கு இல்லை. அநாதியே இருக்கின்ற உயிர்களுக்குக் கருணை காரணமாகவே அவன் நலம்செய்யக் கருதுகிறான். அநாதியை யாராலும் படைக்கப்படாமல் என்றும் உள்ள உயிர்களின் தன்மைகளுக்கு இறைவன் பொறுப்பாளியாக மாட்டான். ஆகவே அவைகளின் தன்மைகளுக்கேற்ப அவை அநுபவம் பெறவேண்டும் என்பதற்காகவே, அநாதியே அவை ஆணவமலத்தைப் பற்றுவதை அவன் தடை செய்யவில்லை. அநுபவத்தால் நலம் பெறும் தன்மையுடைய உயிர்களுக்கு ஆணவ மலத்தை இல்லாமல் அழித்துவிடுவதாலும் பயனில்லை. இங்ஙனம் சைவசித்தாந்தம் தான் கொண்ட முடிபிற்கு விடை அளிக்கின்றது. எந்தக் கேள்விக்கும் தயங்காமல் விடையளித்துச் செல்கின்ற சிறப்பு சைவசித்தாந்தம் ஒன்றிற்கே உரியதாகக் காணப்படுகின்றது.

அநாதியிலே உயிர்கள் ஆணவமலத்தைப் பற்றியமையே 'மூலகன்மம்' எனப்படும். இது பற்றிச் சைவசித்தாந்திகளுக்கிடையே கருத்து வேறுபாடுண்டு. 'அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினையாய்' எனச் சிவஞானசுவாமிகள் கூறுவதிலிருந்து மூலகன்மம் என்பது உயிர்கள் அநாதியே ஆணவ மலத்தைப் பற்றிய செயலே எனக் கொள்ளவேண்டியிருக்கிறது. 'பற்றுதல்' என்னும் மூலகன்மமாகிய செயலே உயிர்கள் உடல் பெற்ற பின்னர் விருப்பு வெறுப்புக்களை விளைவிக்க அவற்றின் காரணமாக அவை நல்வினை, தீவினைகளைச் செய்கின்றன. இதனாலேயே கன்மத்தையும் அநாதியெனச் சைவசித்தாந்தம் கொள்கிறது 'பற்றுதல் – மூலகன்மம்' 'விருப்பு, வெறுப்புக்கள் – சூக்குமகன்மம்' நல்வினை, தீவினை – நூலகன்மம் அறிதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகும் உயிரும் பொய்த் தோற்றம்

இறை, உயிர், ஆணவம், கன்மம், மாயை ஆகியவை அநாதி என்னும் கருத்து, இந்திய நாட்டிற்குள் தோன்றிப் பரவியுள்ள சமயங்களுக்கும் சித்தாந்தங்களுக்கும் புதுமையானதன்று. ஆனால் அப்பொருள்கள் அநாதி என்பதற்குச் சைவசித்தாந்தம் கூறுகின்ற காரணங்களை ஏனைய இந்திய நாட்டுச் சமயங்களும், சித்தாங்களும் கூறவில்லை. அவை நூன்முறை பிறழாது காரணங்காட்டிப் பொருள்களை அநாதியென நிறுவிய பெருமை சைவசித்தாந்தத்திற்கே உரியதாகும்.

இறைவன் முழுவியாபகமும் முற்றறிவும், அந்தமில் இன்பமும் உடையவன் என்பதைச் சங்கர வேதாந்தமும், இராமனுசரின் விசிட்டாத்துவிதமும் மத்துவரின் துவிதமும், சைவ சித்தாந்தமும் ஒப்புக்கொள்கின்றன.

இறைவன் முழு வியாபகம் உடையவன் தான்; உலகும் உயிரும் அவனுக்கு சரீரங்களாகும். அவை சரீரமாக இருப்பதால் இறைவன் வியாபகத்திற்கு இழுக்கில்லை என இராமனுசரின் விசிட்டாத்துவிதம் கூறுகின்றது. குற்றமும் குறையும் துன்பமும் உடைய உலகும் உயிரும் இறைவனுக்குச் சரீரமாக இருந்தால் அவன் அந்தமில் இன்பமுடையவனாகவும் இருக்கமாட்டான்; குற்றமற்ற சரீரத்தை உண்டாக்கிக்கொள்ளத் தெரியாத பேதையாகவும் அவன் கொள்ளப்படுவான். இஃது இறைனை முற்றறிவும் அந்தமில் இன்பம் உடையவன் என இராமனுசர் கொண்ட கருத்திற்கு முரணாகும்.

"இறைவன் வேறு; உலகுயிர்கள் வேறு; இறைவன் உலகுயிர்களில் நிறைந்திருக்கிறான்" என்பது மத்துவர் சித்தாந்தமாகும். உலகுயிர்கள் வேறு என்றால், குற்றமும் குறையுமுடைய உலகும் உயிரும் இறைவியாபகத்திற்குள் நிற்க முடியாமல் அழிந்துபோகும். சூரியன் முன் இருள் நிற்கமுடியாது அது போலவே இறைவியாபகத்திற்குள் இவை நிற்க இயலாது. ஆனால் உலகுயிர்கள் நிற்பதைக் காண்கின்றோம். இதனால் இறைவன் வியாபகம் உலகுயிர்களில் இல்லையென்று கொள்ளவேண்டியது வரும். இஃது உலகுயிர்களில் இறைவன் நிறைந்திருக்கிறான் என மத்தவர் கொண்ட கருத்திற்கு முரணாகும்.

## ஒரே சமயத்தில் இருவிதமாக நிற்பவன்

சைவ சித்தாந்தம் என்ன சொல்கிறது? இறைவன் உலக உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கின்றான் என அது சொல்கிறது. இஃதே "அத்துவிதம்" என வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் சொல்லுக்குப் பொருள் என்றும், அது கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் முழு வியாபகம் உடையவனே; அவன் ஒவ்வொரு பொருளினுள்ளும் நிறைந்து நிற்பதோடு அமையாமல் அந்தந்தப் பொருளாயும் நிற்கின்றான். இதனாலேயே அவை வியாபகத்துள் இடம் பெற முடிகிறது. உலகுயிர்கள் இடம்பெறுவதற்காக அவன் கருணை காரணமாக இங்ஙனம் ஒன்றாக நிற்பதால் விகாரம் அடையமாட்டான். உலகோடும் உயிரோடும் அவையாகவே அவன் நிற்பதால் அவனின் முழு வியாபகத்திற்கு இழுக்கில்லாமல் போகிறது. அதே சமயம் இறைவன் இவைகளின் வேறாகவும் நிற்கின்றான். இதனால் உலகுயிர் குற்றம் அவனைச் சாராமற்போகிறது. பேராற்றலும் பேரறிவும் வாய்ந்தவனாதலால், அவன் இங்ஙனம் ஒரே சமயத்தில் இருவிதமாக நிற்கமுடியும். அவன் முற்றறிவும் எல்லையில் ஆற்றலுக்கும் இதனால் சிறப்பே அன்றி இழுக்கில்லை. உலகுயிர்களோடு ஒன்றாகவும் நிற்பதோடு அமையாமல் அவன் உடனாகவும் நிற்பதால் அவை செயல்பட முடிகிறது. இதனால் இறைவனைவிடுத்து, அவை தனியே இயங்க முடியாது என்பதும் பெறப்படுகிறது.

இறைவன் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்பான் என சித்தாந்தம் கூறும் கருத்தே, இறைவனின் இலக்கணங்கள் அனைத்திற்கும் பொருந்தியதாக இருக்கின்றது. இவற்றுள் ஒவ்வொன்றே கூறும் வேதாந்த விசிட்டாத்துவித – துவித சித்தாந்தங்கள் இலக்கணங்கள் அனைத்திற்கும் பொருந்தியனவாக இல்லை.

சங்கரரின் வேதாந்தத்தையும் இராமனுசரின் விசிட்டாத்து விதத்தையும் மத்துவரின் துவிதத்தையும் பார்த்து விட்டு, மெய்கண்டார் இம்மூவர் கருத்தையும் ஒன்றாகச் சேர்த்து, இறைவன் ஒன்றாகியும் வேறாகியும் உடனாகியும் நிற்பான் எனக் கூறியிருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். இது முழுப்பிழையாகும்.

சங்கரருக்குப் பின்வந்தவர்களே இராமனுசரும், மத்துவரும் என்பதை யாரும் மறுக்க முடியாது. சங்கரர் தம் நூலில் ஞானசம்பந்தர் திருப்பாலுண்ட நிகழ்ச்சியைக் கூறியிருக்கிறார். ஆகவே சங்கரருக்கு முற்பட்டவர் ஞானசம்பந்தர் என்பதிற் சந்தேகமில்லை. ஞானசம்பந்தர் தாம் பாடிய தேவாரத்தில்,

> "தானாய் வேறாய் உடன் ஆனான்
> இடம் வீழிம்மிழலையே"

எனத் திட்டவட்டமாகக் கூறியருளியிருக்கிறார். ஆகவே சங்கரர்க்கும் இராமனுசர்க்கும் மத்துவர்க்கும் முந்தியே இறைவன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பான் எனும் கருத்தைச் சைவ சித்தாந்தம் கூறியிருக்கிறது என்பது தெளிவு. இங்ஙனம் இறைவனுக்கும் உலகுயிர்களுக்கும் உள்ள தொடர்பைச் சைவ சித்தாந்தம் தனக்கே உரிய தனிச்சிறப்புடன் கூறியிருப்பது அறிந்தின் புறத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்பத்துக்கு வழிசெய்யும் பக்திநெறி

இறைவனை அடைவதற்குரிய நெறி பக்திநெறியே என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கையும் பக்தி நெறியை அடிப்படையாகவைத்தே அது கூறியிருகிறது. விசிட்டாத்துவிதமும் துவிதமும் பக்தி நெறிபற்றி சிறந்த கருத்துக்களை கூறியுள்ளன. வேதாந்தமும் இதில் பின்வாங்கவில்லை. வேறுபாடுகள் பல இருப்பினும், அடிப்படையில் பெரிய மாற்றம் இல்லையென்றெ சொல்லிவிடலாம். ஆனால் முத்தி நிலைபற்றிச் சைவசித்தாந்தம் தனக்கே உரிய கருத்துக்களைக் கொண்டிருக்கிறது. முத்தியிலும் இறை, உயிர், தளை ஆகிய மூன்றும் உண்டென்பது அதன் கருத்தாகும். மலம் வலிகெட்டு நிற்கும் என்றும், உயிர் பேரின்பத்தை நுகரும் என்றும், இறைவன் பேரின்பத்தை வழங்குவான் என்றும் அது கூறுகிறது.

முத்தியில் இறைவனும் ஒன்றா? வேறா? ஒன்று என்றால் பேரின்பத்தை அனுபவிப்பது யார்? வேறு என்றால் முழு இன்பமும் கிட்ட இடமில்லை. இதற்குச் சைவ சித்தாந்தம் என்ன சொல்கிறது.

"ஏகமாய் நின்றே இணையடிகள் ஒன்று ணரப்
போகமாய்த்தான் விளைந்த பொற்பினான் – ஏகமாய்
உள்ளத்தின் கண்ணானான உள்ளுவாருள்கிற்றை
உள்ளத்தாற் காணானோ உற்று"

எனச் சிவஞானபோதம் பதினோராம் சூத்திரத்தில் வரும் வெண்பாவில் மெய்கண்டார் இதனைத் தெளிவுபடுத்துகிறார்.

இறைவன் பெத்தம் முத்தி இரண்டிலும் ஒன்றாகியும் வேறாகியும் உடனாகியும் நிற்கிறான். எனவே முத்தியில் நிற்றலால், உயிரின் அறிவோடு வேறின்றிக் கலந்து, வேறாகி நிற்றலால் சிவபோகமாய் விளங்கித் தோன்றி, உடனாகி நிற்றலால் அச்சிவபோகத்தை உயிர்கள் அனுபவிக்கும்படி செய்கிறான். இதனால் உயிர்கள் முழு இன்பத்தையும் நுகர்கின்றன என்று மிக்க ஆழத்தோடு தன் கருத்தைச் சைவ சித்தாந்தம் கூறியுள்ளது. விவரிக்க முடியாத முத்திநிலை பற்றியும் அஃது அளவை நூன்முறை பிறழாமலே கூறிய திறன் ஒரு தனிச் சிறப்பென்பதைக் கூறவேண்டுவதில்லை.

சைவ சித்தாந்தத்திற்குரிய தனிச்சிறப்புகள் பலவாகும். அவற்றுள் சிலவே ஈண்டெடுத்துக் கூறப்பட்டிருப்பினும், அவை அதன் சிறப்புக்களை ஒரளவு உணர்த்துமெனக் கருதுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஆறுமுகனின் ஆறுபடைவீடுகள்”

தமிழருவி த. சிவகுமாரன் B. A. (Hons)
(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்,
ஆசிரியர், வவுனியா தமிழ் தேசிய கல்லூரி)



அண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்தலும் காத்தலும் அழித்தலும் இறைவனது இடையறாத திருவிளையாடல்கள். இறைவனை உணர்ந்து அவனைச் சரணடைந்தால் அழிவில்லாத பேரின்பம் அடையலாம் என்பது சமயங்கள் காட்டும் பேருண்மை.

சந்திர மண்டலத்துக்குச் செல்லுமளவு விஞ்ஞானம் வளர்ந்தாலும் மனித ஆற்றலுக்கு ஒரு எல்லை உண்டு. மனிதனால் மரணத்தை வெல்ல முடியவில்லை. தனது இச்சைப்படி தன்னுடைய வாழ்க்கையையும் மாற்றியமைக்க இயலவில்லை. வாழ்நாளில் ஏற்படும் இன்பதுன்பங்களையும் ஏற்றத்தாழ்வுகளையும் முன்கூட்டியே அறிந்து சீர்செய்யவும் நமக்கு ஆற்றலில்லை. இதனையே கவிக்குயில் பாரதியாரும்

“முன்னர் நம திச்சையினாற் பிறந்தோமில்லை;
முதலிறுதி இடை நமது வசத்தில் இல்லை;
மன்னுமொரு தெய்வத்தின் சக்தியாலே
வையகத்தில் பொருளெல்லாம் சலித்தல் கண்டாய்!

எனப் பாடியுள்ளார்.

ஆகவே மனித ஆற்றலுக்கு மேற்பட்ட சக்தியுண்டு. அதுவே அனைத்தையும் இயக்கிவருகின்றது. அதனையே இறைவன் எனப் போற்றுகின்றோம். அத்தெய்வத்தை கோவிலில் கண்டு வழிபடுவதேசாலச் சிறந்தது என்பது எம்மனோர் நம்பிக்கை.

எமது நாட்டில் கோவில்களுக்குத் தனிச் சிறப்புண்டு. அது போன்றே தமிழகத்திலும் கோயில்களுக்குப் பஞ்சமில்லை. சிறிய ஊராக இருந்தாலும் அங்கும் கோயில் இருக்கும். சில இடங்களில் ஊர்சிறியதாக இருந்தாலும் கோயில் பெரியதாக இருக்கும். “ஊரானோர் தேவகுலம்” என்று உரையாசிரியர்கள் காட்டும் பழையதொடர் மொழி ஒன்று உண்டு. “கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்பது பழமொழி. இவை ஒவ்வோர் ஊரிலும் கோயில் இருக்க வேண்டியதன் அவசியத்தைச் சொல்கின்றன. திரு முருகாற்றுப்படையில் “ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்” என்ற அடி காணப்படுகின்றது. இதிலிருந்து ஊர்கள் தோறும் கோவில்கள் இருந்தமையும் அங்கே விழாக்கள் நிகழ்ந்தமையும் புலனாகின்றன.

தமிழ் நாட்டில் மிகப் பழங்காலம் தொட்டு முருகவழிபாடு மிகச்சிறந்த நிலையில் இருந்து வருகின்றது. மலையும் மலையைச்சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்துக்கு அவன் தலைவன் என்று மலை வாழ் மக்கள் அவனைத் தமக்கே உரிய தெய்வமாகப் போற்றி வழிபட்டு வந்தார்கள். பிற இடங்களிலும் முருகனுக்குரிய வழிபாடு இருந்து வந்தது. பொதுவாகத் தமிழ்நாடு முழுவதுமே முருகனுக்குரிய வழிபாடு எங்கும் பரந்து இருந்தது என்று திடமாகச் சொல்லலாம்.

இப்போது கிடைக்கும் நூல்களுள் பழமையானவை சங்க காலத்து நூல்கள். அவற்றைப் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்று மூன்று பிரிவாகப் பிரிப்பார்கள். இந்த மூன்று வரிசைகளிலும் முதலில் நிற்பது பத்துப்பாட்டு என்னும் தொகுதி. அதில் பத்து நெடும் பாட்டுக்கள் உள்ளன. முதலில் நிற்பது திருமுருகாற்றுப்படை என்னும் நூல். அதனை இயற்றிய நக்கீரர் முருகப் பெருமானின் பெருமையைப் பல படியாக அந்நூலில் குறிப்பிடுகின்றார். எட்டுத் தொகையில் ஒன்றாகிய பரிபாடலில் திருப்பரங்குன்றத்தைப் பற்றிய பாடல்கள் சில உள்ளன. அவற்றிலும் முருகனுடைய புகழ் விரிவாகக் கூறப்படுகின்றது. எட்டுத் தொகையில் மற்றொரு நூலாகிய குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப்பாட்டு முருகனைப்பற்றியது. இவையன்றி மற்றைய பாடல்களிலும் முருகனைப்பற்றிய செய்திகள் வருகின்றன. இவற்றால் முருகன் தமிழ்நாட்டிலுள்ள பலவகை மக்களும் வழிபடும் தெய்வமாக விளங்கினான் என்பதும் பல இடங்களில் அவனுக்குத் திருக்கோயில்கள் இருந்தன என்பதும் தெரிய வருகின்றன. அவனுடைய அவதாரம், அவனுடைய வீரச் செயல்கள், கருணை, அங்க அடையாளங்கள் முதலிய வற்றையும் நன்கு அறியலாம்.

திருமுருகாற்றுப்படையில் முருகன் எழுந்தருளியிருக்கும் இடங்கள் இன்னவையென்று ஒரு புலவன் மற்றொரு புலவனுக்குச் சொல்லுவதாகப் பாட்டின் அமைப்பு இருக்கின்றது. அங்கே அவன் எழுந்தருளியிருக்கும் ஆறுபடை வீடுகளைப்பற்றிய செய்திகள் வருகின்றன. படைவீடு என்பது ஓர் அரசன் தன்னுடைய படைகளுடன் தங்கியிருக்கும் இடம் திருச்செந்தூரில் முருகப் பெருமான் படைகளுடன் சென்று தங்கியிருந்தான். அது அவனுக்கு ஒரு படைவீடு. வீரம் செறிந்த முருகன் எழுந்தருளியிருக்கும் மற்ற இடங்களையும் படைவீடு என்று சொல்லும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டு விட்டது. திருமுருகாற்றுப்படையில் படைவீடு என்ற சொல்இல்லை. ஆனாலும் நக்கீரர் அந்த நூலில் சொல்கின்ற முறையை வைத்துத்தான் அறுபடைவீடுகள் என்ற வரையறையே உண்டாயிற்று. திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்று தோ றாடல் பழமுதிர்சோலை என்னும் ஆறையும் நக்கீரர் குறிக்கிறார். குன்று தோறாடல் என்பது எல்லா மலைகளையும் குறித்தது. "குன்று தோறாடலும் நின்றதன் பண்பே" என்று திருமுருகாற்றுப் படையில் வருகிறது. அதற்குப் பொருள் யாதெனில் 'ஒவ்வொரு குன்றிலும் இருந்து திருவிளையாடல் புரிதலும் நிலையான முருகனுடைய இயல்பு' என்பதாகும். ஆகவே பல குன்றுகள் என்பது தான் படைவீட்டின் பெயராக இருக்க வேண்டும். ஆயினும் இப்போது குன்று தோறாடல் என்பதே தலப்பெயராக வழங்கி வருகின்றது. முருகன் எழுந்தருளியிருக்கும் எல்லாக் குன்றங்களும் இந்தப் பெயருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கும். எனவே முருகன் எழுந்தருளியிருக்கும் தலங்கள் இத்தனை என்று வரையறை செய்ய முடியாது. குறிப்பிட்ட தலங்களாகிய திருப்பரங்குன்றம் முதலிய ஐந்தும் பல மலைகளும் அவன் திருக்கோவில் கொண்ட இடங்கள்.

அருணகிரிநாதர் முதலிய அருளாளர்கள் திருமுருகாற்றுப்படையை அடியொயற்றியே முருகனுடைய படைவீடுகள் ஆறு என வகுத்துக்கொண்டு பாடியிருக்கிறார்கள். ஆறுமுகம் பெற்ற ஆண்டவனுக்குப் படைவீடுகளும் ஆறாக அமைவதில் ஓர் அழகு இருக்கத்தானே செய்கின்றது. குமரன் தோன்றிய இடமும் சிவபெருமானின் ஆறு திருமுகங்கள். எம்பெருமானின் திருமந்திரமும் "சரவணபவ", "குமராயநம" என்ற ஆறு எழுத்துக்களைக் கொண்டது. இதனை "ஆறு எழுத்து அடக்கிய அருமறை" என்று நக்கீரரும் "இசைபயில் சடாக்ஷரம்" என்று அருணகிரிநாதரும் போற்றியுள்ளனர். இப்பெருமானது தாந்ரீக வழிபாட்டு யந்திரமும் ஆறு கோணங்களை உடைய ஆறு கோணச்சக்கரம் என்றே கூறுவர். இத் தெய்வத்துக்குரிய முக்கிய விரதமான கந்த சஷ்டியும் ஆறு நாட்கள் கொண்டாடப்படுகின்றது. முருகன் சூரனோடு செய்த யுத்த நாட்களும் ஆறாகவே அமைந்துள்ளது.

இந்தவகையில் தமிழ் நாட்டிலுள்ள புனிதம்மிக்க ஸ்தலங்களாகிய அறுபடை வீடுகளை நினைத்தாலும் கண்டாலும் கேட்டாலும் எண்ணற்ற பயன்கள் விளையும் என்பர். அறுபடை வீடுகளில் வீற்றுள்ள ஆண்டவனை "திருப்பரங்குன்றத்து அரசே! சீரலைவாய் முத்தே! பழநி மலைக்கான மணிவிளக்கே! ஏரகத்தின் பெருவாழ்வே! குன்று தோறாடல் குமரா! பழமுதிர்ச்சோலை பரனே!" என்றெல்லாம் அகங்குளிர வாய்குளிர அழைத்து மகிழ்வார்கள் அன்பர்கள். இந்த அறுபடை வீடுகளில் அடியார்கள் பெற்று வரும் அநுபவங்கள் அநேகம். இத்தலங்களில் கந்த சஷ்டி காலத்தில் நடைபெறும் அற்புதங்கள், விநோதச் செயல்கள் எண்ணிறந்தவை.

"அடியவர்கள் நேசத்துறை வேலா
அறுமுக விநோதப் பெருமாளே" என அருணகிரி நாதர் முருகனின் விநோதச்செயல்களைப் போற்றுவதையும் ஈண்டு நோக்கலாம். முருகனின் அறுபடை வீடுகளையும் நமதுடலிலுள்ள ஆறு ஆதாரஸ்தானங்களான மூலாதாரம் சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை முதலியவைகளுக்கும் ஒப்பிடுவர். இத்தகைய அறுபடை வீடுகளில் வீற்றிருக்கும் அறுமுகனை நினைத்து வணங்கி உய்தி பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வமும் தெய்வீகப் பணியும்

அகில இலங்கை சமதான நீதவான்
அருணாசலம் திருநாவுக்கரசு
இளைப்பாறிய சுங்க உதவி அத்தியட்சகர்

நான் யார்? எப்படிப் பிறந்தேன்? என்னைப் படைத்தது யார் என்ற கேள்விகள் என்னும் எழுகின்றபோது எனது சிந்தனை செயற்பட ஆரம்பிக்கின்றது. ஒருவனே தேவன் அவனே என்னைப் படைத்தான் என்னை மட்டுமா படைத்தான்? இல்லையே! என்னைப்போல எத்தனையோ கோடானுகோடி ஆண்களையும், பெண்களையும் படைத்தான். அதுமட்டுமா? உலகிலே எத்தனையோ விதம் விதமான ஜீவராசிகளையும் படைத்துள்ளான். ஏன் இந்தப் பிரபஞ்சத்தையே அவன்தான் படைத்தான்.

அப்படி என்றால் அந்த ஆண்டவன் யார்? அவர் எப்படிப் பட்டவர்? அவர் எங்கே இருக்கின்றார்? என்ற கேள்விகளும் எழத்தான் செய்கின்றது.

ஆண்டவன் அகிலகலைகளாகவும், வெகுவிதம் கொண்ட தத்துவமாகவும், அபரிமித சுருதியும் அடங்கும் தனிப் பொருளாகவும், எப்பொருளுமாகின்ற அறிவாகவும் இருக்கின்றார் எனத் திருப்புகலில். பாடுகின்றார் அருணகிரியார்?

அப்பப்பட்ட அறிவாகிய கடவ்ளை அறிவு கொண்டு அறிகின்றதலால் எவ்வாறு ஒருவருக்கு அறிவிப்பது என்று கந்தரனுபூதியில் ஒரு கேள்வியை எழுப்பி எம்மைச் முந்திக்கவும் வைக்கிறார் அருணகிரிநாதர்.

இந்த இடத்திலே வேதங்களின் முடிவாக விளங்கக் கூடிய உபகிஷதங்கள் நமக்குக் காட்டுகின்ற ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பிரபஞ்சம் முழுவதும் எப்படித் தோன்றியது என்ற கேள்வியை எழுப்பி கொண்டால், ஏதோ ஒன்றிலிருந்து தோன்றியது என்ற முடிவுக்குத்தான் நம்மால் வரமுடியும். தோன்றுவதற்கு அடிப்படையாக விளங்கக்கூடிய பொருள் எது என்பதை மனதாலே எண்ணிப் பார்த்தோ, சொல்லாலே விளக்கியோ, மெய்யினாலே குறித்துக் காட்டியோ யாராலும் விளக்க முடியாது. அதைச் சுத்தப் பிரம்மம் என்று சொல்வது வழக்கம் குமரகுருசுவாமிகள் இதைக் 'கரு இன்றி நின்ற கரு' என்கின்ற சொல்லாலே குறிப்பிடுகின்றார்.

அப்போர்ப்பட்ட ஒன்றிலிருந்துதான் இந்தப் பிரபஞ்சம் முதலான அணைத்தும் தோன்றியிருக்க வேண்டும். என்ன காரணம்? இல்லாது தோன்றினது என்னது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிலாது என்பது ஒரு மகத்தான உண்மை. இதற்கு சர்க்காரிய வாதம் என்று பெயர். ஆகவே இல்லது தோன்றாது என்று சொல்லுகின்ற போது அது எதிலிருந்து தோன்றியது என்பது விளங்காத ஒன்றாகவே இருக்கின்றது. அதுவே சக்தியாக இருக்கின்றது. அப்படி ஒரு பொருள் தன்னிடத்தே ஒரு சக்தியை அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறது அந்தப் பொருளுக்கு சிவம் என்றும் அந்தப் பொருளுக்குள் அடங்கியிருக்கின்ற ஆற்றலுக்கு சக்தி என்றும் பெயர். பொருள் என்கின்ற சிவம் கண்ணுக்குத் தெரியும். அந்த அற்றல் என்பது சக்தி. அது கண்ணுக்குத் தெரியாது அவ்வாறு ஒரு பொருளுக்கு உள்ளே ஒரு சக்தியானது ஒரு இடத்தில் நல்கியிருக்கின்ற வரையில் அதற்குச் சுத்தப் பிரம்மம் என்று பெயர். அந்த சக்தி எல்லா இடத்திலும் பரவும் போது அதற்கு பரப்பிரம்மம் என்று பெயர்.

நாம் ஒரு மொட்டை எடுத்துக் கொள்கிறோம். மலர் மொட்டை அது மலர் மொட்டாக இருக்கிற வரைக்கும் அதனுடைய வாசனை என்கின்ற சக்தி மகரந்தத்துகள் பொருந்தி இருக்கின்ற இடத்தில் மட்டுமே நல்கி இருக்கும். இதழ்களுக்கெல்லாம் அந்த வாசனை வராது. இது சுத்தப் பிரம்மநிலை மொட்டு மலர்ந்து விட்டது என்றால் மகரந்தத்துக்களில் பொருந்தியிருக்கின்ற வாசனை இதழ்கள் முதலான எல்லா இடத்திற்கும் பரவி விடுகிறது. அதற்குப் பரப்பிரம்மம் என்று பெயர். ஆகவே ஒரே சக்திதான் எல்லா இடத்திலும் பரவி அனைத்தும் செயல்படுவதற்கும் காரணமாக இருக்கிறது.

இந்த நிலைதான் வேதம் கூறும் அர்த்தநாரீஸ்வரர். சிவம் பாதி –சக்தி பாதி ஆகிய இரண்டும் ஒன்றுபட்ட நிலை இங்கே தோன்றுகிறது. ஆகவே சிவம் இன்றி சக்தி இல்லை. சக்தி இன்றி சிவம் இல்லை. இந்த அசையா இறைவன் அசைந்து அசைந்து ஆடுகின்ற கூத்தினாலேதான் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலும் நடைபெறுகின்றன. அண்ட சராசரங்களும் ஆண்டவனாலேயே இயங்குகின்றன.

ஆண்டவன் படைப்பிலே நாம் மனிதனாகப் பிறந்துள்ளோம். புல்லாகிப் பூடாகப் பிறக்கின்ற மணிவாசகர் கூறும் பிறப்பு வரிசையிலே மானிடப்பிறவிதான் அரிதானது. இதனை நாம் நிதானமாக ஆராய்ந்து பார்ப்பின் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவை ஈசன் கொடுத்திருக்கின்றான். புத்தியை மட்டுமல்ல பேசும் சக்தியையும் கொடுத்திருக்கின்றான். உலகிலே எந்த ஜீவராசிகளுக்கும் கிடைக்காத ஆனால் அறிவினாலே நல்லனவற்றையும், தீயனவற்றையும் நன்கு உணர்ந்து பொருமைத்தீயைக் களைந்து அன்பு, கருணை என்கின்ற நல்வழியிலே முன்னேறி வாழ்வதற்குப் பழகி, அறங்கள் பல செய்து பிறவாமையை ஒழித்தல் வேண்டும் என்பதை உணரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாவது அறிவு ஆண்டவனால் எமக்குத் தரப்பட்ட வரப்பிரசாதம், எந்த ஜீவராசிகளாலும் செய்ய முடியாத அரிய பெரிய காரியங்களை எல்லாம் மனிதன் செய்து வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்றான். புத்திக் கூர்மையினால்தான் ஆழியைக் கடக்க முடிகின்றது. தேசம் விட்டு தேசங்களுக்கு வான்மூலம் பறந்து செல்ல முடிகின்றது. பாரிய நிறை கொண்ட சரக்குகளை வான்மூலம் அனுப்ப முடிகின்றது. ஒலியை ஒளியாகவும், ஒளியை ஒலியாகவும் மாற்றி தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி சேவைகளை அமைக்க முடிந்தது சந்திர மண்டலத்திற்கும் மறுகிரகங்களுக்கும் சென்று வரவும் கற்றுக் கொள்ள முடிந்தது. பூமியை விட்டு கிரகங்களுக்குச் சென்று வாழும் வாழ்க்கை கைகூடம் நிலையும் தோன்றுகிறது.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

என ஔவையார் கூறினார். எண் என்பது கணிதம் எழுத்து என்பது நெடுங்கணக்கு. அதாவது மொழி. இந்த எண்ணும் எழுத்தும் கணனி வடிவில் உலகெலாம் பரந்து பணி செய்கின்றது. எல்லாம் கணனிமயம் என்றநிலை மனிதனுக்கு இன்று ஏற்பட்டு விட்டது.

இந் ஆறாவது அறிவு மனிதனுக்கு இல்லாதிருந்தால் மனித வாழ்க்கைநிலை எப்படி இருந்திருக்கும் என்பதை நாம் சிந்தித்தும் பார்க்க வேண்டும். ஆம் உண்மையில் நாமும் குரங்குகள் போல ஒரு பிரிவாக காட்டில் மாநிழலிலும் குகைகளிலும் விலங்கோடு விலங்காகவே மிருக வார்க்கை வார்ந்து கொண்டிருப்போம், என்பதை உணரவேண்டும்.

பிறப்பும் இறப்பும் என்ற சக்கரச் சுழற்றியிலே நாம் எத்தனை ஜென்மாந்திரம் எடுத்தோமோ தெரியாது. இந்த நிலையிலே மானிடராகிய நாம் ஆண்டவன் தந்த பகுத்தறிவை பயன்படுத்தி, அவனின்றி அணுவும் அசையாது என்ற தெய்வீகநிலையை உணர்ந்து, ஆண்டவ்னைப் பணிந்து வணங்கி பக்தி கொண்டு இறைபணி செய்து வாழ்ந்துவர வேண்டும். ஏற்காமல் எற்பவர்க்கு இல்லை என்று உரையாது அறம் செய்ய வேண்டும்.

"அருளிலாற்கு அவ்வுலகம் இல்லை. பொருளிலாற்கு
இவ்வுலகம் இல்லாசி யாங்கு"

என்ற திருக்குறளை அறிந்து, அரளைப் பெறுவதற்கு அண்டவனிடம் பக்திகொண்டு இறைபணி செய்ய வேண்டும். அறமும் செய்ய வேண்டும். இவ்வுலகில் வாழ்வதற்கு பொருள் தேட வேண்டும். அறம் செய்வதற்கும் பொருள் வேண்டும். பொருள் சும்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வராது. முயன்றால் 'மெய் வருந்தக் கூலி தரும். எனவே ஊக்கமுடன் உழைக்கவும் வேண்டும்.

அறிவு என்பது மனிதனுக்கு கிடைத்திருக்கின்ற பெரிய நன்கொடை, என்றாலும், முற்பிறப்பில் அறிவை நன்கு படுத்தாமல் பாவங்கள் செய்ததினால், அது நல்வினை, தீவினை என்ற இரண்டின்பாற்பட்டு செயற்படுகிறது. அறிவு நல்வினை தீவினைக்கு ஆட்படுகின்றபோது அதை அடக்குகின்ற ஆற்றல் எமக்கு இல்லை. ஆகவே அறிவைக் கொடுத்த, மனிதரும் திங்களும் பாம்பும், பகீரதியும் படைத்த புனிரான சிவனே அதில் இருந்து எம்மை நடத்திச் செல்ல வேண்டும் என்று நாவாரம் புகழ்ந்து பாடி வேண்டுதல் செய்ய வேண்டும்.

இவ்வண்ணம் அறிவைப் பயன்படுத்தி அப்பனின், அம்மையின் அருளைப் பெற்றுவிட்டோம் என்றால், அவன் அருளாலே, அவன் தாழ் வணங்கிய கருணையினாலே பெருஞ் செல்வத்தையும், நல்ல கல்வியையும், தளர்வறியா வீரத்தையும், நல்ல மனத்தையும், வஞ்சமில்லாத உற்றார் உறவினர்களையும், அத்துடன் நல்லனவையாக இருப்பவை எவையோ அவையனைத்தையும் அளவின்றிக் கொடுப்பான், அதனால் பெருங் கீர்த்தியும் உண்டாகும்.

அன்பே உருவான ஆண்டவன், தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட சீவராசிகள் அனைத்திற்கும் அன்பு காட்டுகின்றான். அருள் பாலிக்கின்றான். அன்பே சிவம் என்பதை நினைந்து, எத்தனை ஜென்மாந்திரம் எடுத்தாலும் எம்மைப் படைத்து, காத்து, பக்குவப் படுத்துகின்ற கடவுளை நாம் மறக்கலாமா? மறக்காது அவன் காட்டிய நல்வழியே சென்று அவனால் படைக்கப்பட்ட எல்லா உயிர்கட்கும் அன்பு, ஜீவகாருண்மை காட்ட வேண்டும். தன்னுயிர்போல மன்னுயிரையும் போற்றிக் காப்பாற்றி ஆண்டவனுக்கு தெய்வீகப்பணி செய்து நன்றிக்கடன் செலுத்த வேண்டும். செலுத்தி அம்மையப்பனுடைய அருளைப்பெற முயல வேண்டும்.

அம்மை அப்பனுடைய அஐள, கருணையை மிக எளிமையாகப் பெறுவதற்கு மூன்று முறைகளை நாம் பின்பற்றலாம். முதலாவதாக ஈசனுடைய திருப்பொற்பாதம் எப்போதும் நமது தலைக்கு மேலாக இருக்கிறது என்று எண்ணி வணங்குவது.

இரண்டாவது வழி நம்முடைய அறிவைப் பயன்படுத்தி இறைவனது திருநாமமாகிய திருவைக்தெழுத்தையும் "நமசிவாயநம என்றோ சிவாயநம" என்றோ ஓதி வணங்குவது.

மூன்றாவது வழி சிவனடியார்களோடு கூடியிருந்து பஜனை செய்து வணங்குவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இலகுவான மூன்று வழிகளையும் பின்பற்றித் தான் நால்வர் பெருமக்களும் 'நற்றுணையாவது நமச்சிவாயவே' என்ற திருமந்திரத்தை உச்சரித்தே ஈசன் அருள் பெற்று, பாமாலை புனைந்து புகழ்ந்து பாடி செந்தமிழையும், மேன்மைகொள் சைவநீதியையும் விளங்க வைத்து, அரும் பெரும் திருமுறைகளையும் எமக்கு ஈந்து, பேரின்ப விடு பெற்றனர்.

சமயகுரவர் நால்வரும் நல்ல தமிழ் நான்கு பாடினர். கொஞ்சி கொஞ்சு தமிழும் கெஞ்சிக் கெஞ்சி கெஞ்சு தமிழும், மிஞ்சி நின்று மிஞ்சு தமிழும், உருகி நின்று உருகு தமிழும் பாடினார்கள்.

திருஞானசம்பந்தர் மூன்றாம் பருவத்தில் கொஞ்சதமிழில் தோடுடைய செவியன் விடையேறினதைப் மழலை பாடி, அவனை தாயினும் நல்ல தலைவன் என்று புகழ்ந்து, உரைப்பவர், கேட்பவர், ஆகிய நாம் உயர்ந்தோராகிய வானிடைப் பொலிந்து தோன்ற வாழ்த்தி அருளினார்.

திருநாவுக்கரசு நாயனார் கெஞ்சு தமிழில் இரங்கி இரங்கி சலம் பூவொடு தூபமறந்தடிறியேன் என்றும் திருநாமம் ஐந்தெழுத்தும் செய்யுங்கள், தீவண்ணர் திறத்தைப் பேசுங்கள், உண்பதன் முன் மலர்பறித்து உண்ணுங்கள் அருநோய்கள் கெட வெண்ணீறணியுங்கள், நித்தலும் எம்பிரானுடைய கோயில் சூழுங்கள், புலர்வதன்முன் அலகிடுங்கள், மெழுகுங்கள், பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடுங்கள், தலையாரக் கும்பிடுங்கள், சங்கார சயபோற்றி போற்றி என்று கூத்தும் ஆடுங்கள், அலைபுனல் சேர் செஞ்சடையெம்மாதி என்றும், ஆரூரா என்றும் அலறி அலறி திருநாமம் ஐந்தெழுத்தையும் செப்பி, கோமர்க்கே நாமென்று, மீளாவானாய்க் கொய்மலர்ச் சேவடியினையே குறுகுங்கள் என வாழ்த்தி அருளினார்.

சுந்தரமூர்த்தி நாயனார் பித்தா என விழ்த்து பிறை சூடினனை மிஞ்சு தமிழில் பாடி

'மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்குபொழில் மாதோட்ட நன்னகரிற்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யான்வான்றிருக் கேதிச்சரத்தானே''

எனவும் பலபாடல்கள் பாடி ஈசனறாள் காண வாருங்கள் என எம்மையெல்லாம் அழைத்துச் சென்று வாழ்த்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகம் உருகு தமிழில்:

"பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ, பாவியேனுடை
ஊனினை உருக்கி, உன் ஒளி பெருக்கி
உலப்பு இலா ஆனந்தம்" ஆய
தேனினைச் சொரிந்து, புறம் புறம் திரிந்த
செல்வமே! சிவபெருமானே!
யான் உனைத் தொடர்ந்து, முக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது, இனியே?"

எனப்பாடி, தானும் உருகி, எமது இரும்புதரு மனத்தையும் ஈர்த்து ஈர்த்து என்பை உருக வைத்து மெய்தான் அரும்பி விதிர் விதிர்க்க வைத்து, எம் கைதான் தலைவைத்து, கண்ணீர் ததும்ப வெதும்பி நிற்க பாசவேரனுக்கும் பழம் பொருளின் கழல் இணைகளை கரும்பு தரும் சுவையாகக் காட்டி பேரின்பம் காண எம்மை அழைத்துச் சென்று வாழ்த்துகிறார்.

ஆகவே நாவல்வர் பெருமக்கள் தந்த நான்கு தமிழையும் கற்றுணர்ந்து அவர்கள் ஆற்றிய தெய்வீகப் பணிகளை நாமும் பின்பற்றி இயன்றளவு இறைபணி புரிந்து

"ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்படுங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத் துவிகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த,
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வென்னத்துள் நினைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்."

என சுந்தரர் தில்லையில் கண்ட காட்சியை நாமும் காண எமது புலன்களை அடக்கி தியானம் செய்து, மனதைக் காற்றில் அசைய விடாமல் உள்ளத்தில் ஈசன் உள்ளான்.

என உணர்ந்து தெய்வத்தைக் கண்டு தெய்வப் பணிபுரிந்து தமிழையும் சைவத்தையும் போற்றி வாழ்ந்து இறைவனடி சேர்வோம்.

*மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்
சைவ முன்னேற்றச் சங்கம் (U.K.)
"சைவநெறிக் கருத்துணர்வினூடாகச் சமூகசேவை"
SAIVA MUNNETTA SANGAM (U.K.)
"Community Service Through Hindu Concern"
2 Salisbury Road, Manor Park, London E12 6AB
Tel: (01279) 757074 / 0181 - 924 8492 Fax : (01268) 561805
Registered Charity No: 292085

# சோதனைகள் வேதனைகள் மத்தியில் சாதனை படைத்த செயல் வீரர்

கொம்பனித் தெருவாழ் சைவத் தமிழ் மக்களுக்கு இருகண்களாகத் திகழ்வது அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலும் – சைவ முன்னேற்றச் சங்கமுமாகும். இவ் இரு தெய்வீக ஸ்தலங்களும் இல்லா விட்டால் கொம்பனித் தெரு வாழ் சைவத் தமிழ் மக்களின் குறிப்பாக இங்கு வாழும் இளம் சிறார்களின் எதிர்காலம் ஓர் கேள்விக் குறியாக மாறி இருக்கும் என்பதில் ஐயமில்லை.



இவ் ஹரு ஸ்தாபனங்களின் உயர்விற்கும், வளர்ச்சிக்கும் இன்றுபார் போற்ற மணிவிழாக் காணும் மணி அண்ணரின் பெரும் பங்களிப்பினை எவராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. தன் வாழ்நாளின் 40 ஆண்டுகளை இப்பணிகளுக்காக இரவு பகலாக சேவையாற்றியுள்ளார்கள் இப் பேர்ப்பட்ட நல்ல உள்ளம் உள்ள ஒருவரை எம் வாழ் நாளில் காண்பது மிக கடினம் தன்வீடு தன்மனைவி தன்பிள்ளைகள் தன் உறவினர் தன் தொழில் என்று பாராது தூற்றலுக்கும் – போற்றலுக்கும் மத்தியில் போற்றுபவர் போற்றட்டும் தூற்றுபவர் தூற்றட்டும் நான் பணி செய்வேன் பலனை எதிர்பாரேன், தன்னால் ஒன்றும் நடைபெறவில்லை திருவருளின் வழிகாட்டலாலும் – பெரியவர்களின் வழிகாட்டலாலுமே இப்பணியை செய்து வருகின்றேன் என்று அடிக்கடி கூறுவார்.

மணியண்ணர் அவர்கள் எனக்கு உறவினரோ அன்றி ஓர் ஊரைச் சேர்ந்தவரோ – ஓர் பாடசாலையில் படித்தவரோ இல்லை. எப்படி அவருக்கும் எனக்கும் தொடர்பு ஏற்பட்டது? அவர் இருபாலையில் பிறந்தவர் நான் பன்னாலையில் பிறந்தவன் நான் இறுதிப் படிப்பை பதுளையில் கற்றேன் அவர் இறுதிப் படிப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாயில் கற்றார் இருந்தும் இருவரும் எப்படி இறைபணியில் ஒன்றிணைந்தோம்? ஆம் அதுதான் திருவருளின்புதுமை 1964ம் ஆண்டளவில் கொம்பனித் தெரு முருகப் பெருமான் சந்நிதியில் ஒன்றிணைந்தோம் அவர் சை. மு. ச தில் தொடர்ச்சியாக பொதுச் செயலாளராகவும் நான் பத்து அண்டு காலம் தொடர்ச்சியாகச் சை. மு. ச. பொதுப் பொருளாளராகவும் பணியாற்றிய பெருமை தான் எம் இதயப்பிணைப்பை ஏற்படுத்தியது. அக்காலகட்டத்தில் சங்கத்திற்கென்றோர் பணிமனையில்லை – மண்டபம் இல்லை. முருகப் பெருமான் ஆலயத்தை தஞ்சமாகக் கொண்டு பணியாற்றினோம் எமது சங்கப்பணியின் வளர்ச்சி கண்ட சிலரால் எமது பணி ஆலயத்தில் தொடர முடியாது போய் விட்டது. வாடகை மண்டபங்களிலும் றியோ மண்டபத்திலும் எமது பணியை தொடர வைத்தார் மணியண்ணனின் சமயோசித புத்தியினாலும் விடா முயற்சியாலும் முருகப் பெருமானின் திருவருளாலும் பொது மக்களின் பூரண ஒத்துழைப்பினாலும் எமது சங்கத்திற்கென்றோர் தனி இடம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற பெருவாஞ்சையோடு செயல்பட்டார். அவருக்கு பக்கபலமாக, குறிப்பாக கொம்பனித் தெருவாழ் சைவத் தமிழ் மக்களுக்கு சிறப்பாக சைவப் பெருந்தகைகள் திருவாளர்கள் அ. நவரத்தினம் (Rio) டாக்டர் இந்திரா சிவயோகம், ரங்கநாதன் Q C, சி. பாலேந்திரா, ஏ. திருநாவுக்கரசு, ஸ்ரீகரி ஸ்ரீபவன் ஸ்ரீரங்கராஜா வ. சி. செல்லையா ஆகியோர் இதயசுத்தியுடன் ஒத்துழைப்பும் நல்லாதரவும் வழங்கினார்கள்.

முடிக்குரியகாணி :-

சங்கம் ஆற்றிவரும் அளப்பரிய சமய சமூகப் பணிகளை கண்ணுற்ற கொம்பனித்தெரு வட்டார மாநகர சபை உறுப்பினரும் முன்னாள் நகர பிதா டாக்டர். குமாரன் இரத்தினம் அவர்களின் அன்புப்பாரியாருமான திருமதி. மீனா இரத்தினம் அவர்கள் சங்கத்திற்கென்றோர் தனி மண்டபத்தை உருவாக்க உதவுமுகமாக, காணி விவசாய அமைச்சிடமிருந்து முடிக்குரிய நிலம் ஒன்றினை (17.5 பேச்) பெற்றுத் தந்தார்கள்.

இம் முடிக்குரிய நிலம் கொழும்புப் பிராந்திய அரசாங்க அதிபரின் ஆணைப்படி (அவரது கோவை இல : L. H/ 4665) கச்சேரி அளவையாளர் திரு. ஐ. பி. வித்தான அவர்களால் 21.12.70 ல் சங்கத்திற்கு எழுத்து மூலம் கையளிக்கப்பட்டது.

கட்டடக்குழு :-

அரசு அன்பளித்த நிலத்தில் வனப்புறு இருமாடிக் கட்டடத்தை உருவாக்க உதவுமுகமாக அசோசியட் சினிமாஸ் லிமிடெட் அதிபரும் சங்கக் காவலர்களில் ஒருவருமான திரு. அ. நவரத்தினம் அவர்களைத் தலைவராகவும், டாக்டர். திருமதி. இ. ஸ்ரீஸ்கந்தராஜா சிவயோகம் அவர்கள், திருமதி. மீனா இரத்தினம் அவர்கள் ஆகியோரைத் துணைத் தலைவராகவும், டாக்டர். ஸ்ரீபவன் ஸ்ரீஸ்கந்தராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைச் செயலாளராகவும் கொண்ட ஓர் விரிவானக் கட்டடக்குழுவும் – மற்றும் 3 உப குழுக்களும் திரு. செ. இரங்கநாதன் Q. C. அவர்கள் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

அமைக்க இருக்கும் கட்டடத்தின் மேல்மாடியில் பூசையறையும், தியான அறையும், சுமார் 600 பேர் கொள்ளக்கூடியதான மண்டபத்தையும், கீழ்மாடியில் பணிமனை, குழுக்கள் கூடும் மண்டபம், விசேட விருந்தினர்கள் தங்கும் அறைகள் உள்ளடங்கிய மாதிரிக் கட்டட வரை படம் ஒன்றும் கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜா அவர்களால் வரைவிக்கப்பட்டது.

இக்கட்டடத்திற்காக சுமார் இரண்டு இலட்சம் ரூபா பொது மக்களிடமிருந்து சேர்ப்பதென தீர்மானிக்கப்பட்டு, நடைபெற்ற ஆலோசனைக் கூட்டங்களில் பல்வேறு சமயங்களில் தலைமை தாங்கியும், ஆலோசனை வழங்கியும், நிதி சேகரிக்கும் அட்டைகளில் தனது கையொப்பத்தையிட்டு உதவியதன் மூலமும் திருமதி மீனா இரத்தினம் அவர்கள், சங்கக் கட்டடம் விரைவில் உருவாகுவதற்கு உறுதுணை அளித்தார்கள்.

## அடிக்கல் நாட்டு விழா :-

01. 02. 71 ல் சங்கக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா வைபவமும் மிகவும் கோலாகலமாக நடந்தேறியது. அடிக்கல் நாட்டுப் பொருட்கள் அடங்கிய மங்கலக் கலசம் கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமான் திருவடியிலிருந்து, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க ஊர்வலமாக காணிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பிரம்ம ஸ்ரீ மகாதேவாக் குருக்கள் அவர்கள் சமயாசாரப்படி கிரியைகளை நடத்தி வைத்தார்கள். ஈழத்தின் பல்வேறு சைவஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் – வணிகப் பெருமக்களும், சைவப் பெருமக்களும் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்ட இவ்வைபவத்திற்கு, சைவப் பெரியார் உயர்திரு. செ. ரங்கநாதன் Q.C. அவர்கள் தலைமை தாங்கினார்கள். சங்கக் காவலரும் – கட்டடக் குழுத் தலைவருமான சைவப் பெரியார் திரு. அ. நவரத்தினம் அவர்கள் முதல் அடிக்கல்லை நாட்டினார்கள். அவர்களைத் தொடர்ந்து அறுபதுக்கு மேற்பட்ட சைவப் பெருமக்கள் அடிக்கல் நாட்டினார்கள். வைபவத்தைத் தொடர்ந்து நடைப்பெற்ற பொதுக் கூட்டத்தில் முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. த. நீதிராஜா அவர்கள், கலாநிதி ஸ்ரீ பவன் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள், திருமதி. மீனா இரத்தினம் அவர்களின் அன்புப் புதல்வி ஆகியோர் உட்பட சைவப் பெரியார்கள் பலர் உரையாற்றினார்கள்.

## நிதி சேகரித்தல் :-

நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதாரக் கஷ்டம் காரணமாக திட்டமிட்டபடி கட்டவிருந்த இருமாடிக் கட்டடம் கைவிடப்பட்டது. ஓர் மண்டபம் மாத்திரம் கட்டும் பணிக்கு நிதி சேகரிக்கப்பட்டது. உதவிப்படக்காட்சிகள் மூலமும் – ரிக்கற் விற்பனையாலும் – சதுர அட்டை விற்பனையாலும் – சர்வோதய பாத்திர மூலமும் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்கள் மனமுவந்தளித்த நன்கொடைகளாலும் நிதி சேகரிக்கப்பட்டது. இம்முயற்சி வெற்றி பெற ஆட்சிக்குழு உறுப்பினர், கட்டடக் குழு அ, ஆ, இ பிரிவினர், சங்கசமய பாடசாலை 'மாணவர் மன்றம்' 'தொண்டரணியினர்' ஆகியோர் முன்னின்று உழைத்தார்கள். எனினும் இப்பணி வெற்றிபெறத்தக்க முறையில் ஓயாது – ஒளியாது பணி புரிந்த பெருமை கலாநிதி ஸ்ரீபவன் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களையே சாரும்.

### மேலதிக முடிக்குரிய காணி :-

சங்கத்திற்கு அரசு முன்பு வழங்கிய 17.5 பேச் நிலத்தோடு, அருகிலிருந்த முடிக்குரிய 4.5 பேச் நிலத்தையும் மேலதிகமாக சங்கத்திற்கு அரசு 23. 06. 72ல் வழங்கியது. இக்காணியும் முன்பு வழங்கப்பட்ட முறைப்படியே வழங்கப்பட்டது. மேற்கொண்டு வழங்கிய நிலத்திலிருந்த P. W. Dக் குரிய சிறு பண்டகசாலையை அரசு அப்புறப்படுத்தி, அந்நிலத்தை சங்கத்திற்கு கொடுத்தது என்பதும், இம்மேலதிக காணி வழங்கும் சமயம் கட்டடத்தின் முக்காற்பங்கு வேலை முடிந்து விட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவை.

### மண்டபத்தையும் காணியையும் அரசு சுவீகரித்தது :-

பெருமனதுடன் அரசு தந்துதவிய நிலத்தில், பொது மக்களது அன்றாடம் உலைக்கிடும் பிடி அரிசி மூலமும், பொருளாதாரக் கஷ்டத்தின் மத்தியிலும் – பொதுப் பணியை உள்ளத்திற் கொண்டு, உதவிய நிதி மூலமும் எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் சேர்க்கப்பட்ட சுமார் எழுபதினாயிரம் ரூபாவுக்கு மேல் செலவிடப்பட்டுகட்டிய மண்டபத்தை எதுவித முன்னறிவித்தலோ – எதுவித காரணமோ இன்றி திடீரென 06.09.72 காலை 9 மணியளவில் அரசு சுவீகரித்துக் கொண்டது. இத்துயரச் செய்கை சங்கத்திற்கு மாத்திரமன்றி ஈழம் வாழ் சைவத்தமிழ் மக்கள் அனைவருக்குமே பேரதிர்ச்சியாக இருந்தது.

### மீண்டும் மண்டபத்தை பெற முயற்சி :-

அரசு சுவீகரித்த காணியையும், மண்டபத்தையும் மீண்டும் சங்கத்திற்குத் திருப்பிப் பெறும் முயற்சியில் அகில இலங்கை இந்து மாமன்றம், மற்றும் பல்வேறு சைவசமய. ஸ்தாபனங்கள் – சைவசமயத் தலைவர்கள் எடுத்த எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை வெற்றியளித்ததாகத் தெரியவில்லை. தலைநகரில் உள்ள சைவ ஸ்தாபனங்களை எல்லாம் ஒன்று கூட்டி, இதில் தலையிட்டு நீதி கிடைக்கச் செய்யுமாறு சங்கம் செய்த முயற்சியும் பலனளிக்கவில்லை. எனினும் சங்கம் இவ்விடயமாக இன்றுவரை தொடர்ந்து பலவழிகளில் முயற்சி செய்து கொண்டே இருக்கின்றது. சம்பந்தப்பட்ட அமைச்சில் உள்ள அதிகாரிகளையும், அமைச்சர்களையும் தொடர்பு கொண்டு வருகின்றோம். இவ்விடயத்தில் அரசாங்கத்திடம் நீதியும் – நியாயமும் கிடைக்கும் வண்ணம் வழக்கறிஞர் திரு. ஆ. செ. நடராசா அவர்களும் வைத்திய கலாநிதி திருமதி. இ. ஸ்ரீஸ்கந்தராஜா சிவயோகம் அவர்களும் ஓயாது பணியாற்றி வருகின்றார்கள். பெரும்பணிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோடியாகத் திகழ்ந்த திருமதி மீனா இரத்தினம் அவர்களையும் இவ்விடயமாக சங்கம் பல முறை நாடியும் அவர்கள் இவ்விடயத்தில் பாராமுகமாக இருப்பது ஏனோ? தெரியவில்லை. எனினும், இவர்கள் இவ்விடயத்தில் தனது செல்வாக்கைப் பயன்படுத்த முன்வருவார்களானால் நிச்சயம் நீதி கிடைக்கும். நீதி கிடைக்குமானால் காலமுள்ளவரை நாமும் சைவ உலகமும் இவரை மறவோம்.

## அதிர்ச்சி தரும் செயல் :-

சுவீகரிக்கப்பட்ட காணியையும் – மண்டபத்தையும், திருப்பிப் பெற சங்கம் எடுத்துவரும் பெரும் முயற்சியின் மத்தியில், இம் மண்டபத்தை பிறிதொரு மதஸ்தாபனத்திற்கு கையளிக்கும் வகையில் அரசு செயல் பட்டது. 01. 06. 73 பிற்பகல் 4.00 மணிக்கு அமைந்த சுப நேரத்தில் இம்மண்டபத்தை மேற் குறிப்பிட்ட ஸ்தாபனத்திற்கு கையளிக்கவும் அதைப் பொறுப்பேற்க அத்தாபனத்தைச் சார்ந்த ஆண்கள் பெண்களடங்கிய சுமார் 30 பேர் கொண்ட குழுவினர் சங்கவளவு முன்றலில் கூடி நின்றனர். தெய்வாதீனமாக சங்கத்திற்கு அன்று காலை கிடைத்த இவ்வதிர்ச்சியான தகவல் பெரும் வேதனையையும் – சுறுசுறுப்பையும் ஏற்படுத்தியது. பரிஸ்டர் திரு. சிவானந்தம் அவர்களது உதவியுடன் மாண்புமிகு தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் அவர்களை 01.06.73 காலை 10–30 மணியளவில் அவர்களது அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து இவ்வதிர்ச்சி தரும் செயலில் இருந்தும் வேதனையிலிருந்தும் விடுவிக்குமாறு விடுத்த பணிவான வேண்டு கோளுக்கிணங்கவும் கலாநிதி ஸ்ரீபவன் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களும் கலாநிதி திருமதி இ. ஸ்ரீஸ்கந்தராஜா சிவயோகம் அவர்களும், மாண்புமிகு காணி விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொபேகடுவ அவர்களை 01.06.73 பிற்பகல் 2–30 மணியளவில் சந்தித்து எடுத்த பகீரத முயற்சியின் காரணமாகவும், இவ்வதிர்ச்சி தரும் சோதனைகளிலிருந்தும் விடுபெற்றோம்.

## மணிமண்டபம் பறிமுதல் :-

1972ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 26ந் நாள் சங்க வரலாற்றில் மட்டுமல்ல, சைவத் தமிழ் உலகிற்கோர் பேரதிர்ச்சி தரும் நாளாக அமைந்தது. ஆம் அந்நாள் தான் ஏழை எளிய மக்களின் கண்ணீராலும் – செந்நீராலும் கட்டப்பட்ட சங்க மணிமண்டபம் சென்ற அரசினால் பறிமுதல் செய்யப்பட்டது. இந் நிகழ்ச்சி நீதி, நியாயம் –சத்தியத்திற்கோர் சோதனையாக அமைந்தது. பறிமுதலான மண்டபத்தை மீண்டும் திரும்பப் பெற சங்கமும் – சைவ உலகமும் மேற்கொண்ட பல முயற்சிகளும் பயனளிக்காத நிலையில் அரசு நஷ்ட ஈடாக வழங்கிய 60,000/– பெறுவதைத் தவிர வேறு வழியின்றி இப்பணத்தை வேதனையுடன் சங்கம் பெற்றுக் கொண்டது.

## நீதிநிலைத்தது:-

நீதி, நியாயம், சத்தியம் தோற்றதாகச் சரித்திரம் அமையக் கூடாதென எண்ணிய முருகப்பெருமானின் பெருங் கருணையினாலும். ஏழு ஆண்டுகளாக சங்கம் மேற்கொண்ட இடையறாத பகீரத முயற்சியினாலும் சங்கத் தலைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr. திருமதி இ. ஸ்ரீஸ்கந்தராஜா சிவயோகம் அவர்களும் சங்கத் துணைத்தலைவர் சட்டத்தரணி திரு. சி. பாலேந்திரா அவர்களும் மேற்கொண்ட அரும்பணியினாலும் இன்றைய அரசின் மாண்புமிகு பிரதமர் திரு. R. பிரேததாச அவர்களின் பெருந்தன்மையினாலும் மாண்ட எம் மண்டபத்தை மீளப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. நஷ்ட ஈடாக சங்கத்திற்கு வழங்கப்பபெற்ற (60,000/–) அறுபதினாயிரம் ரூபாவையும், மண்டபத்தில் மின்சாரம், தண்ணீர், மலசலகூடம், குளியல் அறை, பண்டகசாலை, ஆகிய அமைக்கப்பெற்று மண்டபத்தை முற்றுப் பெறச் செய்த வகையில் அரசு செலவு செய்த (61,000/–) அறுபத்தி ஓராயிரத்தையும் சேர்த்து (1,21,000/–) ஒரு லட்சத்து இருபத்தி ஓராயிரத்தையும் பகுதி பகுதியாக சங்கம் செலுத்தியே மண்டபத்தை மீளப் பெற வேண்டி நியாயமான நிலையை சங்கம் ஏற்றுக் கொண்டது. சங்க வங்கிக் கணக்கிலிருந்த அறுபதினாயிரம் ரூபாவுடன், வணிகப் பெருமக்கள் பேராதரவுடன் அளித்த நிதியைக் கொண்டும் முழுப் பணத்தையும் செலுத்த வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் பற்றாக் குறையான 12,000/– சங்கம் கடனாகப் பெற்றே செலுத்த வேண்டியிருந்தது. 23.01.79 செவ்வாய்க்கிழமை காலை முழுத் தொகைக்குரிய காசோலையை சங்கம் கொழும்பு மாநகர சபையிடம் கையளித்தது.

### மண்டபம் கையளிப்பு :-

24. 01. 79 புதன்கிழமை காலை மண்டபம் சங்கத்திடம் மீண்டும் கையளிக்கப்பட்டது. இவ் வைபவம் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது. சங்கத் தலைவி Dr. திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா சிவயோகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சங்கக் காவலரும், கட்டடக்குழு தலைவருமான திரு. அ. நவரத்தினம் அவர்கள், துணைத்தலைவர் திரு. சி. பாலேந்திரர் – பொதுச் செயலாளர் ஆகியோர் உரையாற்றினார்கள். கொழும்பு மாநகரசபை அதிகாரியால் உத்தியோக பூர்வமாக கட்டடத்தின் சாவிக் கொத்து சங்கத் தலைவியிடம் கையளிக்கப்பட்டது. நன்றிப் பெருக்கோடு சாவிக் கொத்தைப் பொறுப்பேற்ற தலைவி கட்டட நிதிக்காக ஆயிரம் ரூபாவை பொதுப் பொருளாளர் திரு. K. கனகநாயகத்திடம் கையளித்தார். இந் மனநிறைவு நிறைந்த மகிழ்ச்சி வைபவத்தில் ஆட்சிக்குழு உறுப்பினர் – மாதரணி – தொண்டரணி மற்றும் அங்கத்தவர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### நேர்த்திக் கடன் :-

(07. 02. 79 புதன்) வள்ளி தெய்வானை சமேதரராய் வீற்றிருந்து வைதாரையும் வாழவைக்கும் எம் பெருமான் கொம்பனித்தெரு திருஅருள்மிகு சிவசுப்பிரமணியப் பெருமானுக்கு 07.02.79 புதன் மாலை 5 மணிக்கு சங்க மண்டபத்தை மீளப் பெற்றுத் தந்த நன்றிக் கடனாக நேர்த்திக் கடனாக ஓர் விசேட அபிஷேகம் சங்கத்தால் செய்விக்கப்பட்டது.

### கிருகப் பிரவேச சாந்தி வைபவம் :-

(7.2. 79 புதன்) ஏழு ஆண்டுகளாக பாவனையற்றுக் கிடந்த மண்டபத்தில் 7. 2. 79 புதன் 6.00 மணியளவில் சிவஸ்ரீ குஞ்சிதப்பாதக் குருக்கள் அவர்களால் கிருகப் பிரவேச சாந்தி வைபவம் நடாத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுவிழா :-

(10. 2. 79 சனி) கிருகப் பிரவேச சாந்தியைத் தொடர்ந்து அருட் பெரும் ஞானவள்ளல் எங்கள் குருஜி – ஸ்ரீ ஹரிதாஸ்கிரி சுவாமிகளின் தெய்வீக கட்டளைப்படி 10. 2. 79 சனிக்கிழமை தைப்பூசத் திருநாளன்று காலை 7.20 முதல் 8.00 மணி வரை அமைந்த மங்கல சுபமுகூர்த்தத்தில். அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் இருந்து ஆயிரக்கணக்கான அன்பர்கள் புடைசூழ மங்கலப் பொருட்கள் பணிமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஸ்ரீ நாராயண சாஸ்திரி அவர்களால் பூசை செய்யப்பட்டது. இவ் வைபவத்திற்கு சிறப்பும் – பொலிவும் ஊட்டும் வகையில் குருஜி அவர்கள் வருகை தந்து ஆசிர்வதித்ததோடு அமையாது அவர் கையால் பால் பொங்கப்பட்ட பெறுதற்கரிய இப் பெரும் வாய்ப்பை புண்ணியத்தை யாரும் பெறாத வகையில் எமது சங்கம் பெற்றுக் கொண்டது.

முதல் நிகழ்ச்சி :-

(14. 2. 79 புதன்) காலமெல்லாம் சிவநெறிக்கும் செந்தமிழுக்கும் சிறந்த தொண்டாற்றி, சிவபதமெய்தி, சிவசோதி அருட் சோதி அம்பலவாணர் அருள் நிழலில் ஆனந்தத்துயில் நிகழ்த்தும் முன்னாள் அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவரும் – சங்கக் காவலரும் – உயர்நீதிமன்ற நீதியரசருமான சிவநெறிச் செல்வர் – சைவசிகாமணி அமரர் பொன் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களினதும் அவர் அன்புப்பாரியார் திருமதி கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களினதும் 10வது நினைவு தினத்தையொட்டி ஓர் நினைவுச் சொற் பொழிவு 14. 2. 79ல் நடைபெற்றது. முன்னாள் நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வைபவத்தின்போது சிவதமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் "நக்கீரருக்கு காட்சி கொடுத்த முருகன்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள். இவ் வைபத்தின்போது தபோவனஜோதி ஸ்ரீ ஹரிதாஸ்கிரி சுவாமிகள் வருகை தந்து ஆசீர்வதித்தார்கள்,

வாரியார்வருகை :-

(1. 4. 79 ஞாயிறு) காலத்துக்கு காலம் தமிழ் கூறும் நல்லுலகில் இருந்து ஈழத் திருநாட்டிற்கு வரும் ஞானிகளையும் அறிஞர் பெருமக்களையும் சங்கம் பயன்படுத்த என்றுமே தவறியதில்லை. அவ்வரிசையில் பாரதத்தாயின் தவப்பெரும் ஞானக்கடல் அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களை 1. 4. 79ல் எமது புதிய மண்டபத்திற்கு அழைத்து "நால்வர் காட்டிய நன்னெறி" என்னும் பொருள் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றப்பட்டது.

சங்கத்தால் மட்டுமல்ல முருகன் ஆலயத்தின் அறங்காவலர் பதவியை ஏற்று 14 ஆண்டுபட்ட துயர் – வேதனை எழுத்தில் அடங்காது கோவில், சங்க உறவை வளர்த்த பெருமையுடன் இராஜ கோபுரம் – தங்கத்தேர் பொலிவிலும் உள் மண்டபங்கள் இவரின் இடைவிடா முயற்சியில் நிறைவெய்தியது குறிப்பிடத்தக்கது காலத்துக்கேற்ற தொண்டர்களையும் தலைவர்களையும் ஒன்றிணைத்து பயன் தரும் பணியை சோதனையிலும் வேதனையின் மத்தியிலும் நிறைவு செய்யும் பெருமை மணியண்ணரையே சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி மாஸ்டருக்கு ஒரு மணி விழா

திருமதி. இராஜேஸ்வரி இராஜேந்திரன்
*சங்க ஆரம்ப கால உறுப்பினர், நால்வர் சமய பாடசாலை பழைய மாணவி,*
*தொண்டரணி உறுப்பினர், நால்வர் சமய பாடசாலை ஆசிரியர்,*



கண்ணிற்கும், கருத்திற்கும், இனிமை தருவது திரு விழா. ஊர் மக்கள் பலரும் ஒன்றுபட்டுச் செய்வது விழா. சிலப்பதிகாரத்திலே இளங்கோ வடிகள் எடுத்தது இந்திரவிழா. நாம் எடுப்பதோ மணிமாஸ்டருக்கு ஒரு மணிவிழா. இவ்விழா எடுப்பது சாலச் சிறந்தது.

புண்ணியம் மிகுந்த நம் நாட்டில் பற்பல சான்றோர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் பிறர் அறியாத வண்ணம் நீறு பூத்த நெருப்புபோல் வாழ்ந்தார்கள். அப்படி வாழ்ந்தவர்களை நம்மால் அறிய முடிவதில்லை. வானத்தில் பறவை சென்ற வழியையும், தண்ணீரில் மீன் சென்ற வழியையும் எப்படி காணமுடிவதில்லையோ, அது போல் ஞானிகள் வாழ்ந்த முறையையும், நால்வர் காட்டிய வழியையும் எமக்கு எடுத்துக் காட்டியவர் இந்த க. பாலசுப்பிரமணியம் அவர்கள்.

இவர் யாழ்ப்பாணத்தில் நல்லூரிலே கந்தையா அவர்களுக்கும், நாகரத்தினம் அம்மையாருக்கும் மகனாக அவதரித்தார். இவர் இரு பாலையில் கற்பக விநாயகர் ஆலயத்தில் அருகில் வாழ்ந்து வந்தார். இவர் ஆரம்ப கல்வியை கல்வியங்காடு சைவ வித்தியாசாலையிலும், மேற் கொண்டு படிப்பை யாழ்ப்பாண மத்திய கல்லூரியிலும் கோப்பாய் கிறிஸ்த்வ கல்லூரியிலும் கற்று முடித்தார். பின்னர் இருபாலை கற்பக விநாயகர் கோயிலில் திருப்பணிச் செயலாளராகவும் கடமையாற்றினார்.

இவர் 1959 ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பில் வாழ எத்தனித்தார். கொம்பனித் தெரு அருள் மிகு சிவ சுப்பிரமணிய கோயிலுக்கு சாதாரண மனிதனாகவே வந்த இவர் தொண்டாலும், அன்பாலும் மக்களிடம் நிரந்தர இடத்தைப் பிடித்துக் கொண்டார். இவர் 1966 ஆண்டு தொடக்கம் 1996ம் ஆண்டு வரை தன்னால் இயன்ற வரை மழையென்றும், வெயில் என்றும் பாராது உழைத்த உத்தமர்.

சங்கத்திற்கென பணிமனை இல்லாத காரணத்தினால் றியோ பட மாளிகையிலும், கொம்பனித் தெரு முஸ்லீம் நூலகத்திலும், சமய பாடசாலையும், நவராத்திரி விழாக்களையும் நடாத்தி வந்தார். பின்னர் தொண்டர்களின் உதவியாலும், சர்வோதயம் என்ற பெயரால் பிடிஅரிசியை ஒவ்வொரு சைவமக்களிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று, கொம்பனித் தெரு மக்களின் வியர்வையும், இரத்தமும் சீமேந்து கல்லுட சேர்ந்து கட்டப்பட்ட கட்டிடத்தை கட்டிமுடித்தார். 1996ம் ஆண்டு அக்கட்டிடத்திர் நால்வர் மணி மண்டபம் என்ற பெயரையும் சூட்டினார்.

1969ம் ஆண்டு யூலை 21ந் திகதி சந்திரனில் முதல் காலடி வைத்த அப்போலா 11 நீல் ஆம்ஸ் ரோங் அவர்களை நினைவுபடுத்தும் முகமாக தொண்டரணியை ஆரம்பித்து தளபதி என்ற பதவியை வகித்து தொண்டர்க கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தின் மூலம் வழி நடாத்தின அதோடு நின்று விடாமல் கொழும்பில் நீதிபரசராக பணியா ற் ஸ்ரீஸ்கந்தராஜாவினரதும், கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜாவின் புதல்வியான Dr. ச மூர்த்தியின் தலைமையில் ஒரு மாதரணியை உருவாக்கினார். வீட்டுக்குள் அடைப்பட்டு கிடந்த பல மாதர்களை ஒன்று திரட்டி வெளி உலகத்திற்கு கொ ன வந்த பெருமை இந்த மணிமாஸ்டரை சாரும்.

............ நவநிலையம் என்ற பெயரில் பல மாதர்களை ஒன்று திரட்டி Plast bags, Flower making, பலவர்ணங்களில் Carpet செய்தல் முதலி தொழில்களையும், தையல் மெசின்களை வாங்கி தையல் தைப்பதற்கும் உதவியா இருந்தவரும் இவரே. இவருக்கு உதவியாக பிரபல தொழிலதிபர் திரு. நவரட்ணம் ஐயாவும் ஆதரவு நல்கினார்.

நால்வர் சமய பாடசாலை மாணவர்களின் அறிவை விருத்தி செய்யும் நோக்கத்தோடு கொழும்பு சை. மு. ச. நால்வர் நூலகம் ஒன்றையும்...................... ஆண்டு நால்வர் சமய பாடசாலை மாணவர்களுக்கு அறுசுவை உணவு அளிக்க வேண்டும் எண்ணத்தில் தனவந்தரின் உதவியோடு சத்துணவு திட்டத்தையும்.............. ஆரம்பித்த பெருமையையும் இவரைச் சேரும்.

மாணவர்களின் அறிவுக் கண்களைச் திறக்கச் செய்த இவரிடம் பணிவு என்ற நற்குணம் காணப்பட்டது. அதனால் தான் பணிவுடையார் தமது வாழ்வில் சிறப்புறுவார் என்று வள்ளுவரே கூறியுள்ளார். பணிவதனால் ஒன்றும் நமக்கு இழிவு வந்து விடாது. அது நமது பெருமையே புலப்படுத்தும். அந்த வகையில் வாழ்ந்து காட்டியவர் இந்த மணி மாஸ்டர். குழந்தைகளுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பவரை அவரை 'மாஸ்டர்' என்று அழைப்பது வழக்கம். ஆனால் இவரோ பாடம் கற்பிக்காமலே கொம்பனித்தெரு மக்களால் மணிமாஸ்டர் என்று அழைக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கொழும்பு சை. மு. சங்கத்தின் அறங்காவலராகவும், துணைத்தலைவராகவும், பேலியாகொட சை.வ.மு. சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும், சிலாபம் சை.மு.சங்கத்தில் அங்குரார்ப்பண ஆலோசகராகவும் கடமையாற்றினார்.

மனிதர்கட்கு இன்றியமையாத தேவைகள் மூன்று அவையாவன :- இம்மை, மறுமை, வீடு என்பனவாகும்.

I. இந்த உலகத்தில் நல்வாழ்வு

II. மேல் உள்ள சுவர்க்க உலகில் இன்ப வாழ்வு

III. அதற்கு மேல் முத்திப் பேறு.

இந்த மூன்று நலன்களையும் தரவல்ல தெய்வம் முருகப் பெருமானே என்று நினைத்து 1984ம் ஆண்டு தொடக்கம் 1998ம் ஆண்டு ஜனவரி வரை அறங்காவலர்ச் சபை செயலாளராக இருந்தார் என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பரின் வாக்கின்படி முருகனுக்கு செய்யும் தொண்டில் முழு மூச்சாக ஈடுபட்டார். இந்தியாவிலிருந்து ஞானிகளையும், மேதைகளையும் வரவழைத்து அவர்கள்மூலம் கொம்பனித்தெரு மக்களுக்கு சமய உணர்வை ஏற்படுத்தினார். மனிதன் தெய்வீக நிலைக்கு உயர வேண்டும். என்றும் இளைஞர்கள் சுவாமியை தோளில் சுமக்க வேண்டும் என்ற முறையை ஏற்படுத்தியவரும், இந்த திரு. பாலசுப்பிரமணியனே ஆகும்.

மனமது செம்மையானால் மந்திரம் தேவையில்லை, தந்திரம் தேவையில்லை, யந்திரம் தேவையில்லை, மருந்தும் தேவையில்லை அந்த அளவிற்கு தூய உள்ளம் வலிமையும் பெறவல்லது. தூய உள்ளம் கொண்டவர்கள் இவ்வுலகில் எதனையும் சாதித்து விடலாம். ஆத்மீக பலமும், தன்னம்பிக்கையும் இவரிடம் இருந்தபடியால் இவரை ஒரு செயல் வீரர் என்றே கூற வேண்டும்.

சுவாமி ஹரிதாஸ் கிரி அவர்கள் கொம்பனித்தெரு முருகனுக்கு இராஜகோபுரம் தேவை என்று அன்று கூறினார். அவரின் வாக்கை பொன்வாக்காக நினைத்து இராஜ கோபுரம் கட்டும் முயற்சியில் ஈடுபட்டார். இராஜ கோபுர திருப்பணிச் செயலாளராக இருந்து 81அடி உயரமுள்ள இராஜ கோபுரமும், 51அடி உயரமுள்ள இரு மருங்கு மணிக் கோபுரம் கட்டும் பணியை பல மக்களின் உதவியோடு செய்து கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதை நிலை நாட்டியவரும் இவரே என்று கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997ம் ஆண்டு தொடக்கம் 1998ம் ஆண்டு வரை தேர்த் திருப்பணிச் செயலாளராக இருந்தார். தொழிலதிபர் திரு. திருக்குமார் நடேசன் அவர்களின் துணையுடன் கொம்பனித்தெரு முருகனுக்கு தங்கத்தேரை உருவாக்கினார்.

மேலும் சமய, சமூகப் பணியில் ஈடுபட்ட இவர் அகில இலங்கை இந்து மாமன்ற சமயவிவகார குழுவில் செயலாளராகவும், தொடர்பு முகாமைப் பேரவை உறுப்பினராகவும் கடமையாற்றினார். 10 ஆண்டு காலமாக ஆடிவேல் பாத யாத்திரை அடியார்களின் துணையுடன் கொம்பனித் தெரு முருகன் ஆலயத்திலிருந்து, பேலியாகொட பூபால விநாயகர் கோயிலுக்குச் செல்லும் பிரதம ஒழுங்காளராகவும் சேவையாற்றினார்.

இவர் செய்த சேவையின் காரணமாக ஸ்ரீசபரிமலை சாஸ்தா பீடத்தில் 'சிவத்தொண்டன்' என்ற பட்டத்தை மாண்புமிகு J.R ஜயவர்த்தனவால் வழங்கப்பட்டது. பின்னர் இந்து சமய கலாசார திணைக்களத்தின் சார்பில் "இறைபணிச் செம்மல்" என்ற பட்டம் திருமுருக கிருபானந்தவாரியாரால் வழங்கப்பட்டது.

இவருக்கு இலண்டனில் வழங்கப்பட்ட சிறப்புப் பட்டங்கள் பின்வருமாறு.

I. 1997ம் ஆண்டு இலண்டன் மாநகரில் பிரித்தானிய சை. மு. சங்கத்தினால் நடாத்தப்பட்ட 20ம் ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக அழைத்து 'சைவப் புரவலர்' என்ற பட்டம் கலசம் நிர்வாகி வ. இ. இராமநாதன் அவர்களாலும் கலசம் ஆசிரியர் நற்குண தயாளன் அவர்களாலும் வழங்கப்பட்டது.

II. Tooting அம்மன் கோயில் இவரை வரவேற்று பொற்பதக்கமும், சிவநெறிச் செம்மல் என்ற பட்டம் Tooting அறங்காவலர் திரு. சீவரட்ணம் அவர்களால் வழங்கப்பட்டது.

III. இலண்டன் ஈஸ்காம் முருகன் கோயிலில் வரவேற்பும் பாராட்டும் நடைபெற்றது. இலண்டன் சிவயோக நிலையத்தில் வரவேற்பும் பொன்னாடை போர்த்தி பொற்கிழியும் சிவயோக நிலைய தலைவர் திரு. ஆறுமுகம் முருகதாஸ் அவர்களால் வழங்கப்பட்டது. இலண்டன் வோல்றம் பாடசாலையில் பரிசளிப்பும், பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இவரை இலண்டன் I. B.C ஒலிப்பரப்பு நிலையத்தில் வரவழைத்து பேட்டி கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை லண்டன் சை. மு சங்க நால்வர் அகடமியினர் வரவேற்று சிறப்பித்தார்கள்.

இவருக்கு சிவயோக நிலையத்தால் அன்பளிக்கப்பட்ட சுமார் 12 ஆயிரம் ரூபாவும் சங்கத் தலைவரிடம் கையளித்து கலைவிழாவில் பங்கு கொண்ட சங்க மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வாங்கிக் கொடுக்க உதவினார்.

எதைக் குறிப்பிட்டாலும் அடக்கமாக எல்லாம் முருகன் செயல் என்றே கூறும் பழக்கம் இவரிடம் காணக் கூடியதாக இருந்தது.

கடலிலேயுள்ள தண்ணீரை இத்தனை படி என்று அளந்து விடலாம். அதனில் வீசும் அலைகளையும் எண்ணிவிடலாம். வானத்தை அங்குலக் கோலால் இத்தனை அங்குலம் என்று அளந்து விடலாம். ஆனால் இவர் செய்த சேவையை வாய்ச் சொல்லாலும், எழுத்து வடிவாலும் அளக்க முடியாது.

ஆண்டவனை வழிபடுவதைக் காட்டிலும் அடியாரை வழிபடுவது சிறந்தது. ஆண்டவனை வழிபடுவோர்க்கு ஒரு பலன். ஆனால் அடியாரை வழிபடுவோர்க்கு இரட்டை பலன். அடியார்களின் உள்ளக் கோயிலில் ஆண்டவன் உறைகின்றான் என்பதை கிருபானந்த வாரியார் அவர்களே கூறியுள்ளார். அடியாருக்குத் தந்தது ஆண்டவனைச் சேரும் என்ற வாக்கின் படி மணிமாஸ்டருக்கு செய்த மணிவிழா, முருகனுக்கு செய்த மணிவிழாவாகவே் நான் கருதுகின்றேன்.

இவ்வாண்டு 60ம் பருவத்தை அடைகின்றார். இவர் முருகன் அருளால் பல்லாண்டு காலம் வாழ் வாங்கு வாழ்ந்து இன்னும் பல சேவைகள் செய்ய வேண்டும் என்றும், அவரது அற வாழ்வு நீடிக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல முருகனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

*"வாழ்க மணிமாஸ்டர்"*
*வளர்க அவரது புகழ்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









“நால்வர் வழியில்
நாயகன் பணி”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் இறுதியாக கொம்பனித் தெரு முருகன் ஆலயத்திற்கு வருகை தந்த போது தர்மகர்த்தா சபைச் செயலாளர் க. பாலசுப்பிரமணியம் சுவாமிகளை வரவேற்கும் காட்சி.



மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்கள் இலங்கையின். உயர் ஸ்தானிகராக மலேசியா சென்றபோது கொம்பனித் தெரு முருகன் ஆலயத்தில் பிரியாவிடை கூட்ட வைபவத்தில் சைவ முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொம்பனித் தெரு ஸ்ரீ முருகன் ஆலயத்தில் 1993ம் ஆண்டு நடைபெற்ற இராஜ கோபுர மகா கும்பாபிஷேக வைபவத்தின் போது அறங்காவலர் க. பாலசுப்பிரமணியம் தம்பதிகட்கு பொன்னாடை சூட்டி கௌரவிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.



திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களின் 58வது பிறந்த தினத்தன்று (13.10.97) UK சைவ முன்னேற்ற சங்கத் தலைவர் தம்பதிகளை கௌரவிக்கும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1993ம் ஆண்டு நடைபெற்ற கொம்பனித்தெரு முருகன் ஆலய – இராஜகோபுர மகா கும்பாபிஷேகத்திற்கு வருகை தந்த பிரபல பாடகர் திரு. ஜேசுதாசன் அவர்களை ஆலய அறங்காவலர் சபைச் செயலாளர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள் அன்புடன் வரவேற்கும் காட்சி



சபரிமலை சாஸ்தா பீடத்தினால் நடாத்தப்பட்ட பட்டமளிப்பு வைபவத்தில் மாண்புமிகு ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களால் சைவமுன்னேற்றச் சங்கப் பொதுச் செயலாளர் க. பாலசுப்பிரமணியம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில உலக சைவப் பேரவை 6வது மகா நாட்டில் கலந்து கொண்ட க. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு பேரூர் ஆதீனத் தலைவர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் பரிசில் வழங்கும் காட்சி.



லண்டன் "சிவயோக நிலையத்தில்" பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு திரு முருகதாஸ் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் இளைஞர் கலாசார கூட்டமைப்பினால் நடத்தப்பட்ட பாராட்டு வைபவத்தில் மாண்புமிகு அமைச்சர் செ. இராசதுரை அவர்கள் திரு. க. பாலசுப்பிரமணியம். அவர்களுக்கு பொன்னாடைப் போர்த்தி கௌரவிக்கிறார்.



பிரதீப் கல்வி நிறுவனத்தினால் 05.10.99ல் நடைபெற்ற ஆங்கில தின வைபவத்தில் சைவ முன்னேற்றச் சங்க அறங்காவலர், க. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து திருவிளக்கேற்றி வைக்கிறார். அருகில் நிறுவனத்தின் அதிபர் திருமதி பிரதிப்குமார் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1997ம் ஆண்டு பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் அழைப்பை ஏற்று லண்டன் சென்றபோது க. பாலசுப்பிரமணியம் தம்பதிகளை, ஈஸ்ட்காம் முருகன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கயிலை நாகநாத சிவம் குருக்கள் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் காட்சி.



பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் 20வது ஆண்டு நிறைவுக்கு பிரதம விருந்தினராக 1997ம் ஆண்டு லண்டன் மாநகரம் சென்றபொழுது "ஹீத்துரூ" விமானநிலையத்தில் பாலசுப்பிரமணியம் தம்பதிகளை பிரித்தானிய சைவமுன்னேற்றச் சங்க அங்கத்தினர் வரவேற்கும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈன்று புரந்தந்த என்னருமைப் பெற்றோர்களுக்கு
பணிவு நிறைந்த அஞ்சலியை
உரித்தாக்குகின்றேன்.



அருமைத் தந்தை தாயார்
திரு. திருமதி க. கந்தையா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் கொ. சை. மு. ச.வின் ஆதரவில் தவத்திரு. குன்றக் குடி அடிகளார் அருளுரையாற்றுவதையும் சங்கச் செயலாளர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள் வ. இ. இராமநாதன், வே. பெரியசாமி, சு. லிங்கேஸ்வரன் ஆகியோருடன் காணப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு சைவமுன்னேற்றச் சங்க காணியில் கட்டிடம் அமைக்கும் முன்பு சிரமதான வைபவத்தில் சங்கச் செயலாளர் க. பாலசுப்பிரமணியம் சகிதம் சங்க அங்கத்தினர் மாணவர்கள் – தாய்மார்கள்.



சிவத்மிழ் செல்வி. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழா வைபவத்தில் சை. மு. ச. பொதுச் செயலாளர் க. பா. அவர்கள் முருகன் ஆலயத்தில் வரவேற்புரை ஆற்றும் காட்சி அருகில் செல்வி கோமதி சுப்பையாவையும் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவப் பெரியாரும் சங்கக் காவலரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் திரு. த. நீதிராஜா அவர்கள் மூதவை உறுப்பினராக நியமிக்கப்பட்ட சமயம் சை. மு. ச. த்தின் ஆதரவில் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் தலைமையில் கொம்பனித் தெரு முருகன் ஆலயத்தில் நடைபெற்ற பாராட்டு வைபவத்தில் சை. மு. ச. செயலாளர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள்.



சை. மு. ச. ஆண்டு விழா வைபவத்தில் நவரத்தினம் ஸ்ரோர்ஸ் அதிபர் நவரத்தினம் அவர்கள் சங்கத்திற்கு அன்பளிப்பு வழங்கும் வைபவத்தில் சை. மு. ச. செயலாளர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. வி. பாலசுப்பிரமணியம் தம்பதிகளுடன் ஆலயத்தில் சை. மு. ச. செயலாளர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள்.



கொழும்பு சைவமுன்னேற்றச் சங்க நால்வர் மணி மண்டபத்தில் சங்கத்தலைவி டாக்டர் திருமதி இந்திரா சிவயோகம் அவர்கள் உரை ஆற்றுவதையும் சங்கக் காவலர் திரு. செ. ரங்கநாதன் Q. C., உதயா செல்லத்துரை ஹரிதேவ் சகிதம் க. பாலசுப்பிரமணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு சைவமுன்னேற்றச் சங்க 'நால்வர் மணி மண்டப'த்தை சுவாமி ஹரிதாஸ் கிரி அவர்கள் பால்காய்ச்சி திறந்து வைக்கப்பட்ட வைபத்தின் போது சங்கத் தலைவி டாக்டர் இந்திரா வியோகம் அம்மையார் சகிதம் செயலாளர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள் கலந்து கொண்ட காட்சி.



கொம்பனித் தெரு முருகன் ஆலயத்திற்கு புலவர் கீரன் அவர்கள் வருகை தந்தவேளை க. பாலசுப்பிரமணியம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. க. பாலசுப்பிரமணியம் J.P. அவர்களின்
# "மணிவிழாச்சபை"
## உறுப்பினர்கள்

| | |
|---|---|
| *தலைவர்* | : திரு. திருக்குமார் நடேசன் |
| *துணைத் தலைவர்* | : திரு. தி. செந்தில்வேள் J.P<br>திரு. S.P. சாமி J.P<br>திரு. கே. கனகராஜா J.P<br>திருமதி. தர்மராணி சொல்லமுத்து J.P |
| *கௌரவ செயலாளர்* | : திரு. அ. திருநாவுக்கரசு J.P |
| *துணைச் செயலாளர்கள்* | : திரு. பி. கந்தசாமி<br>திரு. பொ. பூமிநாதன்<br>திரு. கு. நாகேந்திரன் |
| *கௌரவ பொருளாளர்* | : திரு. கா. தில்லைநாதன் J.P |
| *துணைப் பொருளாளர்கள்* | : திரு. ஆ. ஜெயானந்தன் J.P<br>திரு. எஸ். சாம்பசிவம்<br>திரு. கே. மகாலிங்கம் |
| *மலர் ஆசிரியர்கள்* | : வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் J.P<br>கம்பவாரிதி இ. ஜெயராஜ் |
| *மலர் அமைப்பு* | : திரு. பி. விமலேந்திரன் |
| *யாழ்ப்பாண பிரதிநிதி* | : கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P |
| *இலண்டன் பிரதிநிதி* | : திரு. வ. இ. இராமநாதன் |
| *மணிவிழா ஒழுங்கு* | : கொம்பனித் தெரு சைவ இளைஞர்கள் |
| *உதவியாளர்கள்* | : தமிழ் இளைஞர் கலாசார கூட்டமைப்பு கொழும்பு.<br>: இருபாலை சைவ பரிபாலன சங்கம் கொழும்புக் கிளை<br>: அப்பர் அருள்நெறி மன்றம் கொழும்பு. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்”

அனைவருக்கும் எங்கள் இதயம்
நிறைந்த நன்றி

- மணிவிழாக் குழுவினர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து சமய கலாச்சார திணைக்களத்தினால் 1993ம் ஆண்டு நடாத்தப்பட்ட அருள்நெறி விழாவில் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் க. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு "இறைபணிச் செம்மல்" என்னும் பட்டத்தை வழங்கும் காட்சி.

Printed by Unie Arts (Pvt) Ltd. 48B, Bloemendhal Road, Colombo -13. Tel: 330195.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org